மஞ்சரி

விஜய - மார்கழி
டிஸம்பர் - 1953

-6-
அணா

ஞானமில்லாத மனிதன்

ஞானத்தை அடையாத மனிதன், மரத்தினால் செய்த யானையையும் தோலினால் செய்த மானையும் போன்றவனே. பெயரளவில்தான் அவன் மனிதன்.

—மநு.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்வம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 7] விஜய—மார்கழி :: டிஸம்பர் 1953 [இதழ் 12

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

பாகிஸ்தானில் முஸ்லிம் ஒருவர் தான் ஜனாதிபதி பதவிக்கு வரலாம் என்று அரசியல் நிர்ணயச் சட்டத்தில் விதித்திருக்கிறார்கள். சிறுபான்மை வகுப்பார்கள் தங்களுக்குத் தனித் தொகுதி வேண்டாம், கூட்டுத் தொகுதியே வேண்டும் என்று சொல்லியும் அவர்களுக்குத் தனித்தொகுதியே வழங்கியிருக்கிறார்கள். இதெல்லாம் ஜனநாயகத்துக்கு விரோதம் என்று நேருவே அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். "எங்கள் ராஜ்யத்தில் நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம். நீங்கள் யார் கேட்பது?" என்று பாகிஸ்தானியர் சொல்லலாம். அது சட்ட ரீதியில் செல்லத் தக்க வாதந்தான். ஆனால், பாகிஸ்தானில் நடப்பதெல்லாம் இந்தியாவில் பதில் கிளர்ச்சி உண்டாக்கிவிடும் என்பதை நினைக்கவேண்டும்.

* * *

இதே சமயத்தில் இன்னொரு செய்தியும் வருகிறது. பாகிஸ்தானின் கவர்னர்ஜெனரல் அமெரிக்காவுக்குச் சென்று ஜனாதிபதி ஐஸன்ஹோவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். பாகிஸ்தானுக்குப் பொருளாதார உதவி செய்தால், அமெரிக்காவுக்குப் பாகிஸ்தானில் ராணுவ தளம் அமைத்துக் கொள்ள இடம் தருவதாக அப்போது பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் சொன்னாராம். அப்படி இல்லை என்று மறுப்பு வந்தாலும் இந்தச் செய்தி என்னவோ இன்னும் வலுவாகவே உலவுகிறது. வெகுநாளாகவே காஷ்மீரில் அமெரிக்கா ராணுவ தளம் அமைத்துக் கொண்டு, ஸோவியத் நாட்டுடன் போர் செய்யச் சித்தமாயிருக்கும் என்று ஒரு வதந்தி உண்டு. இது பல விதங்களில் ஆசிய நாடுகளுக்கே அபாயம். அமெரிக்காவும் சரி, பாகிஸ்தானும் சரி; இந்த மாதிரி யோசனை மட்டும் அவைகளுக்கு இருந்தால், அதை அடியோடு கைவிடுவதே நல்லது.

* * *

காலேஜ் மாணவர்களையும் பிற தொண்டர்களையும் உதவிக்கு வைத்துக் கொண்டு, சென்னைச் சமூக ஊழியர் கலாசாலை ஓர் அருமையான காரியம் செய்திருக்கிறது. சென்னையில் உள்ள பிச்சைக்காரர்களின் கணக்கு ஒன்றை அது எடுத்திருக்கிறது. சென்னையில் 7,443 பிச்சைக்காரர்

இருப்பதாக அதன்கணக்கு. ஆனால் கார்ப்பொரேஷன் மதிப்பு 12,000 பிச்சைக்காரர் தான். எந்தநேரமும் திரிந்துகொண்டே யிருக்கும் பிச்சைக்காரரின் எண்ணிக்கையைக் கணிப்பது கொஞ்சம் முன்பின்னாகத்தான் இருக்கும். கலாசாலையினர் கணக்கு எடுத்த மொத்தப் பிச்சைக்காரர்களில் 4,300 பேர் உடல் வலிவுள்ளவர்கள். மீதியில் 3,000 பேர் நோயாளிகள் அல்லது அங்கவீனர்கள். நோயாளிகளில் 211 பேர் குஷ்டரோகிகள்; 459 பேர் பைத்தியக்காரர்கள். மொத்தப் பிச்சைக்காரர்களில் 2,000 பேர் 12-வயதுக்குட்பட்ட குழந்தைகள். தேகவலிவுள்ளவர்களைக் கிராமங்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். நோயாளிகளுக்கும் அங்கவீனர்களுக்கும் ஏதாவது பரிகாரம் அளிக்கவேண்டும். குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டும். இந்த வேலையைக் கார்ப்பொரேஷன் மட்டும் செய்துவிடமுடியாது. சர்க்காரும் தனிகர்களுங்கூட இதில் பங்கு கொள்வது அவசியம்.

* * *

எகிப்து மன்னர் ஃபரூக் பட்டமிழந்ததால், 'பேப்பர் வெயிட்டு' களின் விலைவாசியில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுவிடப் போகிறதாம். 'அரசர்களே பேப்பர் வெயிட்டுகள்தானே; அவர்கள் வீழ்ச்சியடைந்தால், அவர்களைப் போன்ற வஸ்துக்களும் வீழ்ச்சியடைவது இயல்பு' என்று யாரும் நினைப்பது தவறு. ஃபரூக் மன்னர் உண்மையிலேயே விதம் விதமான எண்ணற்ற 'பேப்பர் வெயிட்டு' களைச் சேகரித்தாராம். சிறிது காலத்துக்கு முன்னே 'பேப்பர் வெயிட்டு' ரஸிகர்கள் ஒரு 'பேப்பர் வெயிட்'டுக்கு 200 முதல் 500 பவுன் வரையில்கூடக் கொடுக்கத் தயாராயிருந்தார்களாம். ஃபரூக் இப்போது தம்முடைய 'பேப்பர் வெயிட்டு'களை விற்பனைக்குக் கொண்டுவரலாம் என்று தோன்றுகிறதாம். அவை அப்படி விற்பனைக்கு வந்தால், 'பேப்பர் வெயிட்டு' களின் விலைவாசி நிலை அதோகதிதான்! ஆனால், ஈயக்குண்டையோ, கல்லையோ, ப்ளாக் அடித்த கட்டையையோ 'பேப்பர் வெயிட்' டாக உபயோகிக்கும் பத்திராசிரியர்களுக்கு இந்தப் 'பேப்பர் வெயிட்டு' மார்க்கெட்டைப் பற்றிக் கவலையே இல்லை.

புயலிலே தமாஷ்

பெரும் புயல் ஒன்று அடித்து நின்றது. அண்டை வீட்டுக்காரர்கள் இரண்டு பேர் கடை வீதியிலே சந்தித்தார்கள்.

"என் வீடு எப்படி இருக்கிறது? ஏதாவது பார்த்தீர்களோ?" என்றார் ஒருவர்.

"உங்கள் வீடு என்ன நிறம்?"

"வெள்ளை நிறம்."

"வெள்ளை நிறமாக ஏதோ இரண்டு மூன்று அந்தப் பக்கம் பறந்து போயின. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்."

—ஜி. எம். கேவ்

கள்ள நாணயக் கும்பல்

★

உலகெங்குமே வியாபித்திருக்கும் கள்ள நாணயக் கும்பலை ஒழிக்கப் பல நாடுகளின் போலீஸ் அமைப்பு ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றிய இது 'பாப்புலர் ஸயின்ஸ்' பத்திரிகையில் ஃபில் கஸ்டாஃப்ஸன் என்பவர் எழுதியுள்ளதை ஆதாரமாகக் கொண்டது.

இரண்டாவது யுத்தக் கடைசி நாட்களில் வி-2 வாணக் குண்டை விடப் பெரிய அபாயம் ஒன்றை இங்கிலாந்து மீது ஏவி விட ஹிட்லர் ஏற்பாடு செய்திருந்தார். பிரிட்டனின் கரன்ஸியைப் போன்ற ஏராளமான போலி நோட்டுகளை அச்சடித்து, பாரசூட் மூலம் பிரிட்டிஷ் நகரத் தெருக்களிலெல்லாம் பொழிந்து விட வேண்டும் என்பதுதான் அந்த ஏற்பாடு. ஆனால், அது நிறைவேறுவதற்கு முன்பு, விமானப் போரில் ஜெர்மனி சளைத்துப் போயிற்று. ஹிட்லரின் யுக்தி பலித்திருந்தால், பிரிட்டிஷ் தெருவெல்லாம் கிடக்கும் போலி நாணயங்களை மக்கள் பொறுக்கிக் கொண்டிருப்பார்கள். அவற்றை வைத்துக்கொண்டு, கடைகளை அவர்கள் மொய்த்திருப்பார்கள். வியாபாரமே சீர்குலைந்து போயிருக்கும். பிரிட்டனைப் பிடித்த நல்ல காலம், ஹிட்லரின் உத்தேசம் பலிக்கவில்லை.

ஆனால், இந்த விஷயத்தைப் பற்றிப் பாங்கர்களும் சர்க்கார்களும் இப்போது நினைக்கும்போது, அவ்வளவாக அஞ்சாமல் சந்தோஷம் அடைந்திருக்கிறார்கள். ஏனென்றால், கள்ள நாணயம் போடுகிறவரைப் பிடிக்க உலகெங்குமே இன்று ரகஸ்யப் போலீஸ் ஏற்பட்டிருக்கிறது. 'இன்டர்நேஷனல் க்ரிமினல் போலீஸ் கமிஷன்' என்று இதற்குப் பெயர். 'இன்டர்போல்' என்று இதைச் சுருக்கிக் குறிப்பிடுகிறார்கள். 48 நாடுகளின் போலீஸ் இலாக்காக்கள் இதில் இணைந்து வேலை செய்கின்றன. அவைகளுள் பிரிட்டனின் ஸ்காட்லண்டுயார்டு, ரோம் நாட்டு க்வெஸ்டுரா, ஐக்கிய அமெரிக்காவின் ட்ரெஷரி டிபார்ட்மெண்ட் இவைகளும், ஏதென்ஸ், இஸ்தான்புல், ஸிட்னி, ஜோஹான்னஸ்பர்க், ரங்கூன் முதலிய பல தலைநகரங்களில் உள்ள பல நாட்டுப் போலீஸ் தலைமைக் காரியாலயங்களும் அடங்கும். கம்யூனிஸ்ட் நாடுகளில் உள்ள பாங்கர்களுங்கூட இந்த 'இன்டர்போல்' ஸ்தாபனத்துடன் ஒத்துழைக்கிறார்கள்.

எவனாவது ஒருவன் கள்ள நாணயம் போடுவதன் மூலம் ஏராளமான பொருள் சம்பாதித்துக்கொண்டு, எங்கேயாவது கண்காணாத தீவில் போய்க் குஷியாக வாழலாம் என்று நினைத்தால், அது இன்று முடியாது. அவன் புறப்பட்டவுடனே, அந்தச்

செய்தியை ரேடியோ, டெலிடைப், டெலிஃபோன், விமானத் தபால் இவைகளின் மூலம் 48 நாடுகளுக்கு அனுப்பி விடுகிறார்கள். அவன் எந்த நாட்டில் போய் இறங்கினாலும், உடனே ரகஸ்யப் போலீஸ்காரன் ஒருவன் அநேகமாக அவனைப் பின்தொடர்வான்.

இந்த 'இன்டர்போல்' ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம், பாரிஸ் நகரில் பிரெஞ்சு உள்நாட்டு மந்திரி காரியாலயத்தில் இருக்கிறது. கள்ள நாணயங்களைக் கண்டு பிடிக்கும் 15 நிபுணர்கள் இங்கே வேலை செய்கிறார்கள். போர்ச்சுகல் எஸ்குடோ, பிரேஜில் க்ருஸீரோ, மெக்ஸிகோ பெஸாஸ், ஈரான் ரையால், ஈராக் டினார், பாகிஸ்தான் ரூபாய் இப்படிப் பல நாடுகளின் அநேக விதமான கள்ள நாணய ரெக்கார்டுகள் இந்தக் காரியாலயத்தில் இருக்கின்றன. 'ஸாம்பிள்' நாணயங்கள் சுமார் எண்ணூறு வரைக்கும் இங்கே வைத்திருக்கிறார்கள். ஐக்கிய அமெரிக்கக் கள்ள டாலர் நோட்டுகள் மட்டும் 335 விதம் இங்கே இருக்கின்றன.

எந்த நாட்டிலாவது புதிதாகக் கள்ள நாணயம் ஒன்று தோன்றினால், உடனே அதன் ஃபோட்டோ, வர்ணனை, வழக்கு விவரம் இவைகளையெல்லாம் அச்சிட்டு, வெகு விரைவாக உலகெங்குமுள்ள பல நாட்டுப் போலீஸ் இலாக்காக்களுக்கும் பாங்குகளுக்கும் பாரிஸ் காரியாலயத்தார் அனுப்பி விடுகிறார்கள். இப்படி இந்தக் காரியாலயத்தில் தயாரான எல்லாத் தாள்களிலும் ஒவ்வொன்றை எடுத்துப் புஸ்தகமாகப் பைண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். அது பெரிய வெப்ஸ்டர் டிக்ஷனரி மாதிரி பருமனாக இருக்கிறது.

பல நாடுகளிலும் இன்று வழங்கும் சரியான நாணயங்களின் ஃபோட்டோக்களும் வர்ணனைகளும் அடங்கிய மற்றொரு புஸ்தகத்தையும் இதே போல இங்கே தயார் செய்து வைத்திருக்கிறார்கள்.

நாற்பத்தெட்டு அங்க நாடுகளிலும் 1926 முதல் இன்று வரை நடந்திருக்கும் கள்ள நாணய வழக்குகள் அத்தனையையும், அவற்றில் சம்பந்தப்பட்ட ஆசாமிகள் அனைவரையும்பற்றிய வரலாறுகளையும் இங்கே சேகரித்து வைத்திருக்கிறார்கள்.

கள்ள நாணயம் போட்ட ஒருவனை ஒரு நாட்டுப் போலீஸார் கைது செய்தவுடனே, மீதி 47 நாடுகளுக்கும் டெலிடைப் மூலம் செய்தி அனுப்புகிறார்கள். பிறகு, போட்டோக்கள், விரலடையாளங்கள், பிற தகவல்களை யெல்லாம் அச்சிட்டு அனுப்புகிறார்கள். எந்த நாட்டில் அவன்மீது மிகவும் பலமான வழக்குத் தொடர ஆதாரங்கள் இருக்கின்றனவோ அங்கே அதைத் தொடக்கிறார்கள்.

இங்கே சில உதாரணங்களைப் பார்க்கலாம்: போலந்து நாட்டைச் சேர்ந்த காமான் என்ற 60 வயதுக் கிழவன் ஒருவன் இருக்கிறான். இவன் 20 வருஷங்களாகப் பல நாடுகளில் ஆறுவிதப் பெயர்களைச் சூட்டிக்கொண்டு பொய்ப் 'பாஸ் போர்ட்'டுகளைக் காட்டி நுழைந்து கள்ள நாணய வியாபாரம் செய்து வந்திருக்கிறான். 10 டாலர் நோட்டு அடிக்கும் அச்சு யந்திரம் ஒன்றை அகதிகள் முகாம் அருகே இவன் வைத்திருப்பதை மேற்கு

ஜெர்மன் போலீஸார் சமீபத்தில் கண்டு பிடித்தார்கள். இவனைப் பற்றிய விவரத்தைப் பல நாடுகளுக்கும் அனுப்பியதில், பாரிஸ் நகரில்தான் இவன்மீது கடுமையான வழக்குத் தொடர ஆதாரம் கிடைத்தது. அங்கே ஃபெர்னண்டோ ஓர்டாஸ் என்ற பொய்ப் பெயருடன் இரண்டு வருஷத்துக்கு முன் யாருடைய நகைகளையோ இவன் வழிப்பறி செய்தானும். ஜெர்மனியில் இவன் மீது வழக்குத் தொடராமல் விட்டு விட்டார்கள். பிரெஞ்சுக் கோர்ட்டில் நகைக் கொள்ளைக்காக இவனைத் தண்டித்துச் சில வருஷம் வரையில் இவன் வெளியே புழங்காதபடி சிறைப்படுத்திவிட்டார்கள்.

கள்ள நாணய ஆசாமிகள் இரண்டு பேர் வாஷிங்டன் நகரிலிருந்து விமானத்தில் கிளம்பினார்கள். உடனே அங்கிருந்து பல நாடுகளுக்குச் செய்தி பறந்தது. 'ஸினிமா படம் தயாரிக்கும் கருவிகளை வாங்குவதற்காகக் கள்ள டாலர் நோட்டுகளை உபயோகிக்கும் ஆசாமிகள் இரண்டு பேர் வருவார்கள்; கவனியுங்கள்' என்பதுதான் செய்தி. ஒரு மாதத்தில் இரண்டு ஆசாமிகளும் அகப்பட்டுக் கொண்டார்கள். இருவரில் ஒருவன் பெர்ஸி லீன். பலாத்காரமாய்க் கற்பழித்தது, சூதாடியது, அடிதடியில் இறங்கியது, மோசடி செய்தது இப்படிப் பட்ட குற்றங்களுக்காக அவன் பதின்மூன்று முறை தண்டனை அடைந்தவன். இங்கிலாந்து, தென்னப்பிரிக்கா இரண்டிலும், அவன்மீது பலமான வழக்குத் தொடர ஆதாரங்கள் கிடைத்தன. மற்றவன் ரேமாண்ட் பாஸெட். மோட்டார்க் கார்களைத் திருடியதற்காக அவன்மீது வழக்குத் தொடரவேண்டி அவனை ஆஸ்திரேலிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்கள்.

1948-ஆம் வருஷத்திலிருந்து 40 சதவிகிதம் கள்ள நாணய வழக்குகள் குறைந்திருக்கின்றன. ஆயினும், இன்னமும் வருஷம் ஒன்றுக்குச் சுமார் 500 கள்ள நாணய வழக்குகளை 'இன்டர்போல்' நிபுணர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது.

கள்ள நாணயம் தயாரிப்பதில் கை தேர்ந்த ஸேல் ஸொமடாஃப் என்ற போலந்துக்காரன் ஒருவன் இருக்கிறான். 1895-இல் பிறந்தவன். யுத்தத்துக்கு முன் இவன் அநேகம் கள்ள நாணயங்களைத் தயாரித்த வரலாறு இருக்கிறது. யுத்தத்துக்குப் பின் அப்படி இவன் மீது ஒரு வழக்கும் ஏற்படவில்லை. ஆயினும், இவனை 'இன்டர்போல்' உளவர்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போது இவன் உருகுவே நாட்டில் வசித்து வருகிறான்.

இரண்டாவது யுத்தகாலத்தில், ஸாச்ஸென்ஹாஸென் என்னும் இடத்தில் கைதிகள் முகாம் (கான்ஸென்ட்ரேஷன் காம்ப்) ஒன்றை நாஜிகள் வைத்திருந்தார்கள். அங்கே 140 கைதிகளைக் கொண்ட கள்ள நாணய அச்சுக்களை நாஜிகள் தயாரித்தார்கள். அப்படித் தயாரிப்பவர்களின் தலைவனாகப் பதவி வகித்தவன் இந்த ஸொமடாஃப். தத்ரூபமான ஐந்து, பத்து, ஐம்பது பவுன் நோட்டுகளை நாஜிகள் தலைவன் ஹிம்லர் தயாரிக்க முடிந்தது இந்தக் கைதிகளைக் கொண்டுதான்.

அதற்கு முன், ஜெர்மன் சர்க்கார் 'என்கிரேவர்'களைக் கொண்டு கள்ள நாணய அச்சுத் தயாரிக்க முயன்றதெல்லாம் பலிக்கவில்லை. 1944 தொடங்கி 1945 முதற் பகுதி வரையில் இரண்டு ஷிஃப்டு வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஷிஃப்டும் பன்னிரண்டு மணிநேரம் உழைத்து, முகாம் கைதிகள் 80 முதல் 90 லட்சம் கள்ள நோட்டு கள் வரையில் தயாரித்து விட்டார்கள். அவைகளில் 30 லட்சம் நோட்டுகளின் வகையைக் கள்ள நோட்டுகளா இல்லையா என்று இங்கிலாந்து பாங்கியாலேயே சொல்ல முடியவில்லை; அவை அவ்வளவு தத்ரூபமாக இருந்தன. ஆனல் நாஜிகளின் கஷ்ட காலம் நெருங்கிவிட்டது. 1945 வசந்த காலத்தில் அமெரிக்கத் துருப்பு கள் புகுந்து அவர்களை வளைத்துக் கொண்டன. கள்ள நாணயங் களையெல்லாம் புதைத்தோ எரித்தோ ஆற்றில் எறிந்தோ அழித்துவிடும்படி உத்தரவு போட்டான் ஹிம்லர். இந்த நாணயங்களைத் தயாரித்த 140 கைதிகளையும் கொன்று விடும்படி யும் அவன் கட்டளையிட்டான். கைதிகளின் அதிருஷ்ட வசத்தி ஞல் நேர்ந்த ஏதோ பிசகினுல், அவர்களைக் கொல்வதற்குப் பதி லாக விடுதலைசெய்துவிட்டார்கள்.

ஸொமடாஃப் முதலில் கள்ள டாலர்கள்தான் தயாரித்தான். அவை துளியும் சந்தேகிக்க முடி யாதபடி அசலைப் போல் இருந்தன. ஸாச்ஸென்ஹாஸென் டாலர்கள் இன்றும் ஐரோப்பாவில் புழங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. இதுவரை அவற்றில் சுமார் 3,000 அகப்பட்டிருக்கின்றன. அசல் பவுன் நோட்டுகளைப் போன்ற முப்பது லட்சம் நோட்டு களில் 16 லட்சந்தான் அகப்பட் டன. மீதி 14 லட்சம் நோட்டுகள் என்ன ஆயினவோ, தெரியவில்லை. அவற்றில் பெரும்பாலானவை அழிந்து போயிருக்கலாம். ஆனல், உலகத்தின் ஏதாவது ஒரு பகுதி யில் இந்த 'ஸாச்ஸென்ஹாஸென்' கள்ள நோட்டுகள் தலை நீட்டிக் கொண்டேயிருக்கின்றன.

ஏராளமான இந்தக் கள்ள நோட்டுகளைச் செய்த கும்பல்மீது 'இன்டர்போல்' நிபுணர்கள் ஒரு கண் வைத்துத்தான் வருகிறார் கள். இந்தக் கும்பல் மீண்டும் எங்கேயாவது பழைய வேலையைத் தொடங்கிவிடுமோ என்று அவர் கள் அஞ்சவில்லை. ஆயினும் அவர் களுடைய கடமை எதற்கும் எச் சரிக்கையாயிருப்பதுதானே?

"ஆமாம், பிரசார யுத்தத்திலோ நேரடியான யுத்தத்திலோ கள்ள நாணயங்களை எந்த நாடாவது ஆயுதமாக உபயோகித்தால், நீங் கள் என்ன செய்வீர்கள்?" என்று 'இன்டர்போல்' நிபுணர்களைக் கேட்டால், அவர்கள் புன்சிரிப் புடன் தலையை அசைத்து, "இன்டர்போல் என்பது ஒரு போலீஸ் ஸ்தாபனம்; அவ்வளவு தான். அரசியல் விவகாரங்களில் அது தலையிடாது. ஆனல், இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் அடையும் அநுபவமும், கைக் கொள்ளும் முறைகளும் அத் தகைய சமயங்களில் தற்காப்புக்கு உதவும். எட்டு வருஷத்துக்கு முன் ஹிட்லரும் ஹிம்லரும் கள்ள நாணயங்களை வெளியிட்ட போதிருந்த நிலைமையைவிட இப்போது நமது நிலைமை மேல் தான்" என்கிறார்கள்.

[இதோ சில கேள்விகள்: எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். 78-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

(1) தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மைசூர் இந்த மூன்று நகரங்களுக்குள் எது மிகவும் வடக்கே இருப்பது? எது மிகவும் தெற்கே இருப்பது? எது நடுவே இருப்பது?

(2) ஒரு ரீமில் பெரும்பாலும் வழக்கமாக எத்தனை காகிதங்கள் இருக்கும்?

(3) தென்னமெரிக்காவிலே மிகப் பெரிய நாடு எது என்று உங்களால் சொல்ல முடியுமா?

(4) காவேரி நதியின் மொத்த நீளம் 603 மைல்; 405 மைல்; 475 மைல்—இந்த மூன்றில் எது சரி?

(5) கொரியாவின் வடக்கு எல்லையில் உள்ள நாட்டுக்குப் பெயர் என்ன?

(6) இதோ இருக்கும் எண்கள் இந்திய வான சாஸ்திர சம்பந்தமானவை; வராஹமிகிரரின் ஓர் அபிப்பிராயத்தைக் குறிப்பவை: 3, 3, 6, 5, 3, 1, 5, 3, 6, 5, 8, 15, 5, 1, 1, 5, 4, 3, 11, 2, 8, 3, 5, 100, 15, 8, 32. இவை குறிப்பது என்ன?

(7) ட்வைட் ஐஸன்ஹோவருக்கு முன்பு கடைசியாக ரிப்பப்ளிக்கன் கட்சி ஜனாதிபதியாக இருந்தவர் (அ) பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட், (ஆ) ஹெர்பர்ட் ஹூவர், (இ) வுட்ரோ வில்ஸன் இந்த மூவரில் யார்?

(8) ந்யாஸாலாண்டு என்ற நாட்டின் தலைநகர் (அ) லுஸாகா, (ஆ) ஸொம்பா, (இ) அக்ரா—இவைகளில் எது?

(9) விக்டோரியா மகாராணி எந்த வருஷத்தில் பட்டத்துக்கு வந்தாள்?

(10) இதோ ஓர் அறையில் 12 குரங்குகள் இருக்கின்றன; இவைகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிடும் அமளி சகிக்கவில்லை. குரங்குகளை இடம் விட்டு நகர்த்த முடியாது. இருக்கிறபடியே நேர்க் கோட்டுச் சுவர்களால் இந்த அறையை நான்கு பகுதிகளாகப் பிரிக்க வேண்டும்; ஒவ்வொரு பகுதியிலும் மூன்று குரங்குகள் இருக்க வேண்டும். கோடுகளை இழுங்கள், பார்க்கலாம்.



இனி வரும் மனித இனம்

லிட்டன் சித்திரம்

மக்களெல்லாம் இன்புற்று வாழ எத்தனையோ அறிஞர் கற்பனை உலகங்களைச் சித்திரித்திருக்கிறார்கள். ஒன்று இது. இந்தக் கட்டுரை வரிசையை எழுதி வருகிறவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

லிட்டன் பிரபு (1803-1873) ஒரு நாவலாசிரியர்; ஓர் அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார். சுமார் அறுபது நூல்களுக்கு மேல் அவர் எழுதியிருக்கிறார். 'பாம்பே நகரத்தின் இறுதி நாட்கள்' (Last days of Pompeii), 'ரீன்சி' (Rienzi) முதலிய நாவல்களை நாம் படித்து இன்புற்றிருக்கிறோம். நாவல்கள் அவருடைய சாமர்த்தியத்தைக் காட்டி நம்மை மயக்குகின்றன. ஆனால் மலையும் ஆறும் போல விளங்குகிற இயற்கையான உண்மைத் தத்துவங்கள், அவைகளில் கோயில் கொள்ளவில்லை.

'இனி வரும் மனித இனம்' அவர் சித்திரித்த கற்பனை உலகமாகும். வெல்ஸ் எழுதிய 'இனி வரும் பொருள்களின் உரு' (The shape of things to come) என்ற நாவலின் சுருதியில் இந்தக் கற்பனைக் கதையும் செல்லுகிறது.

இந்த நாவலில் அணுக்குண்டின் ஆற்றலை லிட்டன் சித்திரிக்கிறார். இது 1870-ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்போது இதைப் படித்த மாந்தர்கள் இது ஏதோ ஒரு பைத்தியக்காரனின் மனத்தில் தோன்றிய பிரமையே என்று கருதியிருக்கக் கூடும். ஆனால் அணுக்குண்டின் சக்தியை உலகம் கண்டு அஞ்சி அதைப்பற்றியே புலம்புகிற நிலை இப்போது வந்துவிட்டது.

முதல் முதலில் அமெரிக்கன் அணுக்குண்டுதான் நாகசாகி, ஹிரோஷிமா என்ற ஊர்களை அழித்து அவைகளை ஒரு பெரும் பாலைவனம் ஆக்கிவிட்டது. இந்த நாவலில், அணுக்குண்டால் உலகம் அழிந்து விடும் என்று ஓர் அமெரிக்கனே உலகத்துக்கு எச்சரிக்கை செய்கிறான். எத்தகைய விபரீத ரசம் (Irony) இந்த நாவலில் ததும்பி ஓடுகிறது, பாருங்கள்! மேலும், இந்த அணுக்குண்டின் சக்தியை உணர்ந்து இதை வழங்கக்கூடிய மனிதர்கள் பூமிக்கடியில் இருக்கிறார்களாம். அவர்கள் செக்கர் இந்தியர்களை நிகர்த்தவராம். உடல் வடிவிலும், தோற்றத்திலும் அமெரிக்க நாட்டவர்களைவிடச் சாலச் சிறந்தவர்களாம். செக்கர் இந்தியர்களை அழித்தவர்கள் இந்த அமெரிக்கர்கள்தான் என்ற சரித்திரம் நம் நினைவுக்கு வருமானால், இந்த நாவலின் விபரீத ரசத்தை நாம் நன்கு நுகர முடியும்.

முதல் முதல் ஓர் அமெரிக்க யாத்திரிகன் இந்த அமானுஷ்ய

மான சாதியாரைக் கண்டவுடன் இவர்களோடு போராட எண்ணுகிருன். இவர்கள் இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறப்பார்கள். ஜன்னல்கள் வழியாகப் பறந்து விண்ணில் நடனம் புரிவார்கள். இந்த இறக்கை கட்டிய மனிதர்களைத் துரத்திச் செல்லுகிருன் அந்த அமெரிக்க யாத்திரிகன். இவர்கள் நாட்டுக்கு அவன் போனதும் தூக்க மந்திர வலையில் சிக்குண்டு கிடக்கிருன். பல வாரங்கள் இந்த நிலையில் கண் வளர்கிருன். அவன் துயிலை இவர்கள் கலைத்தவுடனே மந்திர சக்தியால் அந்த அமெரிக்க யாத்திரிகனின். மொழியை இவர்கள் கற்றுக்கொண்டதாகத் தெரிகிறது; தங்கள் மொழியையும் அவனுக்கு இவர்கள் சொல்லித் தருகிருர்கள். ஆனல் அமெரிக்க நாட்டைப்பற்றி ஒரு விஷயங்கூட அவன் தெரிவிக்கக் கூடாது. அந்த அநாகரிக நாட்டைப் பற்றித் தாங்கள் தெரிந்துகொண்டால், தங்கள் நாட்டின் தூய்மை மாசுறும் என்று இவர்கள் கருதுகிருர்கள். 'ஹொய்ஹின்ஹின்கும்ஸ்' (Houyhnhnms) என்ற குதிரை நாட்டுக்குக் 'கலிவர்' (Gulliver) வருகிருன். அந்த நாட்டிலுள்ள குதிரைகள் 'யாகூ' என்ற மனித வர்க்கத்தைவிட அறிவிலும் ஆற்றலிலும் அன்பிலும் சிறந்தனவாம். அந்தக் குதிரைகள் எப்படி 'யாகூ' என்ற மனித இனத்தை இழிவாக நடத்தினவோ அப்படியே இந்த அமானுஷ்யமான மாந்தர்களும் அமெரிக்கர்களைத் 'தூ' என்று தள்ளினர்கள்.

இந்த அமானுஷ்யமான மாந்தர்களின் மொழியைக் கற்றுக் கொண்ட அந்த அமெரிக்கன், இவர்களுடைய நாகரிகத்தைத் துருவி ஆராய்கிருன். 'விரில்' (Vril) என்ற அணுக்குண்டை இவர்கள் உபயோகப்படுத்துகிற செய்தியை அவன் உணர்கிருன். அந்த அணுக்குண்டுச் சக்தியால் சீதோஷ்ண நிலையை மாற்ற முடியும். மனித உள்ளத்தை எந்த விதத்திலும் அமைக்கக் கூடும். ஒரு மின்னற் பொழுதில் உலகத்தை அழித்துவிடலாம். பள்ளங்களை மேடாக்கலாம். மலைகளைப் பிளந்து பள்ளத்தாக்குகளை எழுப்பக் கூடும். அந்த அணுக்குண்டுச் சக்தியிலிருந்து தங்களுக்கு வேண்டிய ஒளிபரப்பும் சாதனங்களை இந்த மாந்தர்கள் பெறுகிருர்கள்.

அந்த அணுக்குண்டுச் சக்தியைக் கொண்டு மனிதனுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடிக் கொள்ளலாமன்ருே? பாலைவனத்தை ஆறுகள் பாயும் கழனிகளாகச் சமைக்கலாம். சகாரா பாலைவனம் செழித்தோங்கிளுல் உலக வறுமைப் பிணி அகலுமன்ருே? பௌதிகத்தால் எழுந்த ஆச்சரியமான விளைவுகளை மனிதனின் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொண்டால், இவ்வையகம் வைகுந்தமாய்த் திகழக் கூடும். பூமிக்கடியிலுள்ள எல்லா நாட்டினர்களிடத்திலும் அந்த அணுக்குண்டுப் பிரயோகமில்லை. 'விரில்யா' (Vrilya) என்ற நாகரிகம் படைத்த சாதியாரிடமே இந்தச் சக்தி இருக்கிறது. இந்த நாகரிகம் படைத்த சாதியாரின் அரசாங்கத்துக்கே அந்த அணுக்குண்டு உரியதன்று. அந்த நாட்டில் ஒவ்வொரு மனிதனும் அந்தக் குண்டு மருந்தைத் தன் குழலில்

தாங்கிச் செல்வான். இத்தகைய சக்தி தோன்றியதால், அரசாங்கமே தேவையில்லாது போயிற்று. மக்கள் ஒவ்வொருவரிடமும் அந்தச் சக்தி இருக்கிற காரணத்தால் ஒருவர்மீது மற்றொருவர் இந்தக் குண்டை வீசுகிறதில்லை. இதை ஒரு குழந்தை தொட்டால் போதும்; கோடிக்கணக்கான ஜனங்கள் இறந்துவிடுவார்கள்.

இந்த நாட்டில் 12,000 குடும்பங்கள்தான். ஒவ்வோர் இனமும் தனக்கு வேண்டிய நிலத்தில் தங்கும். செளகரியங்களுக்குக் குறைவே இல்லை. ஒருவன்தான் ஆண்டு வந்தான். தேர்தல் மூலம் அவன் பதவி பெறுவான். அப்படிப் பதவி பெறும் அதிகாரிக்கு டர் (Tur) என்று பெயர்.

அவனுக்கு அறிவாளிகள் நிரம்பிய சபை உதவி புரியும். இவர்களுக்கு அரசாங்கத்தை நடத்தவும் பெளதிக சாஸ்திரத்தை வளர்ப்பதுமே தொழிலாகும். அந்த அதிகாரி தன் ஆயுள் வரையில் தன் அதிகாரத்தைச் செலுத்தலாம். ஆனால் மூப்பு வந்தவுடன் அதிகாரத்தை நடத்த வேண்டிய ஊக்கம் அந்த நாட்டில் இல்லாமையால் அவனே அந்தப் பதவியை விட்டுவிடுவான். அதிகாரத்துக்கேற்பப் பட்டமோ, கெளரவமோ இல்லை. அவனுக்கான தனி ஊதியமோ, தனி அரண்மனையோ இல்லை. செய்ய வேண்டிய வேலையோ அநேகமாய் ஒன்றுமில்லை என்று சொல்லிவிடலாம். போர் வருமே என்ற அச்சம் அந்த நாட்டில் இல்லாத காரணத்தால் சேனைகள் இல்லை. போலீஸ் இலாக்கா தேவையில்லை. கொலை, குத்து, வெட்டு முதலிய குற்றங்கள் அந்த நாட்டில் இல்லை. இத்தகைய குற்றங்கள் இல்லாத காரணத்தால் கிரிமினல் கோர்ட்டுகளும் இல்லை; எவையேனும் சிவில் வியாஜ்ஜியங்கள் நிகழுமாயின், கட்சிக்காரர்கள் தேர்ந்தெடுத்த நண்பர்களே அவைகளைத் தீர்த்து வைப்பார்கள்; அல்லது அந்த நாட்டின் அறிவாளிகளின் சங்கங்கள் அவைகளுக்கு ஒரு முடிவை அளிக்கும்.

அந்த நாட்டுச் சட்டதிட்டங்களை வணங்குவது அந்த நாட்டினரின் இயல்பாகவே போய்விட்டது. பணம், சொத்து இவைகள் அந்த நாட்டை விட்டு அகலவில்லை. பணம் படைத்தவர்களுக்காகத் தனிக் கெளரவம் அந்த நாட்டில் இல்லை.

பூமியின் அடியில் வாழும் அந்த ஏன (Ano) மக்களிடம் வறுமை இல்லை; கொலை களவு முதலிய குற்றங்களும் இல்லை. ஆனால், சொத்துப் பொதுவில் இல்லை. சொத்தினால் ஒரு தனிப் பெருமை இல்லாத காரணத்தால் அவரவர் தம் தம் விருப்பத்துக்கிணங்கத் தம் தம் தொழிலை நடத்தி வந்தார்கள். அழுக்காறு என்பதே அங்கே தோன்றவில்லை; போட்டியில்லை. ஜனத்தொகைக்கும் ஒரு வரம்பு வகுத்துவிட்டார்கள். அதனால் குடும்பங்கள் துயர் அடைவதில்லை. சிலர் பணக்காரரானார்கள். ஆனால் யாரும் முழு ஏழையாகவில்லை. அப்படி யாராவது ஏழையாய்ப் போனால் பணக்காரரின் உதவியை நாணமின்றி நாடலாம். எல்லோரும் அந்த நாட்டில் ஒரு குடும்பத்தில் பழகும் உடன் பிறந்தோர்கள்போல நடந்துகொண்டார்கள்.

விக்டோரியா அரசாண்ட காலத்தில், பெண்கள் அறிவில் சிறந்தவர்கள் என்ற தப்பான

அபிப்பிராயம் உலவிற்று. அவ்வித மின்றிப் பெண்கள் அறிவில் தாழ்ந்தவர்கள் அல்ல என்பதைக் காட்டத் தம் கற்பனை உலகத்தில் முயன்றிருக்கிறார் விட்டன். ஒளிச் சகாயம் சரிவர எல்லோருக்கும் கிடைக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அந்நியப் பிரதேசங்களில் எத்தகைய புதிய கருவிகளை உண்டுபண்ணி யிருக்கிறார்கள் என்பதையும் விசாரிக்க வேண்டும். ஓர் இலாக்காவில் புதிய கருவிகளைப் பரீட்சை செய்து வெள்ளோட்டம் பார்ப்பார்கள்.

யந்திரங்களின் இலாக்காவை அறிவாளிக் கல்லூரிகள்தான் (The College of Sages) கவனித்து வந்தன. கைம் பெண்கள், மலடிகள், கன்னியாப் பெண்கள் இவர்கள்தான் பௌதிக சாஸ்திரச் சர்ச்சைகள் நடத்தி வந்தார்கள். 'டர்' என்ற அந்த நாட்டுத் தலைவனுக்கு மனக் குழப்பம் ஏற்படுமானால், இந்த அறிவாளிக் கல்லூரிகளிலிருந்து மூன்று கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுத்துத் தன் குழப்பத்தை அகற்றிக்கொள்ளுவான்.

வேலை எப்படி அந்த நாட்டில் நடைபெறுகிறது என்று ஒருவர் வினவலாம். யந்திரங்களே மனிதனின் அலுவல்களைச் செய்கின்றன. அயர்வைக் கொடுக்கக் கூடியவையும் அருவருப்பை அளிக்கக்கூடியவையும் அபாயத்தைத் தரக்கூடியவையுமான தொழில்களை அந்த நாட்டுச் சிறுவர்கள் கவனித்து வந்தார்கள்.

ஃபோரியர் (Fourier) சித்திரித்த நாட்டிலும் குழந்தைக் குழுக்களுண்டு. அவர்கள் விடியற் காலையில் மூன்று மணிக்கே எழுந்துவிடுவார்கள். குதிரை லாயங்களை இந்தச் சிறுவர்கள் சுத்தம் செய்வார்கள். பிராணிகளைக் கவனிப்பார்கள். ராஜ வீதிகளையும் ஒழுங்கு பார்ப்பார்கள். பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் அங்கே நெளியாவண்ணம் கவனிப்பதும் அவர்கள் பணியே.

விட்டன் எழுப்பிய கற்பனை உலகத்திலும் சிறுவர் குழுக்கள் தம் வேலைகளில் ஈடுபடுகின்றன. இத்தகைய தொழில்கள் மட்டுமல்ல; இவைகளுக்கு மேலும் சிறுவர்கள் புரிகின்றனர். வயது முதிர்ந்தவர்களைவிட இவர்கள் அதிகச் சுறுசுறுப்பானவர்கள் அல்லவா? வேலைகள் கடினமான வேலைகளல்ல. எல்லாம் யந்திரங்களே செய்துவிடும்.

அகத்திலுஞ் சரி, புறத்திலுஞ் சரி; யந்திரங்கள்தான் இடையறாது தொழில்களை நடத்துகின்றன. தொழிலாளிகள், வேலையாட்கள் என்ற சாதி அந்த நாட்டில் இல்லை. எல்லாத் தொழில்களையும் அந்த நாட்டுச் சிறுவர்கள் நடத்துகிறார்கள். அந்த நாட்டில் பெண்களைக் கையி (Gyei) என்றழைப்பார்கள். அவர்கள் கல்யாணமாகிறவரையில், அதாவது பதினாறும் பிராயம் வரையில் யந்திரசாலைகளில் உழைப்பார்கள். ஏன (Ano) என்றழைக்கப் பெறும் ஆடவர்கள் இருபதாம் பிராயம் வரையில் தொழில்களில் அமர்வார்கள். பெண்களுக்குப் பதினாறும் பிராயத்திலும், ஆண்களுக்கு இருபதாம் பிராயத்திலும் திருமணம் நடக்கும் என்பது இதனால் தெரிகிறது. சிறுவர்கள் தங்களைப் பல குழுக்களாகப் பிரித்துக்கொள்ளுவார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு சிறுவர் தலைவன் உண்டு. ஒவ்வொரு சிறுவனும் தான் விரும்பும் தொழிலை

மேற்கொள்ளுவான். கைத்தொழிலைச் சில சிறுவர் நடத்துவார்கள். வேளாண்மையை வேறு சிலர் கவனிப்பார்கள். மற்றுஞ் சிலர் வீட்டுக் காரியங்களில் ஈடுபடுவார்கள். இன்னும் சிலர் வரும் அபாயங்களை அறிவிப்பார்கள். புயற்காற்று, நெருப்பு, நீர் இவைகளால் அவர்களுக்கு ஆபத்து நேரிடக்கூடும். வரும் ஆபத்தைத் தந்தி மூலம் தெரிவிப்பார்கள். தங்களுக்கு விரோதமான பூச்சி, புழு, விஷ ஜந்து இவைகளைச் சிறுவர்கள் அழிக்க முயலுவார்கள்.

பெண்களின் நிலை ஆராயத் தகுந்தது. பூமிக்கடியிலுள்ள நாட்டில் வாழும் பெண்கள் ஆடவர்களைக்காட்டிலும், உடல் நலத்திலும் சரி, அறிவு ஆற்றலிலும் சரி; மிகச் சிறந்தவர்களா யிருக்கிறார்கள். ஆடவர்களை ஒரு நொடியில் அழிக்கக் கூடிய ஆற்றல் அவர்களிடத்தில் இருக்கிறது. ஆனால் அந்த ஆற்றலை அவர்கள் காண்பிப்பதில்லை. கலியாண விஷயத்தில் அவர்கள் தங்கள் உரிமையை நாட்டுவார்கள். ஆனால் மணச்சடங்கு ஆன பிறகு அவர்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப் படிந்து நடப்பார்கள். கடமை உணர்வால் அல்ல; அப்படி நடப்பது அவர்களுடைய இன்பத்துக்குக் காரணமாயிருப்பதால், கீழ்ப்படிந்து நடப்பதே நலமென்று கருதுகிறார்கள். மேலும், அந்த நாட்டில் மண விதிகள் ஒரு கால அளவு வரையில் தான் ஆடவர்களையும் பெண்டிர்களையும் பந்தப்படுத்தும். பிறகு அவர்கள் இச்சைப்படி திரியலாம்.

லிட்டன் சட்டங்களைப்பற்றிப் பேசவில்லை. இந்த நாட்டின் அறம் ஆயுத பலத்தின்மீது நிற்கிறது. எல்லா நாட்டிலும் கொலைக் கருவிகள் இருந்துவிட்டால், ஒன்றை ஒன்று அஞ்சிப் போர் புரியாதன்றோ? ஆனால் அச்சத்தில் விளையும் ஆசாரம் சிறியோர்களின் ஆசாரமாகும். மேலும், இத்தகைய கொலைக்கருவிகளைப் படைத்த நாட்டினர் ஒருவருக்கொருவர் சகோதர முறையில் பழகினாலும், பிற நாடுகளை இரக்கமின்றி அழித்து விடுவார்களல்லவா? இதில் என்ன அறம் தோன்றும்?

இந்தக் கற்பனை உலகத்தில் சில முரண்பாடான கொள்கைகளைச் சமரசப்படுத்த லிட்டன் முயன்றிருக்கிறார். வகுப்பில்லாத சமுதாயத்தை நிறுவவேண்டும் என்ற கொள்கையை வில்லியம் காட்வின் (William Godwin) என்பவரிடமிருந்து இவர் வாங்கிக்கொண்டார். தொழில் சம்பந்தப்பட்ட வரையில் ஃபோரியரின் கொள்கைகள் இந்த நூலில் இடம் பெறுகின்றன. வருகிற லாபத்தை அவரவர் அடையலாம் என்பதால் முதலாளிக்கும் இதில் இடமிருக்கிறது. ஆனால் முதலாளிகளின் ஆதிக்கம் இங்கே செல்லாது. பணத்தை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. பணம் பெற்றவர்களைப் போற்றுகிற அரசாங்கம் இங்கே இல்லை. ஆனால் அச்சத்தின்மீது எழும் சமுதாயம் கீழே விழுந்து மண்ணோடு மண்ணாய்ப் போய்விடும். திடீரென்று ஒரு புயல் உணர்ச்சி வேகத்தில் ஒருவர்மீது ஒருவர் அணுக்குண்டை வழங்கி யாதவ குலம்போல் அழிந்து போகலாம். அன்பும் மனச் செம்மையும் அருளும் எழுப்புகிற சமுதாயந்தான் நிற்கும். மற்றச் சமுதாயம் வெறும் மணற் குவியல்கள்மீது எழுப்பிய கட்டிடங்கள் போலவே காட்சி அளிக்கும்.

இந்து - ஜைன ஒற்றுமைக்கு அடிகோலிய
மஞ்சுநாதர் கோயில் கொண்டிருக்கும் இடம்—

முப்பெயர் ஸ்தலம்

ஏ. பி.

கன்னட ஜில்லாக்களின் மிகப் புனிதமான ஸ்தலங்களில் தர்ம ஸ்தலம் என்பது ஒன்று. தீர்த்தம், க்ஷேத்திரம், யாத்திரை இந்த மூன்று நோக்கங்களிலும் புனிதத்தன்மை பெற்றது இந்த ஸ்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மஞ்சுநாதேசுவரர். இந்த ஸ்தலம் தென் கன்னடத்தில் இருந்தாலும் கன்னட மக்கள் வாழும் எல்லாப் பிரதேசங்களிலும் பிரசித்தி பெற்றிருக்கிறது. மஞ்சுநாதரை வேண்டித் தொடங்கிய எந்தக் காரியத்திலும் வெற்றியே கிடைக்கும்; தோல்வி என்பதே இல்லை. எந்த ஸ்தலத்தின் தெய்வங்களை வேண்டிக் கொண்டு மறந்தாலும் விட்டு விடும்; ஆனால் மஞ்சுநாதருக்குப் பிரார்த்தனை செலுத்த மறந்தால் சும்மா விடமாட்டார். ஸ்தல புராணத்தைப் புரட்டினால், பிரார்த்தனையை மறந்த பல பக்தர்கள் அபராதக் காணிக்கை செலுத்தி மஞ்சுநாதரை வழிபட்டு மகிழ்ந்ததைப்பற்றி அறியலாம். இதனால் மஞ்சுநாதருடைய சத்திய வாக்கும் பக்தர்களிடத்திலுள்ள வாஞ்சையும் தெளிவாகும்.

பெயருக்கேற்றபடி, இது தருமவான்களுக்கு உறைவிடமே. இப்பொழுதும் பல புண்ணியவான்கள் இங்கே வரும் யாத்திரிகர்களுக்குச் செலவில்லாமல் தங்க எல்லா வசதிகளும் செய்து கொடுக்கிறார்கள். பக்தர்களுக்கு எந்தச் சௌகரியக் குறைவும் ஏற்படாமல் தேவஸ்தானத்தார் கவனித்துக் கொள்ளுகிறார்கள். மஞ்சுநாதரின் அருளும் தேவஸ்தானத்தாரின் சிரத்தையும், இந்த ஸ்தலத்தின் பெருமையைக் கன்னட ஜில்லாக்கள் முழுவதும் பரவச் செய்து விட்டன.

இந்த ஸ்தலம் தென் கன்னடத்தில் புத்தூர்த் தாலுகாவைச் சேர்ந்தது. மங்களூர்ப் பாதையில், மங்களூருக்கு நாற்பது மைலிலும் சார்மடியிலிருந்து 20 மைலுக்குள்ளும் 'உஜிதி' என்னும் சிற்றூர் இருக்கிறது. இந்த ஊரிலிருந்து 5½



மஞ்சுநாதர் கோயிலின் முன்புறம்.

காப்பிரைட்: பிரஜா மத (கன்னடம்), பங்களூர்.

மையில் தர்மஸ்தலம் பிரபல க்ஷேத்திரமாக இருக்கிறது.

குதிரையின் முகத்தில் பிறந்து பாயும் நேத்திராவதி மிகப் புனிதமானதென்று மக்கள் கருதுவதால், தர்மஸ்தலத்துக்கு வருபவர்கள் அங்கிருந்து 12 பர்லாங்கு தூரத்தில் இருந்தபோதிலும் இந்த நதியில் ஸ்நானம் செய்துவிட்டே ஊருக்குள் நுழைவார்கள். இந்த ஸ்தலத்தில் சுமார் 2,000 பேர் வசிக்கிறார்கள். பெரும் பகுதியினர் கோயிலை அடுத்தே வசிக்கிறார்கள். நூற்றுக்கு நாற்பத்தைந்து பேர் எழுத்து வாசனை பெற்றவர்கள். பாக்கும் தென்னையும் இங்கே அதிகமாக விளைகின்றன. இந்த ஊரைச் சுற்றிலும் ஐயகீர்த்திமலை, அண்ணப்பன்மலை, சிவராத்திரி மலை என்னும் குன்றுகள் அமைந்திருக்கின்றன. நடுவே, பசேலென்று அழகிய மரஞ்செடிகள் செழித்து வளர்ந்து, ஸ்தலத்தின் கவர்ச்சியைப் பின்னும் அதிகப்படுத்துகின்றன. பசுமையான இந்தச் சூழ்நிலையில் மஞ்சுநாதர் மனோகரமாக நிலைத்துப் பக்தர்களின் வேண்டுகோளைப் பூர்த்தி செய்கிறார்.

இங்கே எழுந்தருளியிருக்கும் அண்ணப்பனும் பக்தகோடிகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறார். இந்தக் கோயிலில் பெண்கள் நுழைவதில்லை. அண்ணப்பன் உக்கிரமூர்த்தி என்று பெயர் பெற்றிருக்கிறார்.

முதல் முதலில் தர்மஸ்தலத்தின் பெயர் 'குடுமை' என்றிருந்தது. சுமார் பத்து நூற்றாண்டுகளுக்கு முன் தேவலோகத்திலிருந்து தரும தேவதைகள் இந்த ஊருக்கு வந்து இங்கே வசித்த 'பேர்கடே' என்பவரைப் பரிசோதித்தார்களாம். அவர் தருமவான் என்று தெரிந்ததும், "ஏ பேர்கடே, உங்கள் இருப்பிடத்தை எங்களுக்கு விட்டுவிடு. அருகிலேயே வேறு வீடு கட்டிக்கொள்" என்றார்களாம். அவரும் அப்படியே செய்தார். தேவர்கள் அவருக்கு அழிவற்ற செல்வத்தைக் கொடுத்தார்கள். பிறகு தேவதைகள் அடிக்கடி பேர்கடே தம்பதிகளின் கனவில் தரிசனங் கொடுத்தார்கள். இங்கே கோயில்களை நிறுவ எண்ணினர்கள். அவர்களுடைய விருப்பப்படியே எல்லாம் ஆயிற்று. இந்தக் கோயில்களுக்குக் காவலாகத் தோன்றிய தெய்வமே அண்ணப்பன். காசியிலிருந்து 'கதிரெ' என்னும் ஊருக்குக் கொண்டு வந்த சிவலிங்கத்தை இங்கே ஸ்தாபித்தது அண்ணப்பனே. அந்தச் சிவலிங்கமே மஞ்சுநாதர். காலப் போக்கில் ஸ்வாமிக்குத் தினசரிப் பூஜைகளும் உற்சவங்களும் பிரபலமாக நடந்தன. இவற்றை நடத்தும் சிறந்த குடியினரே 'ஹெக்கடே' பரம்பரையினர். இந்தக் குடும்பத்தார் நிலையாக மஞ்சுநாதருக்குச் சேவை செய்து வருகிறார்கள். கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், இன்று மஞ்சுநாதர் கோயில் இருந்த இடத்திலேயே முன்பு ஜைனரின் கடவுளான சந்திரநாதர் இருந்தாராம். இப்படி மஞ்சுநாதர் தோன்றியது இந்து-ஜைன மதங்களின் ஒற்றுமைக்கு அடிகோலியது. இன்றைக்கும் கோயில் நிர்வாகிகள் ஜைனரே.

பர்மண்ண பேர்கடேக்குப் பின் ஹெக்கடே பரம்பரையினர் பலர் கோயில் நிர்வாகிகளாக இருந்தார்கள். இப்பொழுது நிர்வாகியாக இருப்பவர் ஸ்ரீ மஞ்சைய ஹெக்

கடெ. இவர் தன்னலமற்ற சேவையால் பல இடங்களில் கௌரவமும் நற்பெயரும் பெற்றிருக்கிருர்.

குமாரைய ஹெக்கடெயின் காலத்தில் மைசூரில் வள்ளலென்றும் மகா பக்தரென்றும் பெயர் பெற்ற மும்மடி கிருஷ்ணராஜர் ஆண்டார். குமாரையாவின் தசாவதார நாடகம், மும்மடியின் நன்மதிப்பைப் பெற்றது. ஹெக்கடெ அரசரின் அதிதியானுர். தசாவதார நடிகர்களுக்காகவே அக்கிரகாரம் கொடுத்தார் அரசர்; 'கப்பாளு' என்ற கிராமத்தை ஜைன யாத்திரா ஸ்தலமாகிய 'சிரவண பௌகொளா' மடத்துக்குக் கொடுத்துக் குமாரைய ஹெக்கடெயைக் கௌரவித்தார். இந்த ஹெக்கடெ, குடகுக்கு யாத்திரை போய் அங்கே ஆண்ட வீரராஜேந்திரனுடைய விருந்தாளியாகத் தங்கினுர்; கத்தி, ஆயுதங்கள் முதலிய பரிசுகளைப் பெற்ருர். இதுமுதல் மைசூரும் குடகும் நட்புடன் வாழலாயின.

தற்காலம் இந்த வமிசத்தினராகிய மஞ்சைய ஹெக்கடெயும் தம் முன்னேரைப் போலவே தருமம், ஒழுக்கம் முதலியவற்றில் சிறந்து விளங்குகிருர்; நியாயவான். மிகச் சிரத்தையுடன் பணி செய்கிருர். கால மாறுதலுக்கேற்ப, க்ஷேத்திரத்தின் மகிமையையும் பெருமையையும் அதிகப்படுத்த வேண்டிய பல முயற்சிகளையும் கைக்கொண்டிருக்கிருர். கோயில் நிர்வாகம் முன்னேற்றப் பாதையில் செல்லுகிறது.

சமீபத்தில் இவருடைய ஷஷ்டியப்த பூர்த்தி நடந்தது. சாந்திகள் பெரிய அளவில் நடந்தன. கர்நாடகத்து மக்கள் எல்லோரும் - பக்தர்களும், எழுத்தாளர்களும் - சேர்ந்து இவருக்கு ஒரு நூலைச் சமர்ப்பித்தார்கள்.

மஞ்சையா சிறந்த எழுத்தாளர்; கலா ரசிகர். இவர் அடிக்கடி சர்வமத சம்மேளனங்கள் கூட்டுகிருர். 1953-இல் ஆயுர்வேத பரிஷத்தையும் அகில கர்நாடகப் பொருட்காட்சியையும் கலைக் காட்சியையும் நடத்தினுர். 1940-இல் 'உஜ்ரே' என்னும் இடத்தில் குருகுலம் ஒன்றை நிறுவி, எல்லா மத மாணவர்களுக்கும் அங்கே கன்னடம், ஸம்ஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளை இலவசமாகக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிருர். 1947-இல் கர்நாடக வித்தியாலயத் தலைவராகி, மாணவர் ஹாஸ்டல் ஒன்றையும் கட்டுவித்திருக்கிருர். தேவஸ்தானத்துக்கு வேண்டிய நவீனப் பொருள்களையும் விசேஷ வசதிகளையும் அதிகப்படுத்தியிருக்கிருர். யாத்திரிகர்களின் வசதிக்கென்று கட்டிய ஒரு புதுக் கட்டிடமும் நேத்திராவதி நதியின் பாலமும் இவருடைய சேவைகளில் முக்கியமானவை. பல ஸ்தாபனங்களுக்குச் சேவை செய்து 1947-இல் காஸரகோடில் நடந்த கர்நாடக இலக்கிய ஸம்மேளனத்தின் வரவேற்புத் தலைவர் ஆனுர். இதை முடிக்கு முன் 'மகா நடாவளி'யைப்பற்றிச் சொல்லவேண்டும். 'மகா நடாவளி' என்பது தர்ம ஸ்தலத்தின் விசேஷமான ஓர் உற்சவம். இது 12 வருஷங்களுக்கு ஒரு முறை நடக்கவேண்டும். பல காரணங்களால் சுமார் 42 வருஷ காலமாக இந்த உற்சவம் நின்றிருந்தது. மஞ்சைய ஹெக்கடெயின் முயற்சியால்

1951 பிப்ரவரி 15-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி வரையில் சிறந்த வைபவத்துடன் இது நடந்து நிறைவேறியது; லட்சக்கணக்கான பக்தர்களுக்கு இன்பத்தை ஊட்டியது.

'மகா நடாவளி' ஒரு பெரிய யாகம் போன்றது. அப்போது பல தேவர்களையும் தேவதைகளையும் பல முறைகளில் பூஜிப்பது வழக்கம். இதனால் உலக க்ஷேமம் விருத்தியாகுமென்ற நம்பிக்கை இருக்கிறது. இப்போது வரும் யாத்திரிகர்களை ஆதரித்து, தருமம், இலக்கியம், கலை, கைத்தொழில் முதலிய பல துறைகளில் போட்டி வைத்து, விருந்தினரை உபசரித்துக் கலைக் கூடங்களை ஏற்படுத்துவது என்றால், நாட்டின் பல மூலை முடுக்குகளிலிருந்தும் மஞ்சுநாதரைச் சேவிக்க ஜனங்கள் ஓடி வருவது இயற்கைதானே!

பெண்கள் மூடர்களே; ஆனால்—

பெண்கள் மூடர்கள்தான். அதை நான் மறுக்கவில்லை. பெண்களை ஆண்களுக்குச் சரி சமானமாகவே கடவுள் படைத்திருக்கிறார்.

—ஜார்ஜ் எலியட்

ஏன் மாறினார்?

சாப்பாட்டு நேரத்தில் கணவனின் கோபத்தைக் கண்டு மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. "உங்களுக்குத் திங்கள் கிழமை பீன்ஸ் பிடித்தது; செவ்வாய்க்கிழமை பீன்ஸ் பிடித்தது; புதன்கிழமை பீன்ஸ் பிடித்தது. இன்று வியாழக் கிழமை என்ன, திடீரென்று பீன்ஸ் பிடிக்காது போயிற்று!" என்று கேட்டாள்.

—'காலியர்ஸ்'

உத்தம மனைவி வேண்டுமா?

உத்தம மனைவியைப் பெறுவதற்குள்ள ஒரே வழி உத்தமக் கணவனாயிருப்பதுதான்.

—காப்டன் எட்டி ரிக்கன்பாக்கர்

பலவீனத்தை நீக்கும் வழி

நாம் நோயுற்றிருப்பதாக எந்நேரமும் எண்ணுவது நம் நோயைப் போக்காது; மருந்து அவசியம். நம் பலவீனத்தை நினைவு கூர்வது பலந் தராது. பலம் பெற முயற்சி வேண்டும்.

—விவேகானந்தர்

மாடியில் ஏறிய குதிரை

மே மாதத்தில் ஒரு நாள் மாலை நேரம், பத்திரிகை டெலிவரி செய்யும் காஸ்பர்காப் என்ற ஆள், நான்கு தோழருடன் தம் வீட்டில் குடித்துக் கொம்மாளமடித்துக்கொண்டிருந்தார்.

இஸாபெல்லா என்ற குதிரை பூட்டிய நிலக்கரி வண்டியை எமில் என்பவர் ஓட்டி வந்து வாசலில் நிறுத்தினர். அவரும் இந்தக் கோஷ்டியோடு வந்து கலந்துகொண்டார்.

கடைசியில் நண்பர்களை அவரவர் வீடுகளில் கொண்டு போய்விடுவதாகச் சொல்லி, அவர்களை எமில் தம் வண்டியில் ஏற்றிக்கொண்டார். ஆனல், வண்டி புறப்படுமுன் அதிலிருந்து கீழே விழுந்து அவர் பிரக்ஞை இழந்துவிட்டார். மூன்ருவது மாடியில் உள்ள தமது ஜாகைக்கு அவரைத் தாமும் தம் நண்பர்களுமாகக் காஸ்பர்காப் தூக்கிச் சென்ருர்.

பாவம்! குதிரை மட்டும் துயரத்தோடு துணையற்று வெளியே நிற்பதா? அதையும் மாடிப்படியிலே ஏற்றிச் சென்ருர் காஸ்பர்காப். அவர் மனைவி அதைக் கண்டதுமே திடுக்கிட்டு மூர்ச்சை போட்டுவிட்டாள். இரவு முழுவதும் இந்த நண்பர்களோடு மாடியிலே கழித்தது குதிரை.

பொழுது விடிந்தது. ஜன்னல் வழியே வெளியே பார்த்தார் காஸ்பர்காப். கீழே தெருவில் 100 ஜனங்கள் வந்து நின்று, மாடியிலே ஒரு குதிரை கொள்ளுத் தின்றுகொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

பிறகு, இஸாபெல்லாவை மாடியிலிருந்து இறக்குவதுதான் பெரும்பாடாய்ப் போயிற்று. ஏறியபோது அது சுலபமாய் ஏறிவிட்டது. இறங்கும்போது இடறி விழுந்தது. தீயணைக்கும் படை வந்து நான்கு மணி நேரம் வேலை செய்து அதை இறக்கியது. கயிறெல்லாம் போட்டு அதை இழுக்க வேண்டியதாயிற்று. குளம்பை உதைத்து, சுவர், படியெல்லாம் இஸாபெல்லா சேதம் செய்துவிட்டது.

விஷயம் கோர்ட்டுக்குப் போயிற்று. ஜட்ஜ் 400 மார்க்குகள் அபராதம் போட்டார். "நான் ஜீவகாருண்யம் உடையவன். அந்த வாயில்லா ஜீவனை வாசலில் நிறுத்த எனக்கு மனம் வரவில்லை" என்று ஜட்ஜிடம் உறுமினர் காஸ்பர்காப்.

—'பெர்லினெர் ஸீட்டங்'

உலகின் பலசாலி

க்ரிஸ் மாஸ்ஸீ

'கொல்லன்' (ஸ்மித்) என்ற பெயருடன், எஃப். டபிள்யூ. ராபின்ஸ் என்பவர் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். பதினைந்து ஷில்லிங் விலையில் ரைடர் என்ற பிரிட்டிஷ் பிரசுரக் கம்பெனி அதை வெளியிட்டிருக்கிறது. இரும்பு வேலை செய்யும் கிராமத்துக் கருமானின் வரலாறு அதில் விரிவாக இருக்கிறது. சரித்திர காலத்துக்கு முந்தியே கருமானின் தொழில் தோன்றிவிட்டதாம். அதிலிருந்து தொழில் வளர்ந்த விதத்தை வர்ணிக்கும் அந்தப் புஸ்தகத்தைப் பின்பற்றியது இந்தக் கட்டுரை.

குழந்தையாக இருக்கும் போது எனக்கு எல்லாவற்றையும் பார்க்கவேண்டும், கேட்கவேண்டும் என்று ஆவல். மோந்து பார்க்கும் சக்தியும் அதிகமாக உண்டு. மாட்டுத் தொழுவத்தில் பால் கறக்கும் போது மாட்டின் வாலை நான் பிடித்துக்கொள்வது வழக்கம். பால் வாளியில் பால் 'சர் சர்' என்று விழும் ஓசை காதில் விழும்; அப்போது என் கையும் கூடவே அதற்கேற்றாற்போல் அசையும். அதே சமயம் பால் கறக்கும் ஓசையைவிட இனிமையாக இன்னும் ஓர் ஓசை கேட்கும். நாலு வீடு தள்ளிக் கொல்லன் உலைக்கூடம் ஒன்று உண்டு. அங்கே அவன் சம்மட்டியைப் பட்டடைக் கல்லில் அடிக்கும் ஓசைதான் அது.



ஸெயின்ட் டன்ஸ்டன் என்ற மகான் பழுக்கக் காய்ச்சின இரும்புக் குறட்டால், பிசாசின் மூக்கைப் பிடித்து இழுத்ததாக ஒரு பழங்கதை வழங்குகிறது.

கொல்லன் உலைக்கூடத்துக்கு என்னை அழைத்துப்போய்க் காட்டினார்கள். அங்கே அவன் துருத்தியைப் பலமாக அழுத்திக் குதிரை லாடத்தை நெருப்பில் சிவக்கச் சிவக்கக் காய்ச்சிப் பட்டடைக் கல்லில் சம்மட்டியால் அடித்துக் காட்டுவான்; நான் ஆவலோடு கண்கள் ஒளிர அதை வேடிக்கை பார்ப்பதைக் கண்டு மகிழ்வான். அக்கம் பக்கத்தில் ஒரு வானம் பாடி பாடிக்கொண்டிருக்கும். வயலில் ஆட்டுக் குட்டி 'ம்மே' என்று கூவுவது கேட்கும்.

அந்த மாதிரி எளிமையும் இன்பமும் அழகும் செறிந்த நாட்

மூலம்; ஜான் அவ் லண்டன் வீக்லி (ஆங்கிலம்: 9-10-'53), லண்டன்.

கள் மறுபடியும் வருமோ? — மாட்டுத் தொழுவத்தின் மணம்! கொல்லன் உலைக் கூடம்! என் கண்ணும் காதும் கூர்மையாக இருந்த பருவம்!— இந்தப் பழைய நினைவுகள் வரும்போது என் கண்களில் நீர் வந்துவிடுகிறது. குழந்தைப்பருவத்தில் அந்தமாதிரி நாட்டுப்புறத்தில் வளரக் கொடுத்து வைக்க வேண்டும்; அந்த விஷயத்தில் நான் அதிருஷ்டசாலிதான்!



ஸாக்ஸன் இனத்தைச் சேர்ந்த பழைய காலத்துக் கொல்லர். இன்றைய பிரிட்டிஷார் ஆங்கிலோ - ஸாக்ஸன் இனத்தவரே.

மொத்தத்தில் மாலுமிகளால்தான் உலகத்திலேயே வலிமையும் சுபிட்சமும் மிகுந்த நாடாக இங்கிலாந்து ஆயிற்று என்று சொல்வார்கள். ஆனால் இரும்புக் கொல்லன் உதவி இராவிட்டால், ஒரு மாலுமியாவது கடலில் பிரயாணம் செய்திருக்க முடியுமா? அவன்தானே கருவிகளையெல்லாம் செய்து தருகிறவன்?

சரித்திர காலத்துக்கு முந்தி மனிதன் தீயின் உபயோகத்தைக் கண்டறிந்தபோதே, காடு மேடுகளில் கொல்லனும் வேலை செய்யத் தொடங்கிவிட்டான். மனிதன் எப்போதாவது காட்டுத் தீயைப் பார்த்திருப்பான். இதை நாம் ஏன் நல்ல வழிக்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று அவனுக்குத் தோன்றியிருப்பது சகஜந்தான்.

பழைய காலத்துப் புதைபொருள்களைத் தோண்டியெடுத்தபோது பெரும்பாலும் ஆயுதங்களே கிடைத்தன. அவை, இந்தக் காலத்தைப் போலவே மக்கள் தம்மைக் காத்துக் கொள்ளப் பயன்பட்டவைதான். ஆயினும் சாதாரணக் காரியங்களுக்குப் பயன்பட்டு வந்த கருவிகளும் பல சமயம் யுத்த ஆயுதங்களாக மாறியிருக்கின்றன. அதேபோல, வாளும் மேழியின் அலகாக மாறியிருக்கிறது. இரும்பையோ செம்பையோ வெட்ட வெளியில் நெருப்பில் இளக வைப்பதென்றால், கொஞ்சத்தில் ஆகிற காரியமல்ல; ஆனால் காற்றுப் பக்குவமாக அடிக்கிறபோது தீ ஓங்கி வளர்கிறது என்று மனிதன் கண்டுகொண்டான். அதன்மேல் துருத்தி போன்ற கருவி ஒன்று தயாரித்தான். முன் காலத்தில் எகிப்திலே வசித்து வந்த இரும்புக் கொல்லர்கள், தம் காலிலே இந்தத் துருத்திகளை மாட்டிக்கொண்டு அழுத்தியும் விட்டும் காற்றடிப்பது வழக்கம். அதற்கும்

முன்னாலேயேகூட மனிதன், காட்டுத் தீயில் இரும்பு முதலிய உலோகங்கள் இளகியும் உருகியும் ஓடியதைக் கண்டுதான் இருக்க வேண்டும்.

ஆகவே, முதலில் இந்தக் கொல்லர்களை மந்திர சக்தி வாய்ந்த புரோகிதர்களைப் போலவே மக்கள் பெரிதும் மதித்து வந்தார்கள். இன்றுகூட, 'குதிரை லாடத்தை வீட்டின் முன் கட்டி வைத்தால் குடும்பத்துக்கு மங்களம் உண்டாகும்' என்று நாட்டுப்புறத்தில் - ஏன் பட்டணத்தில்கூட-அநேகம் பேர் நம்புகிறார்கள் என்றால் பாருங்களேன்!

மாயக் கத்தி, துளைக்க முடியாத கேடயம், அற்புதத் தலைக் கவசம் இந்த மாதிரி அபாரமான எத்தனையோ யுத்தக் கருவிகளைக் கொல்லர்கள் செய்திருக்கிறார்கள். சாதாரணக் கருவிகளையும் தயாரித்துத்தான் வந்தார்கள். மண்வெட்டி, ஏரின் அலகு, உளி, வைத்தியக் கருவிகள் இவைகளைச் செய்தவர்களும் இந்தக் கொல்லர்கள்தான்.

அந்தக் காலத்திலும் மக்களுக்குக் கொல்லர்களின் உதவி தேவையாக இருந்தது. ஆயினும், பணமாக ஊதியம் தந்தால் அவர்கள் பணக்காரர்களாகி அந்தத் தொழிலையே விட்டு விடுவார்களோ என்று எண்ணி, உணவு மட்டும் அளித்து வந்தார்கள்.

கி. பி. 8-16-ஆம் நூற்றாண்டுகளில் இரும்புக் கொல்லர்கள் இந்தக் காலத்தைவிட மிகவும் திறமை பெற்றிருந்தார்கள். விசித்திர வேலைப்பாடமைந்த இரும்புக் கதவுகளை அவர்கள் தயாரித்து வந்தார்கள். இலைகளுடன் கொடிகள் படர்ந்ததுபோல் ஒழுங்காகவும் பத்தியாகவும் இரும்புக் கதவுகளில் அமைத்துத் தம் கைத்திறமையை இவர்கள் காட்டி வந்தார்கள். இரும்புக் கொல்லன் என்றதுமே சாதாரண மனிதனை விட நல்ல உயரமும் தாட்டியுமான ஓர் ஆள் சம்மட்டியும் கையுமாக நிற்கும் காட்சிதான் நம் கண் முன் நிற்கும்.

"கொல்லன் உலைக்கூடத்துக்கும் கவிதைச் சுவைக்கும் சம்பந்தம் இருப்பதாக எனக்கு எப்போதுமே பட்டதுண்டு. எனக்கு மட்டுமா? எத்தனையோ பேர், ஜன நெருக்கமுள்ள நகரங்களில்கூடக் கொல்லன் உலைக்கூடத்தின் பக்கமாகப்போகும்போது சொல்ல முடியாத ஓர் இன்பம் ஏற்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். எனக்கென்னவோ இந்த மாதிரி கொல்லன் உலைக்கூடம் என்றால் ஒரு தனிப் பிரீதி. எங்காவது நாட்டுப் புறத்தில், அதுவும் குறுகின பள்ளத்தாக்கிலோ நாலு வழி கூடும் இடத்திலோ இப்படி இருந்துவிட்டால் கேட்க வேண்டியதில்லை; எத்தனை குருட்டு நம்பிக்கைக்கு இடம் ஏற்படும் தெரியுமா? கவிதைக்கே குருட்டு நம்பிக்கைதான் ஜீவன்.

"இந்த மாதிரி ஓர் இடத்துக்கு, பொழுது சாய்ந்து இருட்டின பிறகு போய்ச் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. இரவில் சுற்றிலும் நிச்சப்தமாக இருக்கும்போது சம்மட்டி ஓசை மட்டும் கேட்டால் எவ்வளவு கம்பீரமாக இருக்கும்! இருட்டில் இப்படி அடிக்கும்போதுதான் நெருப்புப் பொறி பறப்பது நன்றாகத் தெரியும். உலைக்கூடத்தின் சிவந்த நெருப்பொளி சுற்றுப்

பட்டும் சற்றுப் படாமலும் அழுக்குப் படிந்த அவன் உடலின்மேல் படும்போது ஏதோ மர்மமும் மாயமும் நிறைந்து தோன்றும். கிராமாந்தரத்தில் இரும்புக் கொல்லன் வாழ்வே ரசமான ஒரு காவியம் என்று எனக்குப் படுகிறது'' என்று ஜார்ஜ் பாரோ என்னும் அறிஞர் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார். கொல்லன் உலைக்கூடத்து ஓசையிலேகூட அந்தக் கவிதை இனிமையும் இசையும் செறிந்திருக்கின்றன.

கிராமாந்தரக் காட்சிகளில் மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பது கொல்லன் உலைக்கூடந்தான். ஆயினும் வரவர இந்தக் காட்சி அரிதாகி வருகிறது; இனிக் கிராமங்களேகூட உருத் தெரியாதபடி வியாபார ஸ்தலங்களாக மாறிவிடும் என்ற நிலை ஏற்பட்டு விடலாம். வேகத்தில் நமக்குள்ள மோகத்தால் வாழ்க்கையின் இனிய சூழ்நிலைகளை இழந்துகொண்டே வருகிறோம். ஆகவே, நிதானமாக வாழ்வு நடத்தும்போதுதான் நமக்கு அமைதி கிட்டும்.

வக்கீலும் ஷர்ட்டும்

ஐக்கிய அமெரிக்காவின் மிகப் பிரபல ஜனாதிபதி லிங்கன் ஒரு லாயராக இருந்தபோது முதல் முதலாக ஒரு வழக்கில் வாதிக்கவேண்டி யிருந்தது. மறு கட்சி வக்கீல் மிகவும் அநுபவம் வாய்ந்தவர். நிறையச் சட்டப் பாயிண்டுகளை எடுத்துக் கூறி விரிவாக அவர் வாதித்தார். அதைக் கண்டு லிங்கன் அஞ்சிச் சோர்ந்து தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். கடைசியில் எதிர்க்கட்சி லாயர் பேசி முடித்து உட்கார்ந்தார். அப்போதுதான் தலை நிமிர்ந்து பார்த்தார் லிங்கன்.

வழக்கு நடக்குமிடம் எல்லைப்புறத்தில் உள்ள ஓர் ஊர். அந்தப் பிரதேச மக்களுக்குப் படாடோபம் என்றால் சிறிதும் பிடிக்காது. அவர்களில் சிலர்தான் ஜூரியாக அமர்ந்திருந்தார்கள். எதிர்க்கட்சி வக்கீல் புதுவிதமான நகர மோஸ்தர் ஷர்ட் ஒன்று அணிந்திருந்தார். அந்த ஷர்ட்டுக்கு முதுகுப் புறத்தில் பட்டன்கள் இருந்தன. இதைக் கண்டதும் லிங்கன் தைரியம் அடைந்தார்.

எழுந்து, ''ஜூரி கனவான்களே, நியாயம் என் பக்கத்தில் இருக்கிறது. இதோ இந்தக் கனவான் என்னவோ சட்டமெல்லாம் தெரிந்ததுபோல் பாசாங்கு செய்கிறார். ஷர்ட் பட்டன்களை எந்தப் பக்கத்தில் போட்டுக்கொள்கிறது என்றுகூட இவருக்குத் தெரியவில்லை!'' என்று சொல்லி உட்கார்ந்தார்.

உடனே கோர்ட்டில் ஒரே சிரிப்புத்தான். அது ஓய்ந்ததும், அந்த உத்தம ஜூரர் பன்னிரண்டு பேரும் லிங்கன் கட்சிக்கே சாதகமாகத் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

—மேரி ஆல்க்ஸ், 'காரொனெட்'

நந்தனர் சரித்திரம், ராம நாடகக் கீர்த்தனைகள் போல வங்காளத்திலும் இருந்திருக்கின்றன.

பாஞ்சாலி நாடகம்

ஹரே கிருஷ்ண முகர்ஜி

வங்க இலக்கியத்தில் இரண்டு நூற்றாண்டுகளாகப் 'பாஞ்சாலி' என்ற நாடகக் கவிதை வகை பிரபலமாக இருந்து வருகிறது. தாளம், ராக ஆலாபனம் இப்படி இசையோடு பொருந்த இதை நிகழ்த்துவது வழக்கம். 'பயார்' என்ற ஒரு விதச் சந்தத்தை இதில் கையாண்டு வந்தார்கள். கிருத்திவாசர் எழுதிய ராமாயணம் இந்த ரீதியிலே அமைந்ததுதான். பின்னல் சில விரதங்களைக் குறித்த கதைப் பாடல்களும் 'பாஞ்சாலி' என்று வழங்கி வந்தன. கிருஷ்ண மங்கல், சிவ மங்கல், ராம மங்கல், மனசா மங்கல், தர்ம மங்கல், சண்டீ மங்கல் முதலியவற்றில் 'பாஞ்சாலி' மெட்டுக்கள் அமைந்திருக்கின்றன.

'பாஞ்சாலி' என்றதுமே தாசு ராய் என்ற கவியின் பெயர்தான் எல்லா வங்காளிகளுக்கும் நினைவு வரும். அவர்தான் இந்த வகைக் கவிதையை எழுத ஆரம்பித்தவர். ஆயினும் அவருடைய 'பாஞ்சாலி' அசல் இசையிலக்கணத்துக்குக் கட்டுப்பட்டதென்று சொல்வதற்கில்லை. 'இது யாப்பிலக்கண விதிகளுக்கும் உட்பட்டதல்ல' என்று இந்தக் காலத்தில் சில விமரிசகர்கள் கருதுகிருர்கள்; அவரைக் கவியாகவேகூட அவர்கள் மதிக்கவில்லை. ஆனலும், 100 ஆண்டுகளுக்கு முன் வங்காளம் முழுவதிலுமே அவரைப் பாராட்டாதவரில்லை.

நவத்வீபத்து வடமொழிப்பண்டிதர்கள் அந்தக் காலத்தில் கூடி ஒரு தீர்மானம் செய்தார்களென்ருல் அதை எல்லாரும் மறுக்காமல் அப்படியே ஏற்பார்கள். அவர்கள் தாசு ராயைச் சிறந்த கவியாகவே மதித்தார்கள்; சில இடங்களில் ரசக்குறைவாக இருக்கிறது என்று யாரும் அவர் எழுதிய காவியத்தையே புறக்கணித்துவிடவில்லை. பொதுவாகப் பக்திச்சுவை அதில் இருந்ததே எல்லார் மனத்தையும் கவர்ந்தது. சமூகத்தில் நிலவும் சில கொடுமைகளையும் அவர் எடுத்துக் காட்டி, மக்கள் திருந்தும்படி எளிய முறையில் தம் 'பாஞ்சாலி'யில் அறிவுரைகளைப் போதித்தார். வங்க இலக்கியத்தில் கிருத்திவாசர், காசிதாசர் போன்ற கவிகளோடு ஒப்பிடக் கூடியவர் தாசு ராய். அந்தக் காலத்து வங்க மக்களின் வாழ்வை அவர் அப்படியே தம் கவிதைகளில் சித்திரிக்கிருர். இலக்கியம் என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

சென்ற நூற்ருண்டின் ஆரம்பத்தில் வர்த்தமான் ஜில்லாவில் பிலா என்ற கிராமத்தில் பிறந்தார் தாசு ராய். தந்தையின் பெயர் தேவீ பிரசாத். தாயின் பெயர் ஸ்ரீமதி தேவி. எழாம் வயதில் கிராமப்

காப்பிரைட்: யுகாந்தர் (வங்காளி: பூஜாமலர் '53), கல்கத்தா.

பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். பிரகு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் இருந்த ஹரகிசோர் பட்டாசாரியரிடம் ஆங்கிலங்கூடக் கற்றதாகத் தெரிகிறது. அப்போது பிலா கிராமத்தில் நீலகண்ட ஹால்தார் என்று ஒருவர் இருந்தார்; நினைத்த மாத்திரத்தில் எளிய மொழியில் கவி பாடும் சக்தி உள்ளவர் அவர். இதைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். தாசு ராய்க்குத் தாமும் அப்படிப் பெயர் எடுக்க வேண்டுமென்று ஆசை. சில நாள் கழித்து அக்ஷயா என்ற பெண் நடத்தி வந்த மட்டரகமான ஒரு கவியரங்கத்தில் சேர்ந்து தாமும் கவி பாடக் கற்றார். அவள் கூட்டுறவு கூடாது என்று தாசுவின் பெற்றோர்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவர் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. கடைசியில் நதேர் சாந்த் என்ற பிரபல கவி அவரைக் கண்டித்து அந்தக் கவியரங்கத்திலிருந்து விலகச் செய்தார். பிரகு தான் 'பாஞ்சாலி' நாடகக் கோஷ்டி ஒன்றை ஆரம்பித்தார் தாசு ராய்.

அருகில் ஒரு கிராமத்தில் சந்நியாசி சக்கரவர்த்தி என்று ஒருவர் இப்படிப் 'பாஞ்சாலி' கோஷ்டி ஒன்று நடத்தி வந்தார். அவர் தாசு ராய் 'பாஞ்சாலி' எழுதுவதில் தேர்ந்தவர் என்று கேள்விப்பட்டார். தாம் எழுதிய 'ஆகமனி' என்ற காவிய நாடகத்தைத் தாசுவிடம் எடுத்துச் சென்றார். தாசு ராய் அதைப் படித்து மிகவும் மகிழ்ந்தார். அதற்குப் பாயிரமாக ஒரு பாடலும் அளித்தார். அதில் சக்கரவர்த்தியின் கவிநயத்தைப் பாராட்டி அவருக்கு வணக்கம் தெரிவித்திருக்கிறார்.

பிரகு சக்கரவர்த்தி தம் 'பாஞ்சாலி' கோஷ்டியைக் கலைத்துவிட்டுத் தாசு ராயுடன் சேர்ந்தார். தாசு ராய் பாரதத்திலிருந்து சில உபாக்கியானங்களைக் காவிய நாடகமாக்கிப் 'பாஞ்சாலி' நடத்தி வந்தார். அதில் தாசு ராய் பாடச் சக்கரவர்த்தி மிருதங்கம் வாசிப்பதை அந்த நாளில் மக்கள் பிரமாதமாகப் பாராட்டி வந்தார்கள். நாளுக்கு நாள் இந்தக் கோஷ்டி பிரபலம் அடைந்து வந்தது. அதில் நீலமணி என்ற பிடில் வாத்தியக்காரர் ராக ஆலாபனை செய்தால் போதும்; எல்லாரும் மெய்மறந்து விடுவார்களாம். சக்கரவர்த்திக்குப் பிரகு சியாம் என்பவர் மிருதங்கத்தில் பெயரெடுத்தார்.

அந்தக் காலத்தில் 'பாஞ்சாலி' நாடக பாத்திரங்கள் பெரும்பாலும் பண்டிதர்களிடம் படித்தவர்கள். தம்மை அவர்கள் அறிமுகப்படுத்திக்கொள்ளும் முறையே அலாதி; உதாரணமாக, 'ராவண வதம்' என்ற 'பாஞ்சாலி' நாடகத்தில் ஹநுமானாக நடிப்பவன் அந்தணன் வேஷத்தில் தோன்றும்போது, "நான்தான் விசுவம்; ஸ்ரீ ராம சிரோமணியின் சிஷ்யன்; லட்சுமீ காந்த நியாயபூஷணரின் மாணவன்" என்றெல்லாம் சொல்வது வழக்கம். நாடகத்துக்கிடையில் அந்தக் காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றிப் பரஸ்பரம் தமாஷாக விசாரித்துக்கொள்வார்கள்.

ஒரு சமயம் ராம சிரோமணி என்ற பண்டிதர் தாசு ராயைப் பார்த்து, "அப்பா, ராமப் பிரசாத் பக்தர்; தவச் சிரேஷ்டர்; அருள் கவி; அவர் பிரமாதமாகப் பாடி

ஞர் என்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. நீயோ சாதாரண மனிதன்; அப்படியிருந்தும் அவருக்கு எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை உன் பாடல்கள்'' என்று பாராட்டினார்.

அதற்குத் தாசு பணிவாகவே, ''நானும் அருள் பெற்றவன்தான்; முக்கண் படைத்திருந்தும் தம் தலையில் உள்ள கங்கையைச் சிவபெருமான் காண முடியவில்லை. ஆனால் இரண்டு ஊனக்கண் மட்டுமே இருந்தும் என் கண்ணெதிரே சிரோமணி காட்சியளிப்பதைக் காண்கிறேன். தங்கள் அருள் ஒன்றே போதாதா?'' என்பார். தாசு ராய் இளவயதில் சிரமப்பட்டதால் அதிக காலம் ஜீவித்திருக்கவில்லை. சுமார் 50 வயது இருக்கும்; ஒரு நாள் துர்க்கா பூஜையின் போது காசிம்பஜாரில் ராஜ கிருஷ்ண ராயர் என்பவர் வீட்டில் கச்சேரி ஒன்று நடத்திவிட்டுப் பௌர்ணமிக்குப் பின் வீடு திரும்பினார். அன்று ஜுரத்தில் படுத்தவர்தான். அப்புறம் எழுந்திருக்கவேயில்லை.

அவர் இறந்த பிறகு அவர் தமையனார் பிள்ளை இந்தப் 'பாஞ்சாலி' கோஷ்டியை நடத்தி வந்தார். தாசு ராய் காலத்தில் இருந்த மற்றப் 'பாஞ்சாலி'ப் பாடகர்களில் கோவிந்த அதிகாரி என்பவரும், ஜனரஞ்சகமான சாகித்தியங்களைக் கட்டுவதில் கிருஷ்ணதமன கோஸ்வாமி என்பவரும் பெயர் பெற்று விளங்கினார்கள். பிரபல வடமொழிப் பண்டிதரான ஈசுவர சந்திர வித்தியாசாகரர் சமூகச் சீர்திருத்தத்துக்காகப் பாடுபட்டு வந்தது அந்த நாளில்தான். அவருடைய முற்போக்கு இயக்கத்துக்குத் தாசு ராய் முதலியோரின் 'பாஞ்சாலி' நாடகங்கள் பெரிதும் துணை புரிந்தன.

கடைக்காரர் யுக்தி

ஒரு கடையில் பலபேர் சரக்கு வாங்குவதை நிறுத்திவிட்டார்கள். ஆனால், பல மாதமாகியும் தங்கள் பாக்கியைச் செலுத்தவில்லை. போடும் கடிதங்களுக்குப் பதிலும் தருவதில்லை. கடைக்காரர் ஒரு யுக்தி செய்தார். அவர்களுக்கு மீண்டும் அனுப்பிய பில்லில் அவர்களுடைய பாக்கியைப் போல் இரண்டு மடங்கு தொகையைப் பாக்கியாகக் குறிப்பிட்டார்.

யுக்தி பலித்தது. சிலர் டெலிஃபோனில் இவரைக் கூப்பிட்டார்கள்; சிலர் நேரிலேயே வந்துவிட்டார்கள். ''எப்படி இரண்டு மடங்கு தொகையைப் பாக்கியாகக் குறிப்பிடலாம்?'' என்று சீறினார்கள்.

''ஏதோ தவறுதல். மன்னிக்க வேண்டும். ஆனால், ரொம்ப நாள் பாக்கி. ஏதாவது கொஞ்சம் பணம் கொடுத்தால் தேவலை'' என்றார் கடைக்காரர்.

—'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

யுத்தக் கைதி பேட்டி

★

கொரியா போரில் யுத்தக் கைதிகள் பரிவர்த்தனை விஷயம் மிகவும் சிக்கல் தருவது. விரும்பாத கைதிகளைத் திருப்பி அனுப்ப முடியாது என்று ஐ நா. சபை சொல்லியது. சர்வதேச சம்பிரதாயப்படி இது சரியல்ல என்று சீனக் கம்யூனிஸ்டுகள் சொன்னார்கள். 16 மாத காலம் போர் நிறுத்தம் ஏற்படாமல் இதனாலேயே தடைப்பட்டது. கடைசியில் ஒரு சமரசம் உண்டாயிற்று. 'திரும்ப விரும்பாத கைதிகளை எதிரி சர்க்காரின் பிரதிநிதிகள் சந்தித்துச் சமாதானம் சொல்லிப் பார்க்கலாம். அதன்மேல் மனம் மாறித் திரும்ப விரும்புகிறவரை மட்டும் திருப்பி அனுப்பலாம்' என்பது தான் அந்தச் சமரசம். இப்படி முதல் முதலாகச் சில கைதிகளைச் சீனக் கம்யூனிஸ்டு சர்க்காரின் பிரதிநிதிகள் பேட்டி கண்ட காட்சி இது. கம்யூனிஸ்டு சீனாவிலிருந்து வந்து போரிட்டுச் சிறைப்பட்ட இந்தக் கைதிகள், மறுபடியும் தாய்நாட்டுக்குச் செல்ல இவ்வளவு பிடிவாதமாய் மறுப்பதன் காரணந்தான் மிக்க ஆச்சரியமாயிருக்கிறது.

500 சீனக் கைதிகளை விசாரித்து விளக்கம் தரப் பிரத்தியேகமான கூடாரங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள். பின்னால் நடுநிலை வகிக்கும் இந்தியர்கள் தங்கியுள்ள கிராமம். அங்கே இன்னும் 22,000 சீனக் கைதிகள் கையிலுள்ள சோற்றுத் தட்டையும் சமையலறைக் கதவையும் தட்டிக் கொண்டே, "மா-சே-துங் சாக!" என்று கூவிக்கொண்டிருந்தார்கள்.

சமீபத்தில் ஒரு நாள் முதல் முதலாக இந்தமாதிரி விசாரணை முறை கொரியாவில் தொடங்கியது. கம்யூனிஸ்டு கட்சியாரின் 'விளக்கம்' முதலியவற்றைக் கேட்ட பிறகு, இந்தக் கைதிகள் இரண்டு பக்கத்துக் கதவுகளில் ஏதாவது ஒன்றின் வழியாக வெளியேற வேண்டும். ஒரு பக்கம் 'கம்யூனிஸ்ட் சீனா'வுக்குச் செல்லும் வழி; இன்னொரு பக்கம் சியாங்-கே-ஷேக் ஆட்சி செலுத்தும் 'டைவான்' அல்லது ஃபார்மோஸா தீவுக்குச் செல்லும் வழி. யுத்தக் கைதிகள் தங்கியிருந்த அந்த விடுதியில் ஒரே இரைச்சலாக இருந்தது. ஆனாலும் அங்கே விசாரித்து விளக்கம் தரத் தயாராக இருந்த கம்யூனிஸ்டு பிரமுகர்கள் 96 பேரும் நம்பிக்கையோடு தான் பொழுது போக்கி வந்தார்கள். கைதிகள் ஒவ்வொருவராகக் கூடாரத்துக்குள் நுழைந்தார்கள். அப்போது கம்யூனிஸ்டுகள் புன்சிரிப்போடு அவர்களைப் பார்த்தார்கள். உள்ளே நாற்காலியில் அமரும்படி சொன்னார்கள். யுத்தக் கைதிகளைப் பலவந்தமாக அடக்கி வைத்திருப்பதாக அவர்கள் ஏற்கனவே பிரசாரம் செய்திருந்தால், அதுவே பலித்திருக்கும் என்ற நம்பிக்கையினால் அவர்க

காப்பிரைட்: டைம் (ஆங்கிலம்: 26-10-'53), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

ளுக்கு ஆறுதல் ஏற்படும்படி, "இத்தனை நாள் உங்களைத் துஷ்டர்கள் சிலபேர்...." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார்கள்.

உடனே கைதிகள் காலைத் தரையில் உதைத்து, தேசியச் சீனப் பாடல்களைப் பாட ஆரம்பித்தார்கள். ஒருவன் தன் முகப்பருவைப் பிதுக்கி அதிலிருந்த சீழைக் கம்யூனிஸ்டு பிரமுகர்களின்மேல் தெளித்தான். இன்னொருவன் கொஞ்ச நேரம் அவர்கள் சொன்னதைக்கேட்டுவிட்டுஅருவருப்போடு அவர்களை நோக்கி, "ஏன் ஐயா, வீணாக வந்து எங்களைத் தொந்தரவு பண்ணுகிறீர்கள்? மற்றவர்கள் மா-ஜோங் விளையாட்டு ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். நான் போகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டான். இப்படியெல்லாம் நேரும் என்று கம்யூனிஸ்டுகள் எதிர்பார்க்கவேயில்லை. 7-ஆம் எண்ணுள்ள கூடாரத்தில் தேசியச் சீனச் சின்னங்களைச் சட்டையில் அணிந்து கொண்டு ஒரு சீனக் கைதி மூன்று கம்யூனிஸ்டு பிரமுகர்களின் எதிரே நின்றுகொண்டிருந்தான். அவர்கள் பச்சைப் பழுப்புக் கம்பளியில் 'யூனிஃபார்ம்' உடுத்து வேர்க்க விறுவிறுக்க உட்கார்ந்திருந்தார்கள்.

நடுநிலைக் கமிஷனில் தலைமை வகிக்கும் இளம் இந்தியத் தலைவர் அவனைப் பார்த்து, "நாங்கள் போலந்து, செக்கோஸ்லோவாகியா, ஸ்வீடன், ஸ்விட்ஜர்லாந்து, இந்தியா இந்த நடுநிலைமை நாடுகளின் பிரதிநிதிகள். இதோ சிலபேர் உங்களை விசாரித்துச் சில விஷயங்களை விளக்குவார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலாவது உங்களைப் பலவந்தப்படுத்துவதுபோல் பட்டால், நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை" என்றார்.

கம்யூனிஸ்டு பிரமுகர்: சீன மக்களின் சார்பில் உங்களை மறுபடியும் தாய் நாட்டுக்கு அழைத்துப் போக வந்திருக்கிறோம்.

சீனக் கைதி: நான் டைவானுக்குத்தான் போகப் போகிறேன். உன் பேச்சைக் கேட்கத் தயாராயில்லை.

கம்யூனிஸ்டு பிரமுகர்: (சிரித்த முகத்துடன்) சற்றுக் கேளேன். நீ ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறாய் என்று தெரிகிறது. உன் தாய் தகப்பனார் நீ எப்போது வருவாய் என்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். நீ சிறையில் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறாய் என்று தெரிகிறது. நம் மக்களுக்கு எதிராக நீ ஏதாவது செய்திருந்தாலும் அதையெல்லாம் மன்னித்து விடத் தயாராக இருக்கிறோம். வீட்டுக்கு வருவதாகத் தீர்மானிக்கும் பட்சத்தில் அதோ அந்தப் பக்கம் புறப்பட்டுப் போகலாம். ('சீனா' என்று எழுதியிருக்கும் கதவைக் காட்டுகிறார்.)

சீனக் கைதி: (முகம் சிவக்கக் கத்துகிறான்) என் தாயையும் தகப்பனாரையுந்தான் நீங்கள்-கம்யூனிஸ்டுகள் - கொன்றுவிட்டீர்களே! என்னவோ பிரமாதமாகச் சீன மக்கள் சார்பில் வந்திருப்பதாகச் சொல்கிறீர்களே! சீன மக்களாம்! போ, ஐயா! நான் டைவானுக்குத்தான் போகப் போகிறேன்.

கம்யூனிஸ்டு பிரமுகர்: (நிற்கிறார்; முகத்தில் சிரிப்பில்லை.) அந்த மாதிரி பேசாதே. பின்னால் உனக்கும் உன் சந்ததியாருக்கும் நன்மை ஏற்படும்படி பார்த்துக் கொள்.

டைவானுக்குப் போனல் உனக்கு விமோசனமே இல்லை. அங்கே உண்மைச் சுதந்தரம்....

சீனக் கைதி: (சட்டைக் கைகளை மேலுக்கு மடித்து விட்டுக் கொண்டு, கம்யூனிஸ்டு எதிர்ப்புக் குறிகளை அங்கே பச்சைகுத்தியிருப்பதைக் காட்டுகிருன்.) சுதந்தரமா! நானே இஷ்டப்பட்டா கொரியாவில் சண்டை செய்ய வந்தேன்?

கம்யூனிஸ்டு பிரசாரகர்: சீனு பொருளாதாரத் துறையில் எவ்வளவோ முன்னேறி வருகிறது. அங்கே உனக்குத் தேவையான வேலை கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

சீனக் கைதி: முன்னேற்றமாம் முன்னேற்றம்! எப்போதும் இந்த வாயளப்புத்தான் பிரமாதமாக இருக்கிறதே யொழிய, வாஸ்தவமாக ஒன்றையும் காணவில்லை.

கம்யூனிஸ்டு பிரசாரகர்: இப்போது நீ நேரே வந்து பாரேன்; எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்று தெரியும்.

சீனக் கைதி: சுத்தப் புளுகு! போதும், நிறுத்து. நான் டைவானுக்குத்தான் போகப் போகிறேன்.

கம்யூனிஸ்டு பிரசாரகர்: இந்த ஆள் போகட்டும்; இன்னொருவனைக் கூப்பிடுங்கள்.

சீனக் கைதி: ருஷியாவுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்த நாய்க் கும்பலடா நீங்கள்! அடிமைகள்!

இந்தியத் தலைவர்: ஐந்து நிமிஷம் யோசிக்க அவகாசம் தருகிறோம். நீ எங்கே போகவேண்டுமோ அதை உன் இஷ்டம் போல் தீர்மானித்துச் சொல்லலாம்.. நீ..

சீனக் கைதி: (கூவுகிருன்) டைவான் வழி எந்தப் பக்கம்? நான் அங்கேதான் போகப் போகிறேன். ஐ. நா. பிரதிநிதியிடம் தெரிவித்துவிடுங்கள். ('டைவான்' என்று எழுதியுள்ள கதவு வழியாகப் புறப்பட்டுப் போகிருன்.)

வயதுக்கு ருசு

ஹைஸ்கூல் பள்ளிக்கூடத்துத் தலைவனுன நான், அரிச்சுவடி வகுப்பு வாத்தியாருக்கு, கண்டிப்பான ஓர் உத்தரவு போட்டேன். "பள்ளிக்கூட வயது வராத குழந்தைகளைப் பலர் சேர்த்துவிடுகிருர்கள். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. குழந்தையின் வயது ருசுவாக ஜனன ஸெர்ட்டிஃபிகேட் வந்தாலொழியச் சேர்த்துக்கொள்ள வேண்டாம்" என்பதுதான் அந்த உத்தரவு.

ஒரு குழந்தையின் ஜனன ஸெர்ட்டிஃபிகேட் மட்டும் வாத்தியாருக்குக் கிடைக்கவேயில்லை. அதன் தாய்க்கு வாத்தியார் இதுபற்றி எழுதினுர்.

தாய் எழுதிய பதில் இது: "என் குழந்தையின் ஜனன ஸெர்ட்டிஃபிகேட் என்னிடம் இல்லை. ஆனல், அவள் வயது நிச்சயமாக ஆறுக்குக் குறைவில்லை. ஏனென்ருல், அவளுடைய தம்பிகளும் தங்கைகளுமாக ஆறு குழந்தைகள் என் வீட்டிலே இருக்கின்றன—தங்கள், மிஸஸ் பி—"

—ரிச்சர்ட் ஸி. டன், 'காரொனெட்.'

புரஞ்சனன் கதை

நாரத முனிவர் பிராசீன பர்ஹி என்ற அரசனுக்கு ஞானத்தைப் புகட்டப் புரஞ்சன மன்னனின் வரலாற்றைக் கூறலானார்:

"முன்காலத்தில் புரஞ்சனன் என்று ஒரு மன்னன் இருந்தான். அவன் மிகவும் படித்தவன். அவனுக்கு 'அவிஞ்ஞாதநாமா' (பிறரால் அறியப்படாத பெயர் உடையவன்) என்ற ஒரு நண்பன் இருந்தான். இந்த நண்பனின் செயலைப் பிறர் அறிய முடியாது. அரசன் தனக்கேற்ற இருப்பிடம் தேடி உலகம் முழுவதும் சுற்றினான். அப்போது நண்பன் அவனை விட்டுப் பிரிந்து எங்கோ சென்றுவிட்டான். இப்படிச் சுற்றியும் அவனுக்கேற்ற நகரத்தைக் காணவில்லை. ஆகவே, மிகவும் வருத்தமுற்றிருந்தான். ஒரு நாள் இமாலயத்துக்குத் தெற்குப் பக்கமுள்ள சிகரத்தில் ஒரு பட்டணத்தைக் கண்டான். அதில் எல்லா லட்சணங்களும் அமைந்திருந்தன. அகழியும் கோட்டைச் சுவர்களும் அதைச் சூழ்ந்திருந்தன. நடுவே, தங்கம் வெள்ளியால் ஆன வீடுகள் இருந்தன. அவைகளில் நவரத்தினம் பதித்திருந்தது. அழகிய தோட்டங்களில் தளிர் தழைத்த மரங்களில் துள்ளிக் குதித்துப் புள்ளினங்கள் கொஞ்சிக் குலாவின. அங்கே கூவும் குயில்களின் இன்குரலைக் கேட்டு வழிப்போக்கர்கள், அந்த நகரமே தம்மை அன்போடு அழைப்பதாகக் கருதி உள்ளே சென்று, இன்பத்தில் ஆழ்ந்தார்கள். அந்தப் பட்டணத்துக்கு ஒன்பது வாயில்கள் இருந்தன.

"புரஞ்சனன் அதன் அழகில் ஈடுபட்டு நிற்கும்போது, தன் முன் ஒரு பெண் வருவதைத் தற்செயலாகக் கண்டான். அவளைச் சுற்றிப் பத்துப் பணியாட்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரோடும் அழகிய

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

நூறு பெண்கள் வந்தார்கள். ஐந்து தலை நாகம் ஒன்று அவளைச் சுற்றிக் காவல் புரிந்தது. காலில் சிலம்பு ஒலிக்க அவள் நடந்து வரும் போது தேவமாதோ என்று பலரும் நினைத்தார்கள். அவளுடைய அழகை எடுத்துக் காட்டும் மூக்கும், அரும்பிய பற்களும், அழகிய கன்னங்களும் அவளுடைய முகத்தைச் சிறப்பித்தன. மேலே போர்த்த மெல்லிய பட்டாடையால் தன் மேனியை அவள் நாணத்தினால் இடையிடையே மூடி வந்தாள். அவளுடைய கடைக்கண் தன்மேல் பட்டவுடனே அரசன் தன் நிலை இழந்தான். அந்தப் பெண்ணைப் பார்த்துக் கேட்கலானான்:

"'நீ யாருடைய பெண்? எங்கிருந்து வருகிறாய்? இவர்களெல்லாரும் யார்? உன் முன்னே இந்தப் பாம்பு எதற்காக வருகிறது? நீ என்னோடு இந்த நகரத்தில் இன்புற்று வாழலாம். ஏன் நாணி நிற்கிறாய்? நிமிர்ந்து பார்த்து இனிய வார்த்தை ஏதேனும் சொல்லேன்' என்றான்.

"இதைக் கேட்டதும் அவள் புன்னகையுடன், 'அரசே, என் தந்தை யாரோ எனக்குத் தெரியாது. நான் இந்த நகரத்தில் வசிக்கிறேன்; அவ்வளவுதான் தெரியும். நான் இங்கே சுகமாகவே இருக்கிறேன். இவர்கள் என்னுடைய தோழர்கள். இந்தப் பாம்பு நான் உறங்கும்போது இந்த நகரத்தைக் காத்து வருகிறது. தாங்கள் அதிருஷ்டவசத்தால் இங்கே வந்தீர்கள். தங்களை மணக்கிறேன். எல்லாருக்கும் உதவி புரிவது இல்லறமே. தங்களைப் போன்றவரைக் கணவராகப் பெற யார்தான் விரும்பமாட்டார்கள்?' என்றாள்.

இப்படிப் பரஸ்பரம் சம்மதித்து அவர்கள் மணம் செய்துகொண்டார்கள். அந்த நகரில் 'நிர்வாக்'. 'பேசஸ்கிருது' என்று இரண்டு

குருடர்கள் இருந்தார்கள். அரசன் அவர்களுடைய உதவி கொண்டே ராஜ்யத்தில் எல்லாக் காரியங்களையும் செய்துவந்தான். எப்போதும் அந்தப்புரத்திலேயே அரசியோடும் மக்களோடும் இன்புற்று வாழ்ந்து வந்தான். அரசி என்ன விரும்பினாலும் அதைத் தவறாமல் அளித்துவந்தான். அவனை விளையாட்டுப் பொம்மை போலவே அவள் ஆட்டிவந்தாள். ஒரு நாள் அரசன் வேட்டையாடி அரண்மனைக்கு வந்தவுடன் அரசியைக் காணாமல் தவித்தான். கணவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றதால் அவள் கோபங் கொண்டு தரையில் ஒரு மூலையில் படுத்துக் கிடந்தாள். அரசன் அவள் காலில் விழுந்து பல வாறாகக் கெஞ்சி அவளைச் சமாதானப்படுத்தினான். இப்படி ஒரு கண நேரமும் தன்னை விட்டு அகலாதபடி அவனை அவள் வசப் படுத்தியிருந்தாள்.

"கடைசியில் அரசனுக்கு முதுமை வந்துவிட்டது. இந்த நிலையில் சண்டவேகன் என்ற கந்தர்வ ராஜன் பல கந்தர்வர்களுடன் வந்து அந்த நகரத்தைக் கொள்ளையடிக்கலானான். பிரஜாகரன் என்ற அந்த ஐந்து தலைநாகம் அவர்களைத் தன்னால் முடிந்த அளவு தடுத்தது. ஆயினும் பல பகைவரோடு தனியே சண்டையிட்டதால் அது பலம் இழந்துவிட்டது. அரசன் இதை அறிந்து கவலைப்பட்டான். ஆயினும் இன்னும் பெண்மோகம் நீங்காததால் அந்தப்புரத்திலேயே இருந்தான். பகைவரால் உண்டாகும் பயத்தை உணரவில்லை.

"அதே சமயம் இன்னொரு தொல்லையும் ஏற்பட்டது: காலனுடைய பெண் தனக்கேற்ற கணவனை விரும்பி மூவுலகமும் சுற்றி வந்தாள். ஆனால் அவளுக்கேற்றவன் கிடைக்கவில்லை. ஆகவே, அவள் 'துர்ப்பகா' (துரதிருஷ்டசாலி) என்று பெயர் பெற்றாள். முடிவில் அவள் யவன அரசன் ஒருவனிடம் போய்த் தன்னை மணக்கும்படி வேண்டினாள். அவன் பிரம்மாவின் விருப்பத்துக்கிசைய ஒரு காரியம் செய்ய எண்ணி அவளைப் பார்த்துப் புன்னகையுடன் சொன்னான்:

"'நான் உனக்குத் தகுந்த கணவனைச் சமாதிமூலம் கண்டு உணர்ந்தேன். நீ அமங்களமாகவும் ஒருவருக்கும் பிடிக்காமலும் இருப்பதால் உலகத்தார் உன்னை விரும்புவதில்லை. ஆகவே, மறைவாக உலகத்தில் சுற்றிப் பல அநுபவங்களைக் கண்டு வா. எனக்குப் பயம் என்ற பெயருள்ள பெரிய சேனை ஒன்று இருக்கிறது. பிரஜ்வாரன் (எரிப்பவன்) என்று எனக்கு ஒரு சகோதரன் இருக்கிறான். நீ எனக்குச் சகோதரி. நீங்கள் இருவரும் என் சேனையுடன் மறைவாக வாருங்கள். நான் உங்கள் உதவியால் உலகத்தையே அழித்து விடுகிறேன்' என்றான். அந்தப் பெண்ணும் அதற்கு இசைந்தாள். அந்த யவன அரசனோடு சென்று உலகத்தை அழிக்கலானாள்.

"புரஞ்சனபுரத்திலும் புகுந்து இப்படியே செய்தாள். அரசன் எல்லாச் சொத்துக்களையும் இழந்தான். முதுமை மிகுந்ததால் மனைவியும் அவனை மதிக்கவில்லை. பணம் இராததால் மக்களும் பேரன்மாரும் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஊரில் நாளுக்கு நாள் துன்பம் அதிகரித்

த்து. ஒரு பக்கம் கந்தர்வர்களும் மறு பக்கம் துர்ப்பகா என்ற அந்தப் பெண்ணும் நாட்டைச் சூறையாடி வந்தார்கள். அந்த ஊரை விட்டே போய்விடுவது என்று அரசன் தீர்மானித்தான். இதற்குள் யவன அரசனின் சகோதரனுன பிரஜ்வாரன் அந்த ஊரை எரித்தான். வேறு வழியின்றி அரசன் உயிரை விடுவதென்றுமுடிவு செய்தான். ஆயினும் மனைவி மக்களை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் புலம்பினுன். 'நான் இறந்தால் என் மனைவி கஷ்டப்படுவாளே! பாவம், நான் போனபிறகு அவள் எப்படி வாழ்வாள்? என் குடும்பமே நடுக்கடலில் சிக்கித் தத்தளிக்கும் கப்பல்போல் திண்டாடும்' என்று யோசித்துக்கொண் டிருந்தான். அப்போது யவன அரசன் வந்து அவனைப் பலவந்தமாக இழுத்துச் சென்ருன். அந்த ஐந்து தலை நாகத்தையும் அவன் அரசனுடன் கட்டிப் பிடித்துச் சென்ருன். இந்த நிலையில்கூடப் புரஞ்சனன் தன் தோழன் அவிஞ்ஞாதனைப் பற்றி எண்ணவேயில்லை. பல ஆண்டுகள் இருள் சூழ்ந்திருக்கும் இடத்தில் இருந்து துன்பம் அநுபவித்தான். பழைய நினைவு போய் விட்டது; ஆனுலும் தன் மனைவியை மட்டும் அவன் மறக்கவில்லை. பிறகு, விதர்ப்ப தேசத்து அரசனுக்கு வைதர்ப்பி என்ற பெண்ணுகப் பிறந்தான்.

"அவளைப் பாண்டிய அரசனுன மலயத்துவஜன் தன் வீரத்தால் மணந்தான். அவளோடு வெகு காலம் இல்லறம் நடத்தினுன். பல மக்களைப் பெற்ருன். முடிவில் மக்களுக்கு ராஜ்யத்தைப் பகிர்ந்து கொடுத்தான். காட்டுக்குப் போய்ப் பகவான் நாராயணனைக் குறித்துத் தவம் செய்யப் புறப்பட்டான். வைதர்ப்பியை அவன் அழைக்காவிட்டாலும் அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்; தவம் செய்யும்போது அவனுக்குப் பணி விடை செய்து வந்தாள்.

"பாண்டியன் எப்போதும் பகவத் தியானத்தில் ஈடுபட்டு வந்தான். தன்னை மறந்த அந்த நிலையில் அவன் உடல் மரம்போல் அசைவற்று இருந்தது. எப்போதாவது விழித்துக்கொள்வான். கடைசியில் ஒரு நாள் சமாதியில் ஆழ்ந்தபடியே அவன் உயிரை விட்டான். ஆயினும் வைதர்ப்பி அவன் உயிரோடு இருப்பதாகவே எண்ணி உபசரணை செய்யலானுள். ஆனுல் அரசன் காலைப் பிடித்த போது அதில் உஷ்ணம் இராது போகவே அவன் இறந்ததை உணர்ந்தாள். 'ராஜரிஷியே, எழுந்திருங்கள். இந்தப் பூமியைத் திருடர்களிடமிருந்தும் பகைவரிடமிருந்தும் காப்பாற்றுங்கள்' என்று அவன் காலைப் பிடித்துக் கொண்டு பலவாருகக் கதறி அழுதாள்.

"கடைசியில், சிதையை அடுக்கிக் கணவனின் உடலை அதில் வைத்துத் தீ மூட்டினுள். பிறகு தானும் அந்தத் தீயில் குதித்து அவனேடு செல்லத் தீர்மானித்தாள். அப்போது முன் ஜன்மத்துத் தோழனை அவிஞ்ஞாதன் அவளுக்கு ஆறுதல் கூறலானுன்:— 'பெண்ணே, இறந்து கிடக்கும் இந்த அரசன் யார்? முன் பிறப்பில் உன்னேடு சுற்றி வந்த தோழனை என்னை நினைவிருக்கிறதா? பூமியில் இன்பம் அநுபவிக்க நீ என்னை விட்டு வந்தது தெரியுமா? நாம் இருவரும் மானச சரோவரத்

தில் அன்னங்களாக ஆயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து வந்தோம். நீ என்னை விட்டுப் பிரிந்த பிறகு ஒரு பெண்ணின் வலையில் சிக்கி, ஒன்பது வாயில்கள் உள்ள ஊரில் அடைபட்டுக் கிடந்தாய். அதனுலேயே இந்தக் கஷ்ட நிலை ஏற்பட்டது. நீ விதர்ப்ப அரசன் மகளுமல்ல; இந்த அரசன் உன் கணவனுமல்ல; இதெல்லாம் நான் ஏற்படுத்திய மாயை. உண்மையில் நமக்குப் பயமே இல்லை. நாம் இருவரும் ஒருவரே. ஒருவன் கண்ணுடியில் தன்னைக் கண்டால் என்ன வேற்றுமையோ அதுவேதான் நமக்குள்ள வேற்றுமையும்.'

"இதைக் கேட்டதும் புரஞ்சனன் தன் சுயநினைவை அடைந்து, இயல்பான இன்பநிலை எய்தினுன்.

"அரசே, நான் உங்களுக்கு ஜீவாத்மாவின் கதியையும், பரமாத்மாவின் செயலையுந்தான் கதையாக எடுத்துச் சொன்னேன்" என்று நாரத முனிவர் கூறி முடித்தார்.

குறிப்பு: இந்த உவமைக் கதையின் உட்கருத்தை விளக்கும் பின்கண்ட அர்த்தங்கள் பாகவதத்திலேயே இருக்கின்றன: புரஞ்சனன் - ஜீவாத்மா; அவிஞ்ஞாதன் - ஈசுவரன்; பட்டணம் - உடல்; ஒன்பது வாயில் - உடலிலுள்ள துவாரங்கள்; பெண் - புத்தி; பத்துப் பணியாட்கள் - ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும்; ஐந்து தலை நாகம் - ஐந்து செயல் புரியும் பிராணன்; குருடரான பட்டணத்து மக்கள் - கைகால்கள்; சண்டவேகன் என்ற கந்தர்வன் - வருஷம் (காலம்); காலக் கன்னி - முதுமை; யவன அரசன் - யமன்; பெண் ஆணுகவும் ஆண் பெண்ணுகவும் மாறி மாறிப் பிறப்பதைக் காட்ட வைதர்ப்பி - மலயத்துவஜன் கதையைக் கூறினுர் நாரதர். முடிவில் கடவுளின் அருளால் ஜீவன் நற்கதி அடைகிறது.

நெட்டையரும் குட்டையரும்

ஃபிலிப்பைன் தீவின் பிரபல தலைவர் கார்லோஸ் பீ. ரொமோலோ. அவருடைய உயரம் 5 அடி 3 அங்குலந்தான். இவ்வளவு குள்ளமாயிருந்தாலும் அவருக்கு நல்ல நகைச்சுவை உண்டு. இரண்டாவது உலக யுத்தத்தின்போது லெயிட் முற்றுகைபற்றி அவரை ஒருவர் விசாரித்து, "அப்போது தளபதி மெக்கார்த்தர் முழங்காலளவு நீரில் இறங்கிக் கரைக்கு நடந்தாராம்; அவருக்குப் பின்னுலேயே நீங்கள் நடந்தீர்களாமே. உண்மையா?" என்று கேட்டார்.

"பத்திரிகையில் போட்டிருப்பதையெல்லாம் நம்பாதீர்கள். இந்தச் செய்தியின்படி மெக்கார்த்தருக்கு முழங்காலளவு இருந்த நீரில் நான் நடந்திருந்தால், அது என் தலைக்கு மேலே போயிருக்கும்; நான் முழுகியிருப்பேன்!" என்று பதிலளித்தார் ரொமோலோ.

—'சிக்காகோ ஸன் - டைம்ஸ்'

வழுக்கைத் தலையர்

★

வழுக்கையின் காரணம் என்ன? அதற்கு வைத்தியம் உண்டா? வழுக்கையால் என்னவாவது கெடுதல் விளையுமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் ஜே. வி. ஷெப்பர்டு என்பவர் 'ஹைஜியா' என்ற அமெரிக்க வைத்தியப் பத்திரிகையில் எழுதியுள்ள இந்தக் கட்டுரையில் பதில் தருகிறார்.

காதல், பணம் இந்த இரண்டையும் போன்றது தலைமயிர். அது இருப்பதும் தொல்லை; இல்லாமற் போவதும் தொல்லை. தலைமயிர் இருக்கும்போது, அதன் நீளம், நிறம், வகிட்டழகு இவை பற்றியெல்லாம் கவலைப்படுகிறோம். அது போய்விட்டால், அதைத் திரும்பவும் பெறுவதற்காக நம்மால் ஆனமட்டும் பாடுபடுகிறோம். சோப்பு, பிரார்த்தனை, வைட்டமின் இவை எல்லாம் பயன் படாமற் போனால்தான் என்ன; எதற்காக நாம் மனஞ் சோர வேண்டும்?

தலையிலே வழுக்கை விழுவதைக் குணப்படுத்த முடியுமா, முடியாதா? வழுக்கை விழுந்ததன் காரணத்தைப் பொறுத்திருக்கிறது அது குணமாவதும் குணமாகாததும். உடம்பின் 'ஸெல்' என்ற அணுக்களெல்லாம் கிழடு தட்டிச் சிதைந்து போனதால், தலையில் வழுக்கை விழலாம். இதைக் குணப்படுத்த முடியாது. வம்ச பரம்பரையாக இளம் வயதிலேயே வழுக்கை ஏற்படலாம். இதற்கும் பரிகாரம் கிடையாது. சூரியோதய அஸ்தமனங்களைப் போலவே, குறிப்பிட்ட வயதில் வம்ச வழுக்கை தானாகவே தோன்றிவிடுகிறது. மனத்திலே ஏற்படும் 'ஷாக்' என்ற அதிர்ச்சியாலோ, 'வேஸ்டிங் டிஸீஸ்' என்ற உடம்புருக்கி நோய்களாலோ ஏற்பட்ட வழுக்கையாக இருந்தால், நாம் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. சரியான சிரத்தையுடன் சிகிச்சை செய்துகொண்டால், மீண்டும் தலைமயிர் வளர்ந்துவிடும்.

வம்சம்

ஜீவ வர்க்கங்களிலே சில மோஸ்தர் (பயலாஜிக் பாட்டர்ன்) உண்டு என்றும், மனிதர்களில் வழுக்கைத் தலை மோஸ்தர் இப்படித்தான் ஏற்படுகிறது என்றும் காரட் எஸ். மில்லர் என்பவர் சொல்லுகிறார். வண்ணாத்திப் பூச்சியின் வர்ணச் சிறகு, சிறுத்தைப் புலி

அதிர்ச்சி

யின் புள்ளி, வேங்கைப் புலியின் வரி இவை போலவே வழுக்கையும் சிலருக்குச் சகஜமாக ஏற்பட்டு விடுகிறதாம். "சில குரங்குகளுக்கு வழுக்கை விழுகிறதே; அவை என்ன, தொப்பி அணிகின்றனவா? அல்லது விலைவாசிகளைப்பற்றித் தான் கவலைப்படுகின்றனவா? இல்லையே" என்கிறார் மில்லர்.

வயதாகு முன்பு வழுக்கை விழுவது வம்ச பரம்பரையான வழுக்கையே என்பதில் மட்டும் சந்தேகமே இல்லை. வழுக்கைத் தலையுள்ள இருபத்திரண்டு பேரின் குடும்பங்களை நிபுணர்கள் ஆராய்ந்து பார்த்தார்கள்; நாலைந்து தலைமுறைகளாகத் தகப்பனிடமிருந்து மகனுக்கு வார்சுக் கிரமமாக வழுக்கை வந்திருப்பது தெரிந்தது. அந்த வம்சத்துப் பெண்களுக்கு இப்படி வழுக்கை தோன்றவில்லை. ஆனால், அவர்களுடைய ரத்த நிணம் (ஜெர்ம் ப்ளாஸ்மா) இந்த வழுக்கையின் அம்சத்தை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறதாம். இதனால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளின் தலை வழுக்கையாகி விடுகிறது. மில்லர் சொல்லும் பொதுவான வழுக்கை மோஸ்தரும் இதேமாதிரி வார்சுக் கிரமமாக வருவதுதான்.

நீண்டகாலமாக வாட்டிவரும் நரம்புத்தளர்ச்சி, உடல் சோர்வு, கர்ப்பம் இவைகளும் கபஜ்வரம், பரங்கிப் புண், க்ஷயம் இவை போன்ற தொத்து நோய்களும் வழுக்கைக்குக் காரணமாகலாம். தேக ஆரோக்கியம் திரும்பினால், இந்த வழுக்கை தானாகவே மாறி விடும். போதிய ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும்; சரியான உணவு உட்கொள்ள வேண்டும்; உடம்பில் சற்று வெயில் படவேண்டும். இவைகள்தான் முக்கியம். தலைக்கு மருந்துகள் தேய்த்துக்கொள்வது அவ்வளவு முக்கியம் அல்ல.

தலைமயிர் வளர்வதைக் குழாயற்ற சுரப்பிகள் (எண்டாக்ரீன் க்ளாண்ட்ஸ்) பாதிக்கின்றனவா? ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலில் மயிர் வளர்வதில் உள்ள வித்தியாசத்தைப் பார்க்கும்போது, அவை இப்படிப் பாதிக்கின்றன என்றே எண்ண வேண்டியிருக்கிறது. ஆயினும், 'ஹார்மோன்' என்ற சுரப்புத் திரவங்களைக் கொண்டு வழுக்கைக்குச் சிகிச்சை செய்து பார்த்ததில் பயன் ஏற்படவில்லை. 'டெஸ்டோஸ்டெரோன்' என்ற ஆண் சுரப்புத் திரவத்திலிருந்து எடுத்த தைலம் (ஆயின்ட்மெண்ட்) ஒன்றை ஆண் அல்லது பெண்ணின் வயிற்றில் பூசியதில் ரோமம் வளர்ந்தது. ஆனால், தலை வழுக்கையில் அதைப் பூசிய போது பலன் ஏற்படவில்லை. 'பிட்யூட்டரி க்ளாண்ட்' என்ற சளிச்சுரப்பி நோயுறுவதால் ஏற்படும் வழுக்கையைப் 'பிட்யூட்டரி' என்ற சுரப்புத் திரவத்தைக் கொண்டு சிகிச்சை செய்து குணப்படுத்திவிட முடியும். ஆனால், 'இதே சுரப்புத் திரவத்தை ஆரோக்கியமான 2,000 பேருக்குப் பிரயோகித்ததில், அவர்களுடைய வழுக்கை தீரவில்லை.

'மைக்ரோப்ஸ்' என்ற அணுக் கிருமிகளால் நம் தலையில் வழுக்கை விழக் கூடும். ஒரு நிபுணர் ஆராய்ந்து பார்த்ததில், நூற்றுக்குத் தொண்ணூறு வழுக்கைத் தலையரின் மண்டையில் 'ஸெபரீ' என்ற கொழுப்புப் பசை நோய் உண்டாயிருக்கிறது என்று தெரிந்தது. அவர்களுடைய மண்டையில் 'ஸெபேஷஸ் க்ளாண்ட்ஸ்' என்ற கொழுப்புப் பசைச் சுரப்பிகள் மிதமிஞ்சிய பசையைச் சுரக்கின்றனவாம். அந்தப் பசை ஒரு படலமாகத் தலையில் படிவதால், தலைமயிர் வளர்வது தடைப்படுகிறதாம். இந்த மாதிரி மண்டைகளில் பற்பல அணுக் கிருமிகள் சௌக்கியமாய்க் குடியேறி வாழத் தொடங்கி விடுகின்றன. இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகத் தோன்றினால் உடனே சிகிச்சை செய்துகொள்வது அவசியம். நிபுணர்கள் இதற்குப் பல விதமான சிகிச்சைகளை ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள். அவைகளில் சில சிகிச்சைகள் நல்ல பலன் தருவதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஏற்கனவே, விழுந்த வழுக்கையை இந்தச் சிசிச்சைகளால் குணப்படுத்த முடியாது. ஆனால், தாமதியாமல் இந்தச் சிகிச்சைகளைத் தொடங்கினால் மேலும் மயிர் உதிராமலும் வழுக்கை படராமலும் தடுக்கலாம்.

கவலை

சிந்தனை

தலைமயிரையும் மண்டையையும் தினந்தோறும் ஜாக்கிரதையாய்ச் சுத்தம் செய்துகொள்ளுவது அவசியம். நமக்கென்று தனியாய்ச் சீப்பு, பிரஷ் இவைகளை வைத்துக்கொள்ள வேண்டும். பல பேருக்குப் பொதுவான சீப்பு, பிரஷ் இவைகளை உபயோகிக்கக் கூடாது. 'மெக்கானிக்கல் வைப்ரேட்டர்' என்ற யந்திரத்தைக் கொண்டு மண்டையைப் பலமாய்ப் பிடித்துவிட்டுக் கொள்வதைவிட, விரல்களின் நுனியால் மெதுவாகப் பிடித்து விட்டுக் கொள்வதே மேல். மிகவும் பலமாய்த் தேய்த்துக்கொண்டால், திரும்பவும் வளரும் மயிரை விட உதிர்வதுதான் அதிகமாயிருக்கும். மண்டையில் எண்ணெய்ப் பசை தோன்றினால், வாரத்துக்கொரு முறை சோப்பைப் போட்டுத் தேய்த்துக் கழுவவேண்டும். பிறகு துளியும் சோப்பின் வழவழப்பு இல்லாமல் நன்றாய்த் துடைத்துக் கொள்வது அவசியம்.

தலையை இப்படியெல்லாம் கவனித்துக் கொள்வதோடுகூட, பொதுவாக உடல் ஆரோக்கியத்தையும் பாதுகாத்துக்கொள்வது முக்கியம். சோர்வோ, நரம்புத் தளர்ச்சியோ ஏற்படாதபடி நடந்து கொள்ளவேண்டும். உணவு விஷயத்தில் கவனமாயிருக்கவேண்டும். கொஞ்சம் கொஞ்சம் உடம்பில் வெயில் படவேண்டும்.



ஜீவ மோஸ்தர்

நமக்குத் தலைமயிர் இருந்தாலும் கவலை; இல்லாவிட்டாலும் கவலையாயிருக்கிறது. எண்ணற்ற மருந்து வியாபாரிகள், நாவிதர், அழகு நிபுணர்கள் இவர்களெல்லாம் நம் தலைமயிருக்காக ஓயாமல் பாடுபடுகிறார்கள். உயிரற்ற இந்த விசித்திரப் பொருளின் வளர்ச்சிக்காக நாம் என் இவ்வளவு நேரத்தையும் பணத்தையும் செலவிடுகிறோம், பெருங் கவலைப்படுகிறோம்?

'தலைமயிர் இருப்பது அழகு தருகிறது; ஆணுக்கும் பெண்ணுக்கும் பரஸ்பரம் கவர்ச்சி உண்டாக்குகிறது' என்பதே இதன் காரணம் என்றுதான் நமக்குத் தோன்றும். ஆனால், இதுவே முழுக் காரணம் அல்ல என்கிறார்கள் மனத்தத்துவ நிபுணர்கள். பலம், வீர்யம், ஆண்மை இவைகளை வெளிக்காட்டும் சின்னம் மயிர் என்று ஆதிகாலத்து மனிதர்கள் நம்பி வந்தார்களாம். அந்த நம்பிக்கை நாமறிந்தோ அறியாமலோ இன்னமும் நமக்கு இருந்து வருகிறதாம். இதனால் தான் காதலரின் தலைமயிரை ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்வது, சோகத்திலே தலைமயிரைப் பிய்த்துக்கொள்வது இந்த மாதிரி பழக்கங்களெல்லாம் இன்றும் நமக்கு இருக்கின்றனவாம்.

மனிதனின் பலமும் வீர்யமும் மயிரிலேதான் இருக்கின்றன என்று காட்டும் ஸாம்ஸன் என்பவனைப்பற்றிய பைபிள் கதை ஒன்று உண்டு. இன்னும் இதைப் போல் எத்தனையோ கர்ண பரம்பரைக் கதைகள் உலகெங்கும் உலவுகின்றன. மயிரிலே தெய்விக சக்தி ஒன்று உறைவதாக ஆதிமனிதர்கள் எண்ணிவந்தார்கள். மயிரை க்ஷவரம் செய்துகொள்வதே கூடாது என்ற தடையைப் பழங்குடிகள் பலர் இப்போதுகூட அநுஷ்டிக்கிறார்கள். இந்தக் காலத்தில் பிரான்ஸ் என்று வழங்கும் பழைய 'கால்' மக்களெல்லாம் தமக்கு அடிபணிந்ததற்கு அடையாளமாக அவர்களுடைய தலைமயிரை வெட்டிக்கொள்ளும்படி ஸீஸர் உத்தரவு போட்டுவிட்டார். தங்களிடம் தோற்றவர்களின் தலையை மழுங்கச் சிரைத்துவிடுவது இந்தியர்களின் பழைய வழக்கம். 'நாகரிக' ஜாதியார் என்று பெயரெடுத்தவர்கள் கூட ஒரு தண்டனையாக மதித்தே கைதிகளின் தலையை மொட்டையடிக்கிறார்கள் என்று தோன்றுகிறது. போன யுத்தத்தில் ஜெர்மானியருடன் தொடர்புகொண்ட தங்கள் பெண்களைப் பிரெஞ்சுக்காரர் மொட்டை யடித்துவிட்டார்கள்.

தலைமயிரின் அலங்கார மோஸ்தர்களுக்கும் உட்கருத்து உண்டாம். ஐரோப்பிய நாகரிகத்தில், ஆண்கள் தலைமயிரைக் கத்தரித்துக்கொள்ளுகிறார்கள். பெண்களோ தங்கள் பெண்மைக்கு அடையாளமாக அதை உள்ளபடி பாதுகாத்து வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், சமூக, அரசியல் துறைகளில் பெண்கள் சுதந்தரம் பெறும் காலங்களில், அவர்களும் தலைமயிரைக் கத்த

ரித்துக் குட்டையாக்கிக்கொள்ளுகிறார்கள். பெண்கள் தலைமயிர் வைத்துக்கொள்வது அலங்காரத்துக்காகத்தானே தவிர, அதனால் வேறு உபயோகம் ஒன்றும் இல்லை. மயிரின் வேர் ஒரு பைமாதிரி இருக்கிறது. அது தோலில் பதிந்திருக்கிறது. அதிலிருந்து வெளியே நீண்ட தோகை போல் மயிர் வளர்ந்து காற்றில் அசைந்தாடுகிறது. கொம்பைப்போல் உயிரற்ற ஒரு விதத் தோல் அணுக்கள் பல இணைந்ததே மயிர். உடம்பில் சேரும் உணவிலிருந்து எந்த அம்சத்தையும் மயிர் கிரகித்துக் கொள்வதில்லை. போது போகாது உட்கார்ந்திருக்கும் என்றாவது, உங்கள் தலைமயிர் எத்தனை என்று எண்ணிப் பார்க்க உங்களுக்கு ஆசை பிறக்கலாம். அது மிகவும் சள்ளை பிடித்த வேலை. அதை விடத் தனியாக உட்கார்ந்து சீட்டாடுவதுகூட மேல். ஆனால், நிபுணர்கள் இந்தக் கணக்கை எடுத்திருக்கிறார்கள். ஆரோக்கியமான ஒரு மனிதனின் தலையில் சுமார் ஒரு லட்சத்திலிருந்து ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் மயிர்வரையில் இருக்கின்றனவாம்.

ஒரு மாதத்தில் சுமார் அரை அங்குல நீளம் மயிர் வளர்கிறது. நாவிதனின் கத்தி படாமலும் தேய்மானம் இல்லாமலும் மயிரை முற்றும் வளர விட்டால், சாதாரணமாக இருபத்தாறு அங்குல நீளம் வளரும். வருஷத்தில் சில பருவங்களில்மட்டும் பிராணிகளின் மயிர் உதிரும். மனிதனின் மயிரோ வருஷம் முழுவதிலுமே உதிர்ந்துகொண்டே யிருக்கிறது. தோலுரித்த வாழைப்பழம் போல, மயிரின் வேர் மெல்ல மெல்ல

தொப்பி

உடம்புத் தோலிலிருந்து வெளியே பிதுங்கி வந்துவிடுகிறது. அந்த இடத்தில் புதிய மயிர் அப்போதே முளைக்கத் தொடங்கிவிடுகிறது.

மயிரின் நிறத்தை 'ஹார்மோன்' என்ற சுரப்புத்திரவம் பாதிக்கிறதா என்றால், நிபுணர்களால் இதற்குத் திட்டமாய்ப் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால், 'தைராய்ட் க்ளாண்ட்' என்ற தொண்டைச் சுரப்பி அதிகமாக வேலை செய்தால் மயிர் நரைப்பதுண்டாம். அப்போது அந்தச் சுரப்பி ஒழுங்குபடும்படி சிகிச்சை செய்தால், மயிர் பெரும்பாலும் பழைய நிறம் பெற்றுவிடுகிறது.

நரம்புத்தளர்ச்சி, சோர்வு, சத்தில்லாத உணவு இவைகளால் இளம் வயதிலேயே மயிர் நரைத்து விடலாம். இதுபற்றி 1938-இல் சில நிபுணர்கள் எலிகள்மீது சோதனை நடத்தினார்கள். பி-காம்ப்ளெக்ஸ் வைட்டமின்கள் குறைந்த உணவை எலிகளுக்குக் கொடுத்துப் பார்த்தபோது, அவைகளின் மயிர் நரைத்துப் போயிற்று. மறுபடியும் அந்த வைட்டமின்கள் உள்ள உணவை அந்த எலிகளுக்குக் கொடுத்தார்கள்; மயிரின் நிறம் திரும்பியது. உடனே பல டாக்டர்கள் மனிதர்களுக்கும் இந்த மாதிரி சிகிச்சை செய்யத் தொடங்கினார்கள். ஏமாற்றந்தான் ஏற்பட்டது. நியூயார்க் நக

ரத்தில் உள்ள கோல்டுவாட்டர் மெமோரியல் என்ற ஆஸ்பத்திரியில் இப்படிச் சிகிச்சை பெற்ற முப்பத்து மூன்று பேரில், இரண்டே பேருக்குத்தான் மயிரின் பழைய நிறம் திரும்பியது.

திடீரென்று மயிர் நரைத்துவிடுவதுண்டு என்று சொன்னால், சிலர் நம்ப மாட்டார்கள். மயிர் கொஞ்சம் கொஞ்சமாகவே நரைக்கிறது என்றால், நரை மயிரைக் கவனித்துப் பாருங்கள். அதன் அடி நரைத்து, நுனி கறுத்திருக்கிறதா? இல்லையே; ஏன்? மனத்துக்குத் திடீரென்று ஏதாவது அதிர்ச்சி ஏற்பட்டால் உடனே மயிர் நரைத்துவிடுகிறது என்று பல பிரபல நிபுணர்களே சொல்லுகிறார்கள். அவர்களுடைய சொல்லை நாம் அலட்சியம் செய்ய முடியாது. மயிரின் நிறம் 'பிக்மெண்ட்' என்ற சாயச் சத்தில் மட்டும் இல்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. மயிரின்மீது விழும் ஒளிக்கிரணம் பிரதிபலிப்பதையும் மயிரின் நிறம் ஓரளவு சார்ந்திருக்கிறது என்று நியூயார்க் நகர டாக்டர் ஹைமான் எஸ். பாரஹால் என்பவர் சொல்லுகிறார். மயிரில் மிக நுண்மையான காற்றுக் குமிழ்கள் தோன்றலாம். அவைகளின்மீது பட்டுப் பிரதிபலிக்கும் கிரணங்கள் மயிர் நரைத்திருப்பதாக நம் கண்ணுக்குத் தோன்றச் செய்யும். மாரிக் காலத்தில் மயிர் நரைக்கும் பிராணிகளைச் சோதித்தபோது இது புலனாயிற்று. ஒரு மனிதனுக்குத் திடீரென்று மனத்தில் கடுமையான அதிர்ச்சி ஏற்பட்டால், தோலில் சில சுரப்புத் திரவங்கள் வெளிப்படலாம். அவைகளால் மயிரில் நுண்மையான காற்றுக் குமிழ்கள் உண்டாகலாம். அவைகளில் படும் ஒளிக்கிரணங்கள் மயிரின் நிறத்தை முற்றும் மாறுபட்டதாக நமக்குக் காட்டலாம்.

இதெல்லாம் போகட்டும். மனத்தத்துவ நிபுணர்கள் என்ன சொல்லுகிறார்கள், தெரியுமோ? நமக்கு வேண்டியது வழுக்கைக்கோ, நரைக்கோ மருந்து எதுவும் அல்லவாம்; 'மயிர் எப்படிப் போனாலும் போகட்டும்; அதைப்பற்றிப் பரவாயில்லை?' என்று கவலையற்ற ஒரு புதிய மனோபாவத்தை நாம் வளர்த்துக் கொள்வதுதான் தேவையாம். பார்க்கப்போனால், மயிர் என்பதுதான் என்ன? அது உயிரற்ற பயிரைப்போல் வளரும் ஒரு வஸ்து; மனிதனின் வீர்யத்தையோ, ஆண்மையையோ வெளிக்காட்டும் சின்னம் அல்ல.

எதற்கு ஏங்குவது?

ஒரு மாணவனுக்குப் பள்ளிக்கூட வாத்தியார் மிகச் சிறந்த புத்திமதி ஒன்றைக் கூறினார்: "இல்லாத பொருளுக்கு ஏங்காதே" என்றார்.

"பின்னே எதற்கு ஏங்குவது?" என்று கேட்டான் சிறுவன்.

—'காலியர்ஸ்', நியூ யார்க்.

பெண்ணுக்காகக் கூடு கட்டிக்
காத்திருக்குமாம் ஆண்குருவி!

குடிபுகும் பெண் குருவி

டாக்டர் எம். வி. ஆப்டே

சென்ற அக்டோபர் மாதம் நாங்கள் ஐந்து பேர் புனுவுக்குத் தெற்கே கிராமாந்தரப் பக்கமாகப் பறவைகளைப் பார்த்து வரப் புறப்பட்டோம். ஒரு வயலண்டை வந்து சேர்ந்தோம். அங்கே ஒரு கிணறு இருந்தது. அதற்கருகில் சின்னச்சின்ன மரங்கள். அவைகளில் ஏராளமான பறவைகள் இருந்தன.

சிறுவயதில் வயல்பக்கம் போய்ப் பார்ப்பதென்றால் எங்களுக்கு மிகவும் ஆசை; அங்கே கிணற்றங்கரைச் சுவரோரம் வளர்ந்திருக்கும் மரக்கிளைகளில் தூக்கணங் குருவிக் கூடுகள் தொங்குவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது வழக்கம். சில சமயம் அபாயமான இடத்தில்கூட நின்றுகொண்டு, வளைந்த கைத் தடியினால் இரண்டொரு கூட்டைக் கலைத்ததுண்டு.

அந்தக் கூடுகள் வெகு அழகாகவும் நீளமாகவும் இருக்கும். அவ்வளவு சின்னஞ் சிறு பறவைகள் அவைகளைக் கட்டுவதென்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. எப்படியோ வெகு சாமர்த்தியமாக அவை கட்டிவிடுகின்றன. தொங்கிக்கொண்டிருக்கும் கூட்டின் அடிப்பாகத்தில் ஒரு துவாரம் இருக்கிறது. அதன் வழியாக இந்தக் குருவி நுழைந்து இன்னும் உள்ளே இருக்கும் அறைக்குள் போய் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரித்துப் பாதுகாத்து வளர்த்து வரும்.

எங்களோடு ஒரு பையன் வந்திருந்தான். அவன் ஒரு கூட்டைக் கப்பென்று இழுத்து அதைப் பிரித்துக் காட்டினான். ஒரே ஒரு குஞ்சு மட்டுந்தான் அதில் இருந்தது. அதை முன்போலவே பத்திரமாக வைத்துவிட்டுத் திரும்பினோம்.

தூக்கணங் குருவிகளைப்பற்றிய ஒரு விசேஷம் என்னவென்றால், ஆண்கள் எல்லாம் கூடி ஒரு மரத்தில் கூடுகளைக் கட்டிப் பேடைகளுக்காகக் காத்திருக்கும்.

மூலம்: பம்பாய்க் கிராணிக்கிள் (ஆங்கிலம்: 25-10-'53), பம்பாய்.

பேடைகள் வந்து கூடுகளைப் பரிசோதித்துப் பார்த்துத் தமக்குப் பிடித்தவற்றில் தங்கிவிடும். பிறகு, அந்தக் கூட்டைக் கட்டின ஆண் குருவியோடு கூடி வாழும். ஆண்களைவிடப் பேடைகளே இந்தக் குருவி வகையில் அதிகமானதால் ஆண்கள் நிறையக் கூடு கட்டிப் பல பேடைகளோடு இன்புற்று வாழும்.

மழைக் காலம் முடியும்போது தூக்கணங் குருவிக் குஞ்சுகள் இறக்கை முளைத்துப் பெரியவையாகி இரை தேட வேறு இடத்துக்குப் போய்விடும். தூக்கணங் குருவிகள் கூடி முட்டையிடும் பருவத்தில் அவற்றை நன்ருகக் கண்டுகொள்ளலாம். அப்போது அவை மஞ்சளாகக் காட்சியளிக்கும். அதற்குப் பின் அந்த நிறம் மாறிச் சாதாரணக் குருவிகளைப் போல் ஆகிவிடும். மழை நாளில் அவை வயலில் நெற் போருக்கு அருகில் நெல்லைக் கொரித்துக் கொண்டிருப்பதைப் பல தடவை பார்த்திருக்கிறேன்.

சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் நான் இமாலயத்துக்குப் போயிருந்தேன். அங்கே வீட்டுக் கூரைகளின்மேல் தூக்கணங் குருவிகள் உட்கார்ந்திருப்பதையும், சில சமயம் சாதாரணச் சிட்டுக் குருவிபோல் சோறு முதலியவற்றைத் தேடிக்கொண்டு வந்ததையும் கவனித்தேன். இவைகளின் மஞ்சள் இறகில் கறுப்புக் கோடுகள் இருந்தன. இவை மலைமேல் எங்கோ கூடு கட்டி வாழ்பவை. அவ்வளவு தூரம் சிரமப்பட்டு யார் ஏறுவது என்று இருந்துவிட்டேன்.

தூக்கணங் குருவிகள் கிணற்றுக்குள் சுவரில் முளைக்கும் மரஞ்செடிகளில் கூடு கட்டி வாழ்வது சகஜம். வயல் வரப்புக்களில் ஈச்சமரம் முதலியவற்றிலும் இவை கூடு கட்டும். இன்னும் சில ஊர்களில், வேல மரம் போல் சின்ன இலையுள்ள மரக்கிளை நுனியில் இப்படி இவை கூடு கட்டியிருப்பதைப் பார்த்திருக்கிறேன்; பனை, ஈச்சை மரமாக இருந்தால் ஓலை நுனியில் கட்டியிருக்கும். ஆகவே, எளிதில் பூனையோ காக்கையோ கூடுகளை அண்ட முடியாது; இப்படித் தூக்கணங் குருவிகள் ஆபத்தேற்படாதபடி குஞ்சுகளைப் பாதுகாத்து வரும்.

ஆனல் குஞ்சுகள் கூட்டை விட்டு வெளியில் பறந்து வந்து வேலங்கிளைகளிலோ பனை ஓலைமேலோ உட்கார வரும்போது தான் ஆபத்தாக முடிகிறது. பருந்தோ வல்லூரோ வந்து அவைகளைத் தூக்கிக்கொண்டு போய் விடும். பாவம், பெரிய குருவிகள் இந்த இரண்டுமாத காலம் பட்ட சிரமமெல்லாம் இப்படி ஒரே நொடியில் வீணுகிவிடுவதுதான் கண்ணராவியாக இருக்கிறது.

குழந்தை நடந்தால்—

"உங்கள் குழந்தை எப்படியிருக்கிறது?"

"ரொம்ப சௌக்கியமாயிருக்கிறது. ஆறு மாசமாக நடக்கிறது."

"அப்படியா! இப்போது ரொம்பதூரம் போயிருக்குமே!"

—'வொர்ல்டு டைஜெஸ்ட்'

இந்த அதிசயத்துக்குச் சான்றான
சின்னங்கள் இன்றும் இருக்கின்றன.

ஈட்டிமேல் குதித்தார்

பேலு சக்ரவர்த்தி

கல்கத்தாவுக்கு வடக்கே 24 மைல் தூரத்தில் உள்ளது சிஞ்சுடா என்ற ஊர். 1638-இல் ஷாஜஹான் மொகல் சக்கரவர்த்தியாக இருந்தபோது டச்சுக்காரருக்குப் பட்டயம் ஒன்று அளித்தான். அதன்படி சிஞ்சுடா டச்சுக்காரருக்குச் சொந்தமாயிற்று. 18-ஆம் நூற்றாண்டில் டச்சு ஆட்சிக் காலத்தில் அங்கே நடந்த ஓர் அதிசய சம்பவம் இது:

இந்த ஊருக்குக் கிழக்கே பாகீரதி நதி ஓடுகிறது; தெற்குப்பக்கம் வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது. இந்தத் தெற்குப்பகுதியில் ஆற்றங்கரையில் சண்டேசுவரர் கோயில் ஒன்று இருக்கிறது. 16-ஆம் நூற்றாண்டில் கட்டினது இது. ஹால்தார் என்ற பெரியார் ஒருவரின் கனவில் பகவான் தோன்றி, "கங்கைப் படுகையில் இன்ன இடத்தில் தோண்டிப்பார்; நான் கிடைப்பேன்" என்றாராம். திகம்பரர் ஒரு செம்படவனை அழைத்துக்கொண்டு போய் அந்த இடத்தில் தோண்டிப்பார்த்தார்; ஒரு விக்கிரகமும் அதோடு திரிசூலம் ஒன்றும், சில செப்புப் பட்டயங்களும் கிடைத்தன. இந்தக் கோயில் இருக்கும் இடம் முன்னே பெரிய காடாக இருந்தது. இந்தக் காட்டை அழிக்கும்போது திகம்பரரின் மகன் மேல் ஒரு புலி பாய வந்ததாம். அவன் நல்ல பலசாலியானதால் கையிலிருந்த தடியாலேயே அதை அடித்துக் கொன்றுவிட்டானாம். அங்கே முதலில் சின்னதாக ஒரு குடிசை கட்டி அதில் கறுப்புக் கல்லிலே ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்தார்கள். இப்போதுள்ள கோயில், பின்னால் கௌரீகாந்த ராயர் என்பவர் கட்டியது.

சித்திரை மாதம் விழா நடக்கும்போது சில விநோத ஏற்பாடுகளும் செய்திருந்தார் திகம்பரர். சாதுக்களும் பக்தர்களும் பட்டினி கிடந்து விரதம் எடுத்துக்கொள்வார்கள். 'ஜாம்ப சந்நியாசம்' என்பதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானது. பக்தர்கள் 12 அடி உயரமுள்ள ஒரு பரண்மேலிருந்து கீழே குதிப்பார்கள். கீழே $1\frac{1}{2}$ அடி நீளமும் 1 அடி அகலமும் உள்ள ஒரு மரப் பலகையை முறுக்கேற்றிய துணியில் கட்டி வைத்துக்கொண்டு, இரண்டு வரிசையாக நின்றுகொண்டு சில ஆட்கள் பிடித்துக்கொண்டிருப்பார்கள். இந்தப் பலகையில் 5 அல்லது 6 ஆணிகள் குத்திட்டு நிற்கும். பக்தர்கள் இந்தப் பலகைமேல் குதிக்கவேண்டும். இது எந்த விதத் தடங்கலுமின்றித் தொடர்ந்து கி.பி. 1777-ஆம் ஆண்டுவரை நடந்துவந்தது. ஆனால் 1778-இல் சிஞ்சுடாவின் டச்சுக் கவர்னர், "இதென்ன கேலிக் கூத்தாக இருக்கிறதே!

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 8-11-'53), கல்கத்தா.

கடைசியில் யாராவது செத்துத் தொலைக்கப்போகிறார்கள்!" என்று சொல்லி உடனே இதை நிறுத்தும் படி உத்தரவிட்டார்.

உள்ளூர் மக்கள் பரபரப்படைந் தார்கள். சாதுக்களும் பக்தர்களும் சேர்ந்து கவர்னரைப்போய்ப்பார்த் தார்கள். மதவிஷயத்தில் தலையிட வேண்டாமென்று கேட்டுக்கொண் டார்கள்; கட்டாயமாகத் தடுக்கும் பட்சத்தில் பலிபீடத்தருகில் தங் கள் உயிரையே விடப்போவதாகச் சபதம் செய்தார்கள். இவர்களின் உறுதியைக் கண்டு கவர்னர் திகைத் துப்போனார். இருந்தாலும், இதை நிறுத்த வேண்டுமென்று ஒரு தந் திரத்தைக் கையாண்டார். அவர் களைப் பார்த்து, "சரி; நான் சொல்கிறபடி செய்யவேண்டும். கூரான ஈட்டி ஒன்று என்னிடம் இருக்கிறது. அதன் மேல் நீங்கள் குதிக்கவேண்டும்" என்றார்.

வேறு வழியின்றிச் சாதுக்களின் தலைவர் அதற்கு இணங்கினார். உயிர் போனால் போகிறதென்று துணிந்துதான் அவர் இப்படிச் செய்தார். கவர்னர்பாடு தர்ம சங் கடமாகிவிட்டது. ஏதாவது நேர்ந் தால் தாம் பொறுப்பல்ல என்று சொல்லி அவர் அந்தச் சாதுவிடம், "நானே துணிந்து இதைச் செய் கிறேன்" என்று எழுதிக் கை யெழுத்து வாங்கிக்கொண்டார். பிறகு சாது ஸ்வாமி சந்நிதியில் தியானத்தில் ஆழ்ந்தார். கடைசி யில் 'தெய்வ அனுக்கிரகம் நிச்ச யம்' என்று தெளிந்து இந்தப் பரீட் சைக்குத் தயாரானார்.

சித்திரை மாதச் சங்கிராந்தி யன்று நடுப் பகல் மணி 12 இருக் கும். ஏராளமான மக்கள் கோயில் எதிரே உள்ள முற்றத்தில் கூடி யிருந்தார்கள். கவர்னர் தம் பரி வாரத்தோடு சற்று நேரங் கழித்து வந்தார். 12 அடி உயரமுள்ள அந்தப் பரணுக்குக் கீழ் ஈட்டியை ஏற்கனவே பதித்துவைத்திருந்தார் கள். முன்போலவே ஆட்கள் முறுக்கிய துணியால் அதை இழுத்து, நேராக நிற்கும்படி பார்த் துக்கொண்டார்கள். சாது சிரித்த முகத்தோடு கோயிலை விட்டு வெளியே வந்தார்; மேடைமேல் ஏறினார். மற்றப் பக்தர்கள் நாம சங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித் தார்கள். கை கூப்பியபடி சாது நேராக அந்த ஈட்டியின்மேல் குதித்தார். கூட்டத்தில் ஒரே பர பரப்பு; சாதுவுக்கு என்ன நேர்ந் ததோ என்று அறிய எல்லாருக்கும் ஆவல். கடவுள் அருளால் துளியும் காயமின்றிச் சாது கையைத் தட் டிக்கொண்டே ஆனந்த பரவச ராய்க் கோயிலுக்குள் சென்றார். அந்த ஈட்டி இரண்டு துண்டாக உடைந்து கிடந்ததைப் பார்த்துக் கவர்னரும் அவர் பரிவாரத்தைச் சேர்ந்தவர்களும் திகைத்து விட் டார்கள்.

கவர்னரின் பழைய போக்கு அடி யோடு மாறிவிட்டது. அவர் பயபக் தியுடன் சண்டேசுவரர் கோயி லுக்குப் பித்தளையில் இரண்டு மேளதாளங்களும் வெள்ளியில் பஞ்சமுக சிவமூர்த்தி ஒன்றும் செய்து கொடுத்தார். 1779-இல் டச்சு ஆட்சிக் காலத் தஸ்தாவேஜி களில் அவர் அளித்த மானியத் தைப்பற்றிய விவரத்தைக் காண லாம். பக்திப் பெருக்கினால் அவர் அந்தக் கோயிலைச் சுற்றியிருந்த நிலபுலன்களையெல்லாம் தேவோத் தரமாக அளித்து (அவைகளுக்கு வரி எதுவும் இராதபடி செய்து) விட்டார். சிஞ்சுடா பிரிட்டிஷார் கைக்கு வந்தபோதும் டச்சுச் சர்க்

கார் செய்ததை ஆமோதித்துச் சண்டேசுவரருக்கே அந்த நில மெல்லாம் உரியவை என்று தெரி வித்துவிட்டார்கள். 1858-இல் வெளியான 'காஸ்மகல் சிட்டா' என்ற பிரிட்டிஷ் தஸ்தாவேஜி யில் இந்த விவரத்தைக் காணலாம்.

டச்சுக்காரர் அளித்த அந்தப் பஞ்சமுக சிவமூர்த்தி, உடைந்த ஈட்டி, பித்தளை மேள தாளங்கள் எல்லாம் இன்னும் அப்படியே இருக்கின்றன. 'ஜாம்ப சந்நியாச' விழாவின்போது அந்தத் தாளங் களை இப்போதும் உபயோகிக் கிறார்கள். அந்தச் சாது எப்படி இவ்வளவு துணிச்சலான காரியத் தைச் சாதிக்க முடிந்தது என்பது தான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! ஆனல் கடவுளின் அருள் இருந் தால் எதுதான் அசாத்தியம்?

பொருளாதார சாஸ்திர மர்மம்

ஒரு காலேஜின் பொருளாதார ப்ரொஃபஸரிடம் ஒரு வியாபாரி சென்றார். வியாபாரத்தில் அவர் நல்ல லாபம் சம்பாதித்தவர். "நான் இதே காலேஜில் படித்தபோது, இந்த 'எக்கனமிக்ஸ்' (பொருளாதார சாஸ்திர) பாடத்தில் தான் எப்போதும் திணறுவேன். இப்போது அதில் எந்த மாதிரி கேள்விகள் பரீட்சையில் கேட்கிறீர்கள்? கேள்வித் தாள்களைக் காட்டுவீர்களா?" என்று கேட்டார்.

ப்ரொஃபஸர் அப்படியே கேள்வித் தாள்களைக் கொடுத் தார். அவற்றைப் பார்த்த வியாபாரி ஆச்சரியமுற்று, "என்ன இது! எல்லாம் பழைய கேள்விகளாகவே இருக் கின்றனவே? இவைகளை மாற்றுவதே இல்லையா? முன்னே படித்த மாணவர்கள், பின்னே படிக்கும் மாணவர்களுக்குக் கேள்விகளைச் சொல்லிக் கொடுத்துவிட மாட்டார்களா?" என்று கேட்டார்.

"ஆமாம்; அவர்கள் சொல்லிக்கொள்ளலாம். ஆனலும், எக்கனமிக்ஸ் பாடத்தில் நாங்கள் கேள்விகளை ஒருபோதும் மாற்றுவதில்லை; விடைகளைத்தான் ஓயாமல் மாற்றிக்கொண் டிருப்போம்" என்றார் ப்ரொஃபஸர்.

—'ஹெல்த் வேஸ்'

ஆசைத் திருட்டு

பிரிட்டிஷ் ராஜகுடும்பத்தின் மதிப்பரிய மகுடாபிஷேக நகைகளை வைத்திருக்கும் லண்டன் டவரில் ஒரு திருடன் நுழைந்தான்; அங்கிருந்த சில ஸிகரெட்டுகளைத் திருடிக் கொண்டு போய்விட்டான்.

—'திஸ் வீக்'

கார்ட்டூன் கதம்பம்



சென்னைச் சிலை

—'அமிர்த பஜார் பத்திரிகை'



ராஜாக்கள் கிலி

—'ப்ளிட்ஸ்'



வினோபாஜி முடிவு

—'சங்கர்ஸ் வீக்லி'



பணக்கார ஏழை

—'பம்பாய்க் கிரானிக்கிள்'

கோரக் கொலை

★

ஏதோ துப்பறியும் கதைபோல் இருக்கிறது இது. ஆனால் வெறும் கட்டுக்கதை அல்ல. பாரிஸ் நகரத்து 'ஸமேதி-ஸாயிர்' என்ற பத்திரிகையில் அலெகோ லிலியஸ் என்பவர் இந்த விவரத்தை எழுதியிருக்கிறார்.

டென்மார்க்கில் ஒரு சிறு கிராமம். கிராமச் சத்திரத்திலுள்ள பெரிய கூடத்தில் பலபேர் கூடியிருந்தார்கள். கிராம மேயர் மற்றவர்களைப் பார்த்து, "இதென்ன, நம் ஊருக்கே அடுக்காத விஷயமாக இருக்கிறதே! இந்த மாதிரி கோரக் கொலையை யாரால் சகிக்க முடியும்?" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

அன்று காலை வயலில் உழுது கொண்டிருக்கும்போது ஓர் உழவன் ஏதோ தட்டுப்படவே தோண்டிப் பார்த்தான். யாரோ ஆசாமியின் சவம் உருக் குலைந்து புதைந்து கிடப்பது தெரிந்தது. மண்டை சுக்கலாக உடைந்து கழுத்தெல்லாம் வெட்டும் குத்துமாக இருந்ததால் துளிக்கூட அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை.

"உடனே போலீஸாருக்குச் சொல்லியனுப்பியாக வேண்டும். இல்லாவிட்டால் கொலையாளி தப்பிவிடுவான்" என்றார் கிராம மேயர். கிராமத்தார்கள் எல்லாரும் யோசனையில் ஆழ்ந்தார்கள். பிறகு எல்லாரும் சேர்ந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விஷயத்தைத் தெரிவித்தார்கள்.

போலீஸ்காரன் அங்கே வந்து சேரும்போது ஏராளமாகக் கும்பல் கூடியிருந்தது. எல்லாரும் ஆவலுடன் அதிகாரிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்று கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

போலீஸ்காரன் கொலையுண்ட ஆளைப் புரட்டிப் பார்த்து அவன் கழுத்தில் உள்ள காயத்தருகில் உற்றுக் கவனித்தான். தலைமயிர் முடிச்சுக் கட்டியிருந்தது; முகம் வீங்கிக்கிடந்தது; அடர்த்தியாகத் தாடி வேறு இருந்தது. வலது கை மண்மேல் படிந்து கிடந்தது. இடது கை ஓரளவுக்கு மூடிக் கிடந்தாலும் விரல் நகங்கள் அப்படியே இருந்தன.

"யாரோ வெளிநாட்டு ஆசாமி போல் இருக்கிறது. உடம்பு நிறத்தைப் பார்த்தால் நாடோடி போல் இருக்கிறது" என்றான் ஓர் உழவன். உடல் நிறம் கறுப்பாக இருந்தது. ஆனாலும் அந்தப் பக்கம் நாடோடிகள் யாரும் வந்ததாகத் தெரியவில்லை. அக்கம் பக்கம் ஜில்லாக்களில் வசித்து வந்த நாடோடிகள் எல்லாரையும் அந்தப் போலீஸ்காரனுக்கு நன்றாகத் தெரியும். கொலையுண்ட ஆள் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவ

னல்ல; அதில் சந்தேகமில்லை. ஆகவே, மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து விடுவதென்று அவன் முடிவு செய்தான்.

அந்தப் பகுதியில் ஆர்ஹஸ் சர்வ கலாசாலையைச் சேர்ந்த வைத்தியப் புரொபஸர் க்ளோப் என்பவர். அவர் விரைவில் அங்கே வந்து சேர்ந்தார்.

போலீஸார் அவரிடம் எல்லா விவரங்களையும் தெரிவித்தார்கள். சற்று நேரம் சவத்தைப் பார்த்ததும் அவர் முகத்தில் ஏன் அவ்வளவு உருக்கம்? 'கொலையுண்ட ஆசாமி அவர் உறவினரில் ஒருவரோ?' என்று போலீஸ்காரன் வியப்புற்று நின்றான்.

புரொபஸர் சவத்தை மிகவும் கூர்ந்து கவனிக்கலானார். போலீஸ்காரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் கடைசியில், "கொலை தானே?" என்றான்.

"ஆமாம். பயங்கரக் கொலை தான்! ஆனால் கொலை செய்த பேர்வழியை உன்னால் கண்டு பிடிக்கவே முடியாது; அது நிச்சயம்" என்றார்.

போலீஸ்காரனின் முகம் சிவந்துவிட்டது; தங்கள் போலீஸ் இலாகாவின் பிரதாபத்தை எடுத்துச் சொல்லப் போனான். அதற்குள் புரொபஸர் நிதானமாகவே, "கொலை செய்தவனைக் கண்டு பிடிக்க முடியாது என்று ஏன் சொல்கிறேன், தெரியுமா? இது நடந்து 2,000 வருஷத்துக்கு மேல் ஆகிறது" என்றார்.

போலீஸ்காரனால் இதை நம்பவே முடியவில்லை. அவன் அவரை ஏற இறங்கப் பார்த்தான். தன்னிடம் தமாஷ் செய்கிறாரோ என்று எண்ணினான்.

"டாக்டர், தயை செய்து சீக்கிரம் பிரேத பரிசோதனை செய்து எழுத்து மூலம் விஷயத்தைத் தெளிவாக்கி விடுங்கள்" என்றான்.

போலீஸ் விசாரணையில் முதல் பகுதி முடிந்தது. சமீபத்தில்தான் அந்த ஆள் கொலையுண்டிருக்க வேண்டும் என்று அவனுக்கு நிச்சயமாகப் பட்டது. டாக்டர்மட்டும் உண்மையாகவே தன்னைக் கேலி செய்திருந்தால் பின்னால் அவரைக் கவனித்துக்கொள்வது என்று தீர்மானித்தான். அந்தச் சவத்தை நன்றாகத் தோண்டி எடுத்து ஆர்ஹஸ் சர்வகலாசாலைக்குக் கொண்டு போனார்கள். விரல் அடையாளம், போட்டோ எல்லாம் எடுத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் டென்மார்க் நாட்டுச் சட்ட விதிகளின்படி செய்ய வேண்டியதையெல்லாம் ஒன்று விடாமல் செய்தார்கள்.

வாஸ்தவமாகவே, அந்த ஆள் சரித்திரத்துக்கு முந்திய மிகப் பழங் காலத்தில் கொலையுண்டவன்தான் என்று விஞ்ஞானிகள் பரிசோதித்து ஐயமறத் தெரிந்து கொண்டார்கள். ஏதோ தேவதைக்கு அவனை உயிருடன் பலியிட்டிருக்க வேண்டுமென்று ஊகித்தார்கள். புல் பூண்டுகள் பல யுகங்களாக மட்கியதால் உண்டான 'பீட்' என்ற வகையைச் சேர்ந்த நிலக்கரியில் அடக்கம் செய்திருந்ததாலேயே இப்படி அந்தச் சவம் அழுகாமல் கிடந்தது என்று தெரிந்தது. ஏதோ ஒரு வகைத் தடியால் அவன் மண்டையைப் பிளந்திருக்க வேண்டுமென்றும், கழுத்தில் உள்ள காயம் கொஞ்ச நஞ்சம் உயிர் இருந்தாலும் போய் விடவேண்டுமென்று பின்னால் செய்தது என்றும் விஞ்ஞானிகள்

தம் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மற்றப்படி, உடல் உறுப்புக்கள் எல்லாம் அப்படியே சிதைவு படாமல் இருந்தன. மூளை சற்றுச் சிதைந்திருந்தாலும் எக்ஸ்-ரே மூலம் சில விஷயங்களை அதிலிருந்து அறிந்துகொள்ள முடிந்தது. இருதயம், மூத்திரகோசம், ஈரல் எல்லாம் நிலை குலையாமல் இருந்தன. ஏன், அவன் கடைசியாகச் சாப்பிட்ட கிழங்கும் கஞ்சியும் அப்படியே வயிற்றில் இருந்தன என்றால் பாருங்கள்! ஆனால், மாமிசம் எதுவும் இல்லை.

இப்போது அந்த உடலை எப்படிப் பத்திரப்படுத்தி வைப்பது என்பதுதான் பெரிய பிரச்னையாக இருக்கிறது. இருந்தாலும், விஞ்ஞானிகள் சற்று ஆராய்ந்து ஒரு விதமாக முடிவு செய்திருக்கிறார்கள். இந்த 2,000 வருஷகாலம் இயற்கை அந்த உடலைப் பாதுகாத்து வந்தபடியே இப்போதும் செய்வதுதான் நல்லது என்று எண்ணினார்கள். புல் பூண்டு மட்கிய 'பீட்' என்ற வகை நிலக்கரியை ஒரு மரப் பெட்டியில் நிரப்பி, அதில் அந்தச் சவத்தை வைத்திருக்கிறார்கள். இன்னும் இரண்டாயிரம் வருஷம் வரையில் கெடாதிருக்கும்படி சில 'ப்ளாஸ்டிக்' திராவகங்களை உடலில் 'இஞ்செக்ஷன்' செய்யப் போகிறார்கள் என்று தெரிகிறது.

அதோடு ஒன்று செய்யவேண்டும். அது கிடைத்த வரலாறு முதலியவற்றையும் விவரமாக எழுதி ஒட்டி விட வேண்டும். அப்படிப் பின்னால் ஒரு சமயம் தப்பித் தவறி யாராவது அதைக் கண்டெடுத்தாலும் அப்போதுதான் இந்தக் கொலை நடந்திருக்கிறது என்று தவறாக எண்ண வேண்டியிராதல்லவா?

ரேஸ் குதிரை போல—

டிகாஸ் என்ற பிரபல ஓவியருடைய வர்ண சித்திரம் ஒன்று லட்சம் டாலருக்கு ஏலம் போயிற்று. இதை அந்த ஓவியரே பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது அவரை யாரோ, "இப்போது உங்கள் மனசில் என்ன உணர்ச்சி ஏற்படுகிறது?" என்று கேட்டார்.

"அதுவா? சொல்லுகிறேன்; கேளுங்கள்: ஒரு ரேஸ் குதிரை ரேஸ் ஒன்றிலே ஜயித்துவிடுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அதன் ஜாக்கிக்கு அழகான கப் ஒன்றைச் சம்மானம் அளிப்பார்கள். அந்தக் கப்பை அந்தக் குதிரை பார்த்து என்ன உணர்ச்சி அடையுமோ அதே உணர்ச்சி தான் இப்போது என் மனத்திலும் உண்டாகிறது."

—'அமெரிக்கன் ஆர்ட்டிஸ்ட்'

முட்டும் கம்பம்

அமெரிக்க டெலிஃபோன் கம்பெனி ஒன்றின் ஒரு சுற்றறிக்கை கூறுவது இது: "மோட்டார்க் கார்களை டெலிஃபோன் கம்பங்கள் முட்டுவது தற்காப்பின் நிமித்தமே."

—'நியூஸ் வீக்'

குதிரை சவாரி

மார்ஜெரி மில்லர்

கிண்டி ரேஸ் வந்துவிட்டது. வாரத்துக்கு வாரம் குதிரைகள் ஓடுவதைப் பார்க்கவும் அவற்றின்மீது பணம் கட்டவும் எத்தனையோ பேர் போகிறார்கள். அவர்களில் குதிரை சவாரியில் எவருக்காவது ஆசையிருக்குமோ என்பது சந்தேகந்தான். அவர்களுக்கென்ன; அந்தக் குதிரைகளின் சொந்தக்காரர்களிலேயே எத்தனை பேருக்குக் குதிரை சவாரி ஆசை உண்டோ? அவர்கள் எப்படியிருந்தாலும் சரி; குதிரை சவாரியே இன்பமான கலையாம். அதை விவரிக்கிறது இது.

குதிரை சவாரி செய்வதில் பல வித இன்பம் உண்டு. அதுவும் குதிரை சவாரி செய்யும் கலையை நன்றாகப் பயின்று விட்டால், அந்த இன்பம் பல மடங்காகும். குதிரை சவாரி செய்து அநுபவம் உள்ளவர்களுக்கு இந்த விஷயம் தெரியும். குதிரை சவாரி செய்வதிலே தூய இன்பம் அடையலாம். வாலிபர்கள் இந்தக் கலையைப் பயின்றால், இதிலே ஈடு இணையற்ற புதுமையான அலாதி இன்பத்தைப் பெறலாம்.



உண்மையைச் சொன்னால், குதிரை சவாரி செய்ய எத்தனையோ பேருக்கு ஆசைதான். ஆனால், குதிரையைக் கண்டு அவர்களுக்குப் பயம்; அல்லது குதிரையைப்பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாதே என்று பயம். அந்தப் பயத்தை நிவர்த்தி செய்துகொள்ளுவது வெகு சுலபம். குதிரைகளின் பொது இயல்பையும் நீங்கள் ஏற விரும்பும் குதிரையின் தனி இயல்பையும் அறிந்துகொள்வதுதான் அதற்கு வழி.

சின்னஞ் சிறு வயதில் மட்டக் குதிரைமீது ஒருவர் ஏறியிருக்க

மூலம்: கிறிஸ்டியன் ஸயின்ஸ் மானிட்டர் (ஆங்கிலம்),
போஸ்டன், ஐக்கிய அமெரிக்கா.

லாம். அப்போது, அதன் முரட்டுத்தனத்தைக் கண்டு அவருக்குக் கிலி உண்டாகியிருக்கலாம். இதற்காக அவர் வெட்கப்பட வேண்டியதில்லை. குதிரை சவாரி செய்து பழக்கமுள்ள குடும்பங்களே உண்டு. ஒருவனைப் பார்த்தவுடனே அவனுக்குக் குதிரை சவாரி அநுபவம் உண்டா இல்லையா என்று அந்தக் குடும்பத்தினரெல்லாம் சொல்லிவிடுவார்கள். குதிரை சவாரிப் பழக்கம் உள்ளவர்களுக்கு நல்ல நகைச் சுவையும் உண்டு. அநுபவமில்லாதவன் குதிரை சவாரி செய்யும்போது அவர்கள் கேலி செய்வார்கள். ஆனல், ஒருவன் நன்ருய்க் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து ஓட்டப் பழகிவிட்டால், அவனை அவர்கள் உடனே அன்போடு பாராட்டத் தொடங்கி விடுவார்கள்.

குதிரை சவாரி ஆனந்தமான பொழுது போக்காயிருக்கும். ஏனென்ருல், காரில் ஏறிச் செல்ல முடியாத மனேகரமான வனங்களுக்கெல்லாம் குதிரை மீது செல்ல முடியும்; குதிரை சவாரி செய்வதே ஒருவித இன்பம் தரும்; கேவலம் விலங்கின் இயல்பை அறிந்து அதற்கு உகந்த விதமாய் நடந்துகொண்டு நம் காரியத்தைச் சாதித்துக்கொள்வதிலேயே ஒரு மகிழ்ச்சி உண்டாகும். குதிரை சவாரி செய்யும் இந்த ஆனந்தமான பொழுது போக்கை இழக்கக்கூடாது என்று நினைப்பவரெல்லாம், நன்ருகக் குதிரை சவாரி கற்றுக் கொடுக்கக் கூடிய ஒருவரிடம் போய்ச் சேரவேண்டும்; அவரிடம் அதைப் பயில வேண்டும்.

குதிரை சவாரி கற்றுக் கொடுக்கும் முதல்தர வாத்தியார், தம்மிடம் வந்த சிஷ்யருடன் வெகு நேரம் கழிப்பார். இரண்டாந்தர வாத்தியாரோ அப்படி அல்ல; தம் குதிரையை இரவல் கொடுத்து வாடகை வசூல் செய்வது ஒன்றிலேதான் அவருக்குக் கண். சரியான வாத்தியார் உங்களுக்குக் கிடைத்துவிட்டால், அவருடனும் நீங்கள் சவாரி பயிலும் குதிரையுடனும் வெகு நேரம் செலவிட வேண்டும். சாதாரண நடை, வேக நடை, தாவல், நாலு கால் பாய்ச்சல் இத்தனை விதமாகவும் குதிரை செல்லும்போது அதன் சேணத்தில் உட்கார்ந்து எப்படி 'பாலன்ஸ்' செய்வது (சாயாமல் சமாளிப்பது) என்பதை நீங்கள் பயில வேண்டும். உங்கள் விருப்பத்தை எப்படிக் குதிரைக்குத் தெரிவிப்பது என்பதை நீங்கள் கற்கவேண்டும். இந்த விஷயங்களையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளச் சிறிது காலம் பிடிக்கும். முதல் நாள் சவாரியிலேயே குதிரையை நாலு கால் பாய்ச்சலில் நீங்கள் தட்டிவிடவேண்டும் என்றும் யாரும் சொல்ல மாட்டார்கள். இதை மட்டும் நீங்கள் உணர்ந்து கொண்டால், இந்த ஆரம்பப் பயிற்சியே உங்களுக்குப் பெருந் தமாஷாக இருக்கும்.

முதல் முதலாக உங்களுக்கு ஒரு கவலை ஏற்படுவது இயல்பு. குதிரை மீதிருந்து விழாமல் எப்படிச் சமாளித்துக்கொள்வது என்பதே அந்தக் கவலை. அப்படிச் சமாளித்து உட்கார்ந்திருக்க முடியும் என்ற தைரியம் வந்துவிட்டால், அப்புறந்தான் சவாரியில் திறமை பெறலாம். அந்தத் திறமையில் பல தரங்களும் ரகங்களும் உண்டு. குதிரை சவாரியில் உங்களுக்கும் குதிரைக்கும் திருப்தி

கரமான அளவுக்கு நீங்கள் சிறந்த நிபுணராகப் போகிறீர்களா? குதிரைக் கண்காட்சி ஒன்றில் பலவித நடைகளும் பாய்ச்சல்களும் பயிலக்கூடிய அற்புதக் குதிரை ஒன்றின் மீது ஆரோகணித்துக் காட்டக் கூடிய திறமையை நீங்கள் பெறுவீர்களா? இதெல்லாம் அவ்வளவு முக்கியம் அல்ல. குதிரை சவாரியின் அடிப்படையான அப்பியாசங்களை நீங்கள் நன்ருய்ப் பயின்ற பிறகு, உங்கள் குதிரையின் இயல்பைப் பூர்ணமாய் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதுதான் குதிரை சவாரி வித்தையில் நீங்கள் தேர்ச்சி பெறுவதற்குச் சிறந்த வழி.

சொந்தக் குதிரை வைத்துக் கொள்ளும் அதிருஷ்டம் உங்களுக்கு இருந்தால், அதற்கு நீங்களே தீனி வைக்கலாம்; அதைத் தேய்த்துவிட்டுச் சீராட்டலாம்; அதனுடன் பேசலாம்; அதன் நண்பனுகிவிடலாம். இப்படியில்லாமல், நீங்கள் சவாரி பழகும் குதிரை பிறருடையதாயிருக்கக்கூடும். அப்போதும் விடாதீர்கள். அந்தக் குதிரைக்கும் இந்தப் பணிவிடைகளை யாராவது செய்யத்தானே வேண்டும். இவைகளைச் செய்கிறவரை நீங்கள் கவனிக்கலாம்; அவருக்கு உதவியும் புரியலாம். கூடாது என்று அநேகமாக அவர் சொல்ல மாட்டார்.

நீங்கள் சவாரி செய்யாதபோது சுற்றுப்புற நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையும் கண்டு உங்கள் குதிரை எப்படி நடந்துகொள்கிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் சவாரி செய்யும்போது அது எப்படி நடந்துகொள்ளும் என்பதை இதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். எந்தப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கண்டு அது மிரள்கிறது? எந்தச் சொற்களைக் கேட்டு அது தைரியம் பெறுகிறது? அதன் விசித்திரப் பழக்கங்கள் எவை? - இந்த மாதிரி விவரங்களையெல்லாம் நீங்கள் சவாரி செய்யாதபோதே குதிரையைக் கவனித்துப் புரிந்துகொள்ளலாம். இப்படிப் புரிந்துகொண்டால், குதிரையும் உங்களைப் புரிந்துகொள்ளும். அதற்கு உணவு கொடுப்பவர் நீங்கள் என்பதை அது ஞாபகம் வைத்துக்கொள்ளும். காலக்கிரமத்தில் அது உங்கள் நண்பனுகிவிடும்; வாரத்தில் ஏதோ ஒன்றிரண்டு நாள் வந்து சவாரி செய்யும் அந்நியராக உங்களை அது பாவிக்காது.

குதிரை சவாரியில் உண்மையிலேயே திறமை வாய்ந்தவன், சிறிதும் சிரமப்படாமல் சவாரி செய்வான். கடிவாளத்தை உறுதியாய்ப் பிடித்திருப்பான்; ஆனல் அந்தப் பிடி மிகவும் லேசாயிருக்கும். நிமிர்ந்து உட்கார்ந்திருப்பான்; ஆனல், வெகு சௌகரியமாகவே இருப்பதாய்த் தோன்றும். முழங்காலால் குதிரைக்கு அவன் சமிக்ஞை செய்வது, சாதாரணமாய்ப் பார்ப்பவர் கண்ணுக்குப் புலப்படாது. அவன் அமர்ந்திருக்கும் குதிரை செருக்குடன் நிமிர்ந்து துடியாயிருக்கும்; எஜமானின் திறமைக்கு ஏற்றபடி நடந்து கொள்ள ஆவலோடு இருக்கும்.

உங்கள் குதிரை பெரிய வேட்டைக் குதிரையாக இருந்தாலும் சரி; மார்கன் என்ற வகையைச் சேர்ந்த மட்டக் குதிரையாக இருந்தாலும் சரி; பலோமினே என்ற வகையைச் சேர்ந்த அழகிய அரபிக் குதிரையாக இருந்தாலும்

சரி; ஊர் பேரில்லாத சாதாரணப் பெண் குதிரையாக இருந்தாலும் சரி; அதனிடமிருந்து பல விஷயங்களை நீங்கள் கற்றுக்கொள்ளக் கூடும். அதோடு ஒத்துழைத்து அதன் இயல்பை அநுசரித்து நீங்கள் நடந்துகொண்டால், பல அரிய பாடங்களை நீங்கள் அதனிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். இப்படிச் செய்தால், கோடிக்கணக்கான குதிரை அபிமானிகளில் நீங்களும் ஒருவராகி விடுவீர்கள். குதிரையின் குணம், மனோபாவம், அழகு இவைகளைக் கண்டு வியந்து பாராட்டுவதும், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் குதிரை சவாரி செய்வதும் அந்தக் கோடிக் கணக்கான குதிரை அபிமானிகளின் இயல்பாகும். குதிரையும் நீங்களும் பரஸ்பரம் நன்றாய்ப் பழகுவதில் உங்கள் அவகாசத்தைச் செலவிட்டால், உங்களுக்கு அதுவே பெரிய ஆனந்தமாயிருக்கும். குதிரைக்குச் சமமான வேறு குடும்ப ஆஸ்திகளைவிடக் குதிரையே மேல் என்று மதிக்கும் உல்லாச வாலிபர் பலர் இந்தக் காலத்தில் இருக்கிறார்கள்.

தலைவலி விநியோகம்

புதிதாய் 1000 பக்கத்தில் நாவல் எழுதிய இளம் ஆசிரியர் ஒருவர் ஒரு பிரசுரகர்த்தரிடம் சென்று தம் நாவலில் அடங்கிய விஷயங்களை அவரிடம் மிக விரிவாக வெகு நேரம் எடுத்துரைத்தார்.

கடைசியிலே, "இவ்வளவுதான். கதை முடிந்தது. என் நாவலைப்பற்றிப் பேசினாலே எனக்குச் சுகம் உண்டாகிறது. நான் வருவதற்குமுன் எனக்குத் தலைவலி தாளவில்லை; இப்போது அது தொலைந்தது" என்றார்.

இதுவரைக்கும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த பிரசுரகர்த்தர், "இல்லை, இல்லை; உங்கள் தலைவலி எங்கும் தொலையவில்லை. அதை எனக்குக் கொடுத்துவிட்டீர்கள். அது இப்போது என்னைப் பிடித்துக்கொண்டு விட்டது" என்றார். —'இல்லஸ்டிரேட்டட் வீக்லி அவ் இந்தியா'

பின்புற சவாரி

ரெயில் வண்டியிலிருந்து வெகு ஆத்திரத்தோடு இறங்கினார் ஒரு மனிதர்.

"என்ன விஷயம்?" என்று கேட்டார் ஒரு நண்பர்.

"இந்த ரெயில் வண்டியிலே உட்கார்ந்து பின்புறமாய்ச் சவாரி செய்வதென்றாலே எனக்கு என்னவோபோலிருக்கிறது" என்றார் ஆசாமி.

"எதிர் வீட்டிலிருந்த பிரயாணியிடம் இதைச் சொல்லி, இடம் மாறி உட்கார்ந்திருக்கலாமே?" என்று கேட்டார் நண்பர்.

ஆசாமி சிறிது சிந்தனையிலாழ்ந்தார். பிறகு, "எதிர் வீட்டில் யாராவது இருந்தால்தானே? ஒருவரும் இல்லையே; என்ன செய்வது!" என்றார்.

—'இல்லஸ்டிரேட்டட் வீக்லி அவ் பாகிஸ்தான்'

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்ற மட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

குமாரவேலு, உறையூர்:

கேள்வி 1: ஒருவனுக்கு வயிற்றுவலி வருவதற்குக் காரணங்கள் என்ன? விவரியுங்கள்.

விடை: வைத்தியப்பட்டப் பரீட்சைக்கு உட்காரும் மாணவரைக் கேட்க வேண்டிய கேள்வியைப் போல் இருக்கிறது இது. வயிற்று வலி என்று சொல்லும்போது வைத்தியனுயிருக்கும் எனக்கு, வயிற்றிலிருக்கும் உறுப்புக்கள் அனைத்தும் ஞாபகத்துக்கு வருகின்றன. வயிற்றில் இரைப் பை, சிறுகுடல், பெருங்குடல், பான்கிரியஸ், கல்லீரல், மண்ணீரல், பித்தப் பை இப்படியே பல உறுப்புக்கள் இருக்கின்றன. இவைகளில் எதிலாவது கேடு ஏற்பட்டால் வயிற்றுவலி உண்டாகும். ஆகவே, வைத்தியர்கள் இந்த விஷயமாக நோயாளியிடம் பல கேள்விகளைக் கேட்பார்கள். வேதனை எப்போது உண்டாகிறது? ஆகாரத்துக்குமுன்பா, பின்பா? எப்போதுமே தோன்றிக்கொண்டிருக்கிறதா? திடீரென்று தோன்றுகிறதா? ஜுரத்துடன் தோன்றுகிறதா? பேதியாகிறதா? மலச்சிக்கல் இருக்கிறதா? வாந்தி ஏற்படுகிறதா? வேதனை தாங்க முடியாமல் மயக்கம் உண்டாகிறதா?- இப்படியெல்லாம் கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆகார விஷயம், சிறுநீர் கழிக்கும் விஷயம், மலத்தின் குணங்கள் ஆகியவற்றைக் கண் பார்வையாலும் அணுதரிசினி வழியாகவும் வேறு வகையிலும் ஆராய வேண்டும். எக்ஸ்-ரே படம் பிடித்துப் பார்த்துக் குடலிலே தடை ஏற்பட்டிருக்கிறதா, இரைப் பை அல்லது சிறு குடல், பெருங்குடல் ஆகியவற்றில் புண் இருக்கிறதா என்றும் ஆராய வேண்டும். இப்படியெல்லாம் ஆராய்ந்த பிறகே வயிற்று வலிக்குக் காரணம் கண்டு பிடிக்கலாம்; சில சமயம் அப்படியும் கண்டு பிடிக்க இயலாமற் போகலாம். நண்பரோ கேள்வியை வெகு எளிதில் கேட்டுவிட்டார்!

கே. 2: ஒருவன் சுமாரான வளர்ச்சி அடைந்தும் அவனுடைய கை, கால், பாதம், விரல், உள்ளங்கை ஆகியவை சிறியவையாக இருப்பதேன்?

வி: தாயின் வயிற்றில் கரு வளரும்போது மனித உருவத்தை முதலில் பெற்றிருப்பதில்லை. முதலில் அண்ட வடிவமுள்ள ஒரு பிராணியைப் போல் இருக்கும். பிறகு படிப்படியாக வேறு சில பிராணிகளுடைய உருக்குறிகளைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும். கடைசியில் தான் மனித உருவம் பெறுகிறது. ஒரு நிலையில் மீன்களுக்கு இருக்கும் சுவாசக் கருவிகள் தோன்றிப் பிறகு மறையும். இத்தகைய சுவாசக் கருவிகள் நீங்கி, அந்த இடத்தில் மூக்கும் காதும் உண்டாகின்றன. தெளிவாய் அறிய முடியாத சில காரணங்களால் மீன் சுவாசக் கருவிகள் மூடாமலே இருந்து விடும். மூக்குக் குறை, மேல் உதடு விரிந்து முயலின் உதடு போல் தோன்றுவது ஆகிய கோளாறுகளும் இதே மாதிரி காரணங்களாலேயே தோன்றுகின்றன. இப்படியே வேறு சில மர்மமான காரணங்களால் கை, கால் முதலிய அங்கங்கள் வளரத் தடை ஏற்பட்டு விடுகிறது; தேகத்தின் பிற பாகங்கள் வளரும் வேகத்துடன் வளராமல் பின் தங்கி விடுகின்றன. குழந்தை பிறந்த பிறகு இந்தக் குறைகள் அப்படியே நின்றுவிடுகின்றன. மேற்கூறிய அங்கக் குறைகளுக்குக் காரணம் இவைகளேயாம்.

ராமலிங்கம் பிள்ளை, சிதம்பரம்.

கே: 'டையல்' என்னும் தூக்க மருந்துக்கும் அபின் மருந்துக்கும் வித்தியாசம் என்ன?

வி: 'டையல்' முழு மயக்கம் கொடுப்பதில்லை; அபின் முழு மயக்கம் கொடுக்கும். கேடுறச் செய்யாத அளவு என்ன என்று அபினைப் பற்றி நிர்ணயிப்பது கஷ்டமான காரியம். ஆற்றலில் வேற்றுமைப்பட்ட பலவகை அபின்கள் இருக்கின்றன. அபினை அதிகமாக உபயோகிப்பதால் அபாயம் நேரக்கூடும்.

ராஜி, கோச்சி.

கே. 1: அடிக்கடி தலைவலி வருவதற்கு என்ன காரணம்? டாக்டர் கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டும் என்கிறார். கண்ணாடி போட்டுக்கொள்ளாமல் தலை வலி நீங்க என்ன செய்ய வேண்டும்?

வி: தலைவலி ஒரு நோயல்ல; நோயின் குறியேயாகும். ஜுரம் தோன்றினால் தலைவலியில்தான் ஆரம்பமாகும். அஜீரணம் ஏற்பட்டால் தலைவலி உண்டாகும். பித்தத் தலைவலி என்றொரு வகைத் தலைவலி இருக்கிறது. இது தாங்க முடியாத அளவு உண்டாகும்; ஆஸ்பிரின் போன்ற மருந்துகள் சாப்பிட்டுக் குணப்படுத்திக் கொள்ளாத அளவு கடினமாயிருக்கும். இதற்கு மூளையின் அடியில் ஒரு நரம்புக் கணுவையே அறுத்து நீக்க வேண்டி வரும். நல்ல வேளையாக இத்தகைய தலைவலி அபூர்வம். கண் பார்வையில் குறை இருந்து அதைக் கவனியாமலே படிப்பதும், தையல் வேலை போன்ற செயல்களைச் செய்வதும் தலைவலியை உண்டாக்கும். இதற்குப் பரிகாரம் கண் பார்வைக் குறையைக் கண்ணாடி போட்டுக் கொண்டு சரிக்கட்டுவதுதான்; வேறு உபாயம் கிடையாது.

கே. 2: மூலச் சூடு என்ற நோய் வருவதற்குக் காரணம் என்ன? மூலச்சூடு இருப்பவர்கள் வயிறிளகுவதற்கு விளக்கெண்ணெய் சாப்பிடக் கூடாதா?

வி: மூலச்சூடு என்று சொல்லும்போது மலத்தோடு ரத்தம் கசிவதைத்தான் குறிக்கிறார் என்று நம்புகிறேன். மூல உபத்திரவம் உண்டாகச் சில முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, அதிகமாக உணவு உட்கொண்டு உடல்பயிற்சிக்கு இடமில்லாத வேலையில் அமர்ந்திருப்பது ஒரு காரணம். இரண்டாவதாக, சிலருடைய குடும்பத்திலே இந்த வியாதி தோன்றக் கூடும். இவர்களுடைய குடலில் ரத்த நாளங்கள் எளிதில் தடைப்பட்டுப் போகவே அவற்றில் ரத்தம் தங்கிக் கடுத்த மலம் கழிக்கும்போது ஆசனத்தின் அருகிலிருக்கும் இந்த நாளங்கள் கிழிந்து ரத்தம் சுரக்கும்

கே. 3: அசுத்தத் தண்ணீரைக் குடிப்பதாலும் குளிப்பதாலும் யானைக்கால் வருகிறதா? அல்லது கொசுக் கடியால் வருகிறதா? யானைக்கால் ஒரு தொத்து வியாதியா?

வி: மலேரியா ஜுரம் வாயு மண்டலத்தில் இருக்கும் துர்நாற்றத்தால் உண்டாகிறதென்று ஒரு காலத்தில் எண்ணினார்கள். கொசுக் கடியால்தான் மலேரியா உண்டாகிறதென்று ஸர் ரோனல்ட் ராஸ் என்பவர் நிரூபித்தார். யானைக்கால் வியாதி அசுத்தமான தண்ணீரை அருந்துவதாலும், அதில் குளிப்பதாலும் உண்டாகிறதென்று முன்னே எண்ணினார்கள். ஸர் பாட்ரிக் மான்ஸன் என்னும் வைத்திய நிபுணர் ஆராய்ச்சி செய்து கொசுக்கடியால்தான் யானைக்கால் நோய் உண்டாகிறதென்று நிரூபித்தார். அசுத்தமான தண்ணீர் வீடுகளைச் சுற்றித் தேங்குவதாலும் கிணறுகளில் கொசு வாழ்ந்து வருவதாலும் அந்த இடங்களில் வசிக்கும் மக்களிடையே யானைக்கால் நோய் அதிகமாகக் காணப்படுகிறது.

ராஜா, ஊட்டி.

கே: தகப்பனாருக்கு க்ஷய ரோகம் வந்தால், பிள்ளைக்கும் வருமா?

வி: க்ஷயரோகம் பாரம்பரியமாக வரக் கூடிய வியாதியல்ல. பெற்றோருக்கு இருந்தால் பிள்ளைகளுக்கு வரவேண்டுமென்பதில்லை. க்ஷயரோகம் தொத்து நோயாகையால், முக்கியமாக நோயாளி துப்பும் கோழையைக் கிருமிநாசினி மருந்துகளோடு கலவை செய்த பிறகுதான் நீக்கவேண்டும். தவிர, அவர்கள் இருமும்போது தெறிக்கும் கோழைத்துளிகள்பிறருடைய தொண்டையிலும் உணவிலும் நீரிலும் கலவையாகாமல் காக்கவேண்டும்.கேள்வி கேட்ட ராஜா அவர்களுக்கு இப்போது வயது 23 ஆகிறது. தந்தை இறந்து பதின்மூன்று ஆண்டுகளாயின. பொதுவாக, ராஜா ஆரோக்கியமாக இருக்கிறார் என்று தெரிய வருகிறது. ஆகவே, தமக்கு க்ஷயரோகம் வந்துவிடுமோ என்று கவலைப்பட வேண்டாம்.

கோபால ராவ், திருவல்லிக்கேணி.

இவருடைய கேள்விகள் காபி, டீ, ஓவல்டின் போன்ற பானங்கள் குடிப்பதைப் பற்றியவை.

காபி குடிப்பதைப்பற்றி இதற்கு முன்பே 'மஞ்சரி'யில்

விடை கூறியிருக்கிறேன். கடுங் கஷாயமில்லாத காபியை மிதமாக இரண்டு வேளை சாப்பிடுகிறவர்கள் அநேகரை வெகு நாளாகப் பார்த்து வருகிறேன். அதனால் அவர்களுடைய ஆரோக்கியம் குறைந்ததாகத் தெரியவில்லை. சரியான முறையில் டீ தயார் செய்தால் அதைத் தினம் ஒரு தடவை பானம் செய்வதால் கேடொன்றும் நேர்வதாகத் தெரியவில்லை. ஓவல்டின் போன்ற பானங்களை உணவு வகைகள் என்றே சொல்ல வேண்டும். அவைகளில் கேடுவிளைக்கும் பொருள் ஒன்றுமில்லை என்று அவற்றை உற்பத்தி செய்யும் வியாபாரிகள் உறுதியாகக் கூறுகிறார்கள். அதை உண்மை என்று ஏற்றுக்கொள்ளலாம். முட்டையும் ஆகாரந்தான். ஆகாரங்கள் நன்றாக ஜீரணித்து உடம்புக்குச் சக்தியளிக்குமானால் அவை உஷ்ணப்படுத்த மாட்டா.

கே. கோவிந்தன், தும்பகோணம்.

இவருக்குத் தினம் பல முறை சிறுநீர் கழிகிறதாம். ஆனால் அதில் சர்க்கரை இல்லை யென்று இவர் சொல்லுகிறார்.

நீரிழிவு நோய்களில் முக்கியமாக இரு வகைகள் இருக்கின்றன. ஒரு வகையில் சிறு நீரோடு சர்க்கரையும் கழியும். இது சாதாரணமாகக் காணும் நோய். இதற்குப் பரிகாரம் இன்சுலின் இஞ்செக்ஷன் செய்துகொள்ளுவதும், ஆகாரத்தில் சர்க்கரையைக் குறைத்துக் கொள்ளுவதுந்தான். தவிர, உடல் பருமன் அதிகமாயிருந்தால் அதைக் குறைத்துக்கொள்ளவும் உபாயம் தேடலாம். ஆனால் சர்க்கரை கழியாமல் சிறுநீர் மட்டும் கழிகிற நோய்க்குப் பரிகாரம் சிறிது கஷ்டந்தான். 'பிட்யூட்டரி கிளாண்ட்' என்ற அகச்சுரப்பி ஒன்று உடம்பில் இருக்கிறது. இதனுடைய ஒரு பகுதியில் கோளாறு ஏற்பட்டு இந்த நோய் உண்டாகிறபடியால், 'ஆன்டீரியர் பிட்யூட்டரி' என்ற அந்தப் பகுதியின் சுரப்பை உட்கொண்டு இந்த நோயை அடக்கிவிடலாம் என்று வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஒரு மாணவர் துயரம்.

ஊர் பெயர் தெரிவியாத பதினெட்டு வயது மாணவரொருவர் கேட்டிருக்கும் கேள்வியைப் பல காரணத்தால் இங்கு அப்படியே குறிக்க இயலவில்லை. ஆயினும் அவர் படும் துயரத்தைக் கவனிக்கும்போது அவருக்குச் சமாதானம் சொல்லத்தான் வேண்டுமென்று தோன்றுகிறது. மார்பில் ஸ்தனம் இருக்குமிடத்தில் ஆணாகிய தமக்குச் சற்றுக் கட்டியாயிருப்பதாயும் அது கவலைக்கு இடமாயிருக்கிறதென்றும் சொல்லுகிறார். இதனால் அவர் வெட்கித் தலை குனிந்தே நடக்கிறாராம். இந்த வயதில் சிலருக்கு இத்தகைய அச்சம் உண்டாவது இயல்பே. இந்த மாறுபாடு இந்த வயதில் தோன்றுவதும் இயல்பே. இதனால் அவருடைய ஆண்மை குறையவே குறையாது. தலை குனியாமல் அவர் நிமிர்ந்தே நடக்கலாம் என்று நான் உறுதியாய்க் கூறுவேன்.

கண்ணுக்கு முன்னே காணும் சில பொருள்களிலுங்கூட என்ன அதிசயம் புதைந்திருக்கிறது!

நுரைப் பூச்சி

வி. ஜகந்நாதன்

ஒரு நாள் மாலை நானும் என் நண்பரும் உலாவி வரச் சென்றோம். சாலையோரங்களில் பல வகைச் செடிகள் வளர்ந்திருந்தன. இரு புறங்களிலும் வயல்களில் நெல் பயிர் பச்சைப் பசேலென்று வளர்ந்து, கண்ணைக் குளிரச் செய்தது. என் நண்பர் பிராணி நூல் நிபுணர். வழியில் ஓரிடத்தில் நின்று ஒரு செடியைக் கவனிக்க ஆரம்பித்தார். நானும் அதை நோக்கினேன். அவர் எதைப் பார்த்தார் என்று என்னால் அறிய முடியவில்லை.

சிறிது நேரம் கழித்து அவர், "இதைப் பார்த்தீரா?" என்று கேட்டார்.

"எதை?"

"இதோ இந்தச் செடியிலிருக்கும் நுரையை."

அந்தச் செடி, செழித்து வளர்ந்த ஒரு கோரைப் புல் செடி. அதன் தண்டில் ஓரிடத்தில் சிறிது நுரை இருந்தது. ஒரு மனிதன் எச்சில் துப்பினால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது அது. ஆகவே நான், "யாரோ வழிப் போக்கன் எச்சில் துப்பியிருக்கிறான். அது தான் இந்த நுரை" என்றேன்.

புன்னகையுடன், "அளவில் எச்சில் போன்று இருந்தாலும், நல்ல வெளுப்பாயுள்ள இந்த நுரை ஒருபூச்சியின்வாசஸ்தலம் என்றால் நீர் நம்புவீரா?" என்றார் நண்பர்.

"நீங்கள் சொல்லுவது விந்தையாய் இருக்கிறதே? இதற்குள் ஒரு பூச்சி வாழ்வதாவது! அது எப்படி முடியும்?" என்று கேட்டேன்.

"இதோ பார்" என்று சொல்லிக்கொண்டே நண்பர், அருகில் கிடந்த ஒரு குச்சியை எடுத்து, அதனால் அந்த நுரையைச் சிறிது சிறிதாக அப்புறப்படுத்தினார். தவளை போன்ற ஒரு சிறிய ஜந்து அந்தத் தண்டில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கடைசியில் கண்டேன். "இதென்ன, குட்டித் தவளையா?" என்றே கேட்டு விட்டேன்.

"இது தவளை அல்ல. இது ஒரு பூச்சி. உனக்குத்தான் பூச்சிகளைப் பற்றித் தெரியுமே?" என்று ஆரம்பித்தார் நண்பர்.

"பூச்சி கடித்தால் உடலில் அரிப்பு ஏற்படும்; தடிப்பு உண்டாகும் என்று தெரியும். பூச்சிகளைக் கண்டாலே எனக்கு அருவருப்பும் அச்சமுந்தான்" என்றேன்.

"அப்படியா? அது கிடக்கட்டும். பிராணி வர்க்கத்தில் பூச்சிகள் ஒரு தனி வகுப்பு. அவைகளின் வாழ்க்கையில் நான்கு நிலைகள் உண்டு. முதல் நிலை முட்டை; இரண்டாம் நிலை புழு; மூன்றாம் நிலை 'ப்யூப்பா'; நான்காம் நிலையில்

மூலம்: சிங்காரம் பிள்ளை ஹைஸ்கூல் பத்திரிகை
(தமிழ்: டிசம்பர் 1952 - ஏப்ரல் 1953), வில்லிவாக்கம்.

தான் பூச்சியின் சுய உருவம் ஏற்படும்.''

''அப்படியானல் முட்டை நிலை தவிர, மீதி இரண்டு நிலைகளிலும் பூச்சியின் உருவம் வேருக இருக்குமா?''

''ஆம். இரண்டாம், மூன்றும் நிலைகளிலுள்ள ஜந்துவைப் பார்த்தால் அவை வேறு என்று தோன்றும். இதோ இந்தக் கோரைத் தண்டில் தென்படும் ஜந்து மூன்றும் நிலையிலுள்ளது தான்'' என்ருர்.

''இதைச் சுற்றி நுரை ஏது?''

''அதுவா? இந்த ஜந்து இந்த மாதிரி பாதுகாப்பில்லாதிருந்தால் பறவைகளும், பிற விரோதிகளும் இதைக் கொத்தித் தின்றுவிடும். அப்படி அகப்பட்டுக்கொள்ளாமல் இருப்பதற்காக இத்தகைய பாதுகாப்பைத் தேடிக்கொள்கிறது.''

''இந்தப்பூச்சியின்பெயர்என்ன?

''இதை நாம் நுரைப் பூச்சி என்கிருேம். ஆங்கிலத்தில் இதைக் 'கக்கூ ஸ்பிட்' அல்லது 'ஃப்ராக் ஹாப்பர்' என்று கூறுவார்கள்.''

இப்படிப் பேசிக்கொண்டே இருக்கையில் அந்த ஜந்து சட்டென்று கோரைத் தண்டின் வேருெரு பாகத்துக்குத் தாவிச் சென்றது. அங்கே சிறிது நேரத்துக்கெல்லாம் நுரை கிளம்பி, முன்போல் அதை மூடிக்கொண்டது.

ஆச்சரியத்தோடு, ''நுரை எப்படி ஏற்படுகிறது?'' என்று நண்பரைக் கேட்டேன்.

''இந்த ஜந்து நாக்கினல் தண்டில் கீறும். தண்டில் பரவிச் செல்லும் திரவத்தை அப்படியே உறிஞ்சும். தன் உடலில் எவ்வளவு கொள்ளுமோ அதற்கு மீறிய திரவத்தை இது இழுப்பதால், அதைத் துளித் துளியாக வெளிவிடுகிறது. அதுவே இந்த மாதிரி நுரைத்து இந்த ஜந்துவை மூடிக்கொள்கிறது'' என்ருர்.

''நுரையினல் வேறேதாவது பயனுண்டோ, இந்த ஜந்துவுக்கு?''

''உண்டு. இதன் மெல்லிய தோல் வெளிக்காற்றில் இருந்தால் வெயிலினலும் காற்றினலும் உலர்ந்து போகும். அந்த மாதிரி ஏற்படாமலிருக்க நுரை மிகவும் பயன்படுகிறது.''

''மிகவும் ஜாக்கிரதையாய் நுரையை ஒதுக்கினீர்களே; அது ஏன்?''

''தொலைவில் வரும் அபாயத்தைக்கூட இந்த ஜந்து எளிதில் அறிந்துகொள்ளும். இந்தச் செடியைச் சற்று அசைத்தாலும் அல்லது நுரையைக் கலைத்தாலும், அபாயம் வந்ததாக உணர்ந்து பூச்சி வெகு வேகமாய்ச் செடியின் வேருெரு பாகத்துக்குப் போய்விடும். அதைத் தவிர்க்கவே, மிகவும் நிதானமாக நுரையை நீக்கினேன்.''

''இது முற்றும் வளர்ந்தபின் எப்படித் தோன்றும்?''

என் நண்பர் உடனே பதிலளிக்கவில்லை. பக்கத்தில் சுற்று முற்றும் பார்த்துவிட்டுச் சிறிது தூரம் சென்ருர். சட்டென்று நின்று, ஒரு பூச்சியைக் கையிலெடுத்தார். அதை என்னிடம் கொண்டு வந்து காட்டி, ''இப்படித்தான் இருக்கும்'' என்ருர்.

அதைப் பார்த்த பின் எனக்கு வியப்பாக இருந்தது. அதற்கு நான்கு இறக்கைகளும் ஆறு கால்களும் இருந்தன. பின்னங்கால்கள் நீண்டு வலிவோடிருந்தன. ''இது தத்துக்கிளிபோல் கால்களைப் பெற்றிருக்கிறதே!'' என்றேன்.

"ஆமாம். இதன் கால்கள் தாவிக் குதித்துச் செல்லப் பயன்படுபவையே. இது நீண்ட தூரம் தாவிக் குதிக்கும். தன் இறக்கைகளை இது பயன்படுத்திக்கொள்வதில்லை. எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள இறக்கைகளை விடத் தன் கால்களையே இது அதிகமாக நம்புகிறது. இந்தப் பூச்சி மிகவும் சுறுசுறுப்பானது. இந்த இனத்தைச் சேர்ந்தது தான் 'ஃபாரெஸ்ட் ஹாப்பர்' என்ற தத்துக்கிளி. இது பருத்தும் அதிக அழகுள்ளதாகவும் இருக்கும்; பார்ப்பதற்கு அந்துப் பூச்சி போல் இருக்கும்; இதன் நிறம் கவர்ச்சிகரமாக இருக்கும்."

"அந்துப் பூச்சி என்பது என்ன?"

"அதுவும் சாதாரணமாக நாம் பார்க்கக் கூடிய பூச்சி வகைகளில் ஒன்றுதான்" என்று நண்பர் கூறினார். இத்துடன் நேரமாகிவிட்டதால் இருவரும் வீடு திரும்பினோம்.

சந்தேகத்துக்கு இடமான ஆசாமி

அமெரிக்க இம்மிகிரேஷன் அதிகாரி: நீர் எப்போதாவது ருஷியாவுக்குப் போனதுண்டா?

பிரிட்டிஷ் பிரயாணி: உண்டு.

அதிகாரி: எதற்காக?

பிரயாணி: ஸ்டாலினைப் பார்க்க.

அதி: சாதாரணமாகவா, அரசியல் சம்பந்தமாகவா?

பிர: அரசியல் சம்பந்தமாக.

அதி: ஸ்டாலினோடு சேர்ந்து உழைத்தீரா?

பிர: ஆமாம். ஸ்டாலினுக்கு என்னாலான உதவியெல்லாம் புரிந்திருக்கிறேன்.

அதி: நீர் அப்படி உதவி புரிந்திராவிட்டால், ஸ்டாலின் கவிழ்ந்திருப்பார் என்று எண்ணுகிறீரா?

பிர: அநேகமாய்க் கவிழ்ந்திருப்பார்.

அதி: நீர் தீவிரவாதியா?

பிர: ஒரு காலத்தில் தீவிரவாதி. பிறகு மாறிவிட்டேன்.

அதி: அமெரிக்க ஆட்சி முறைக்கு விரோதமான ஏதாவது ஓர் ஆட்சியில் நீர் நம்பிக்கையுள்ளவரா?

பிர: ஆம்.

அதி: எப்படிப்பட்ட ஆட்சி முறையில்?

பிர: மன்னர் ஆட்சியில். மன்னர்களிடம், முக்கியமாக ராணிகளிடம் எனக்கு நம்பிக்கை.

அதி: சந்தேகத்துக்கிடமான ஆசாமியாக இருக்கிறீர். நீர் எல்லிஸ் தீவுக்குப் போய்த் தங்கியிரும். உம்முடைய வரலாறுகளை லண்டனிலிருந்து வரவழைத்துப் பார்க்க வேண்டும். அப்புறந்தான் அமெரிக்காவுக்குள் உம்மை அநுமதிப்பதா, இல்லையா என்று தீர்மானிக்க வேண்டும். உம்முடைய பெயரும் விலாசமும் என்ன?

பிர: வின்ஸ்டன் சர்ச்சில், 10 டவுனிங் தெரு, லண்டன்.

—'நேஷனல் ந்யூஸ் லெட்டர்,' லண்டன்.

இதுவா பிரயாணம் செய்யும் வகை!
அல்ல, அல்ல. ஆனால் வேறு எப்படி?

குருட்டுப் பிரயாணம்

மா. கா. தேச்பாண்டே

பிரயாணம் செய்வதென்றால் எனக்கு வெகு ஆசை. எவ்வளவோ வேலைகள் இருந்தாலும் அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு நான் பிரயாணத்துக்குக் கிளம்பி விடுவேன். மனத்தை எப்போதும் பசுமையாக வைத்துக்கொள்வதற்கு அதைப் போன்ற உயர்ந்த மருந்து வேறு கிடையாது. ஆனால் பிரயாணத்தைப்பற்றி என் எண்ணங்களே அலாதியானவை.

பிரயாணம் செய்வது நுணுக்கமான கலை. தினந்தோறும் வெவ்வேறு வீடுகளுக்குச் செல்லும் தபால்காரனுடைய மனப்பான்மையோடு வெளியூருக்குப் புறப்படுவதில் பயனில்லை. பிரயாண ஆனந்தத்தை அநுபவிக்க வேண்டுமானால் அதற்கென்று தனி மனப்பான்மை வேண்டும். அது இல்லாமல் எவ்வளவு மைல்கள் சுற்றினாலும் அது குருட்டுப் பிரயாணந்தான்.



வெவ்வேறு வகையான தகவல்களைச் சேர்ப்பதற்காக வெளியூருக்குப் போவது, குருட்டுப் பிரயாணத்தில் ஒரு வகை. இந்த மாதிரியான பிரயாணத்தில் நம் மனம் போனபடி மகிழ்ச்சி பெற முடியாது. போகும் இடத்திலே ஓர் அறிவாளியையோ வழிகாட்டியையோ சந்தித்து, சரித்திர வரலாறுகளைக் கேட்பதுதான் இத்தகைய பிரயாணியின் நோக்கம். இப்படிப்பட்டவன் ஆக்ராவுக்குப் போய், தாஜ்மகாலைப் பார்த்தால், 'இதைக் கட்ட எவ்வளவு செல

காப்பிரைட்: மனோஹர் (மராட்டி: நவ.'53), கிர்லோஸ்கர்வாடி, ஸதாரா ஜில்லா.

வாயிற்று? எத்தனை தொழிலாளர் இதற்காக வேலை செய்தார்கள்? எந்தச் சிற்பியின் மேற்பார்வையில் இந்தக் கட்டிடம் முடிந்தது?' என்று கேள்விகளை அடுக்குவான். சிவாஜியின் சிலையைப் பார்க்கப் போனால், இந்தப் பிரயாணி அந்தச் சிலையின் அழகைக் கவனிக்கமாட்டான். சிவாஜியின் பிறந்த நாளைப்பற்றி நடந்த விவாதங்களை யெல்லாம் மனத்திலே நிரப்பிக் கொண்டு அந்தச் சிலையைச் சூனி யப் பார்வையோடு பார்ப்பான். மைசூரில் பிருந்தாவனத்தைப் பார்க்கப்போனால், அதற்காக எவ் வளவு பணம் வீணாயிற்று என் பதை இவன் கணக்குப் போட்டுப் பார்ப்பான். இப்படிப்பட்ட பிர யாணிகள் எந்த இடத்துக்குப் போனாலும் தகவல்கள் சேர்ப்பதி லேயே குறியாக இருப்பார்கள். அந்த இடத்திலுள்ள அழகைக் கண்டு அநுபவிக்க இவர்களுக் குப் பொழுதே இராது. இவர்கள் எந்த அறிவைப் பெறுவதற்காக இவ்வளவு துடிக்கிறார்களோ அந்த அறிவை வீட்டில் தங்கள் அறை யில் உட்கார்ந்தபடியே பெற முடிந்



திருக்கும். இப்படி அறிவுக் கண் ணோடு சுற்றுகிறவர்கள், பிரயா ணக் கலையைப் பொறுத்தமட்டில் குருடர்களே.

எப்பொழுதும் காமிராவும் கையு மாகச் சுற்றுகிறவர்கள் இரண் டாவது வகையினர். நம் நாட் டுக்கு வரும் வெள்ளைக்காரர்கள் பெரும்பாலும் இப்படித்தான் இருக்கிறார்கள். வேடிக்கையாக இங்குமங்கும் திரிந்து களிப்படைய இவர்களால் முடியாது. எதைப் பார்த்தாலும் உடனே படமெடுப் பதில்தான் இவர்களின் கவனம் செல்லும். எந்த இடத்தையும் இவர்கள் தங்கள் கண்ணால் பார்க் காமல் காமிராவைக் கொண்டு தான் பார்ப்பார்கள். உண்மை யான பிரயாணி இப்படிக் காமி ராவை எடுத்துக்கொண்டு கிளம்ப மாட்டான். புது இடங்களின் சோபையை அவன் தன் மனக் கண்ணிலே பதித்துக்கொள்வான். மனம் போனபடி ஊர் சுற்றுவது தான் பிரயாணத்திலுள்ள பெரிய ஆனந்தம்.

எந்த ஊருக்குப் போனாலும் உடனே தங்கள் பிரயாணத்தைப் பற்றிப் புத்தகம் எழுதுகிறவர்கள்

மூன்றுவது வகையினர். இவர்களைக் கண்டால் எனக்குப் பரிதாபமாக இருக்கும். தங்கள் அறிவையும் கல்விப் பயிற்சியையும் வெளிப்படுத்துவதற்காக இவர்கள் எவ்வளவு நஷ்டப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். தாங்கள் அறிந்ததையெல்லாம் குறிப்பு எடுத்துக்கொள்வதிலேயே இவர்களுடைய காலம் போய்விடுகிறது. பிரயாண இன்பம் இவர்களுக்குத் துளியும் கிடைப்பதில்லை. ஊர் சுற்றும் குமாஸ்தாக்கள் என்று இவர்களைச் சொல்லிவிடலாம். ஓர் இடத்தின் அழகைக் கண்ணாரக் காண்பதற்குப் பதிலாக இவர்கள் காகிதமும் பேனுவுமாகக் குறிப்பு வரைந்துகொண்டு நிற்பார்கள். புத்தகம் எழுதுவதற்காகவே பிரயாணம் செய்கிறோம் என்ற எண்ணம் இவர்கள் மனத்தை விட்டுக் கணப்பொழுதும் நீங்காது. மனிதன் வீட்டை விட்டு வெளியூருக்குச் செல்வதன் நோக்கம், அங்கிருந்து திரும்பி வந்தவுடனே தன் பிரயாண நூலின் புருஃபைப் பார்க்கவேண்டும் என்பதுதானு!

நாலு நாளைக்கு நமக்குத் தெரிந்தவர்களை விட்டு வெளியே எங்காவது போய், சாதாரண ஆசாமியைப்போல நடமாடவேண்டும் என்பதுதான் பிரயாணத்தின் நோக்கம். நாம் பெரிய மனுஷர் என்ற எண்ணத்தை மறக்க வேண்டும். நமக்குத் தெரியாத ஓர் இடத்துக்குப் போக வேண்டும். பழகியவர்களிடம் அறிமுகக் கடிதம் வாங்கிக்கொண்டு போய், புது ஊரில் சுற்றுவதிலே பயன் இல்லை. எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் வெளியூர் போவதில்தான் என்ன ஆனந்தம்! நீங்கள் எங்கு வேண்டுமானுலும் உட்காரலாம்; எங்கும் சுற்றலாம். உங்கள் உடையைக் கண்டு யாரும் சிரிக்கமாட்டார்கள். நீங்கள் பட்டாணிக் கடலை தின்றுல் யாரும் முணுமுணுக்க மாட்டார்கள். சுற்றுப்புறக் காட்சிகளை விருப்பம் போலப் பார்க்கலாம்.

குருட்டுப் பிரயாணிகளில் நான்காவது வகையினரும் உண்டு. இவர்கள் கால அட்டவணை போட்டுக்கொண்டு அதன்படி பிரயாணம் செய்வார்கள். இன்ன இடத்தில் அரைமணி நேரம் தங்கவேண்டும், இன்ன இடத்தில் இரண்டு மணி நேரம் தங்கவேண்டும் என்று இவர்கள் முன்னதாகவே தீர்மானித்து விடுவார்கள். குறித்த நேரத்துக்குமேல் இவர்கள் எங்கும் ஒரு நிமிஷங் கூடத் தங்கமாட்டார்கள். இவர்களுக்கும் ராணுவச் சிப்பாய்களுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை.

சுதந்தரமாகப் பறக்கும் பறவையைப்போல நம் மனம் போன வாறு சுற்றுவதற்காக வீட்டை விட்டுப் புறப்படுவதுதான் சரியான பிரயாணம். இத்தகைய பிரயாணி ஏதாவது ஒரு மலைமேல் உட்கார்ந்துகொண்டு சூரிய அஸ்தமனத்தைப் பார்த்துக்கொண்டே பொழுது போவது தெரியாமல் மயங்கியிருப்பான்; காலையில் பனித்துளிகள் மரங்களிலிருந்து டப் டப் என்று சிந்தும் போது, ஒரு குன்றில் சாய்ந்து நீல வானத்தைப் பார்த்துக்கொண்டே காற்றின் தண்மையை அநுபவிப்பான். கடற்கரையிலே அமர்ந்து அலைகளை வரவேற்றுத் தன்பாட்டுக்குப் பாடுவான். அவன் தன்னை மறந்து இயற்கையோடு ஒன்றிப் போய் இன்பக் கடலிலே ஆழ்ந்திருப்பான்.

பாலும் பேரீச்சையுமே மனிதன்
உயிர் வாழப் போதுமாம்!

முழு உணவுப் பழம்

★

தித்திப்புத் தின்பண்டம் யாருக்குத்தான் பிடிக்காது? "ஆனல் டாக்டர்கள் என்னவோ தித்திப்பான தின்பண்டங்களைத் தின்பதால் பல் கெட்டு விடுகிறது; அதன் விளைவாக உடல் நலம் கெடும்" என்று சொல்லுகிருர்கள்.

பல்லுக்குக் கெடுதல் உண்டு பண்ணுமல் தித்திப்பின் இன்பத்தையும், போஷணையையும் கொடுக்கக் கூடிய பொருள் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால், பேரீச்சம் பழம் இருக்கிறதென்று போஷண நிபுணர்கள் கூறுகிருர்கள்.

பேரீச்சம் பழம் இந்தியாவில் சுலபமாகக் கிடைக்கிறது. இதன் விலையும் மிகக் குறைவு. பேரீச்ச மரங்கள் நம் நாட்டில் பெருவாரியாக வளர்கின்றன. ஆனல் மிக நல்ல பழங்கள் அராபியாவிலிருந்தே கிடைத்து வருகின்றன. அராபியர்கள் பேரீச்சம் பழங்களையும், ஒட்டகங்களின் பாலையும் மாத்திரமே உணவாகக் கொண்டு மாதக் கணக்கில் பாலைவனத்தில் பிரயாணம் செய்கிருர்கள்.

அன்ருட உணவில் இயற்கை உணவுப் பொருள்கள் முக்கியம். உடல் வளர்ச்சிக்கு அவசியமான சத்துப் பொருள்கள் இயற்கை உணவுகளில் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, செயற்கை முறைகளைக் கையாண்டு சமைத்தோ வேறு விதமாகவோ பக்குவம் செய்யாமல், இயற்கையாக உள்ள படியே நாம் உட்கொள்ளும் எந்த உணவும் உடலுக்கு நல்லது.

பேரீச்சம் பழம் மிகச் சிறந்ததோர் இயற்கை உணவு. அவசியமான எல்லாச் சத்துக்களும் பேரீச்சம் பழத்தில் நிறைந்திருக்கின்றன. 'சேமித்து வைத்த சூரிய வெளிச்சம்' என்று ஒருவர் இதற்குப் பெயர் வைத்திருக்கிருர். இது மரத்திலிருக்கும்போதே சூரிய வெப்பத்தினல் கனிந்து பழமாகிறது. "ஈச்ச மரத்தின் தலை நெருப்பிலும், பாதம் தண்ணீரிலும் இருக்க வேண்டும்' என்று கூறும் அராபியப் பழமொழியொன்று உண்டு. இந்தியாவிலுங்கூடப் பேரீச்சை மரங்கள் மணல்பாங்கான பிரதேசத்திலும் பாலைவனப் பிரதேசத்திலுந்தான் அதிகமாக வளர்கின்றன. தாங்கள் வளர்வதற்கு வேண்டிய உணவுச் சத்தைப் பூமிக்கடியில் அதிக ஆழத்திலிருந்து இந்த மரங்கள் கிரகித்துக் கொள்கின்றன.

பேரீச்சம்பழத்தை வயது வித்தியாசமில்லாமல் சிறுவர்களும் பெரியவர்களும் உட்கொள்ளலாம். இயற்கைச் சர்க்கரை இதில் அபரிமிதமாக அடங்கியிருக்கிறது.

மூலம்: தென் தூது (தமிழ்: 17-11-'53), திருவனந்தபுரம்.

அதை எளிதில் ஜீரணித்துக் கொள்ள முடிகிறது. அது அதி விரைவில் ரத்தத்தில் கலந்து விடுகிறது. இயற்கை முறைப் படியே பக்குவப்படுத்தியதும், கொழுப்புச் சத்து அற்றதுமான சர்க்கரையே பேரீச்சம் பழத்தில் இருக்கிறது. நாம் சாதாரணமாக உபயோகிக்கும் சர்க்கரையிலும், அந்தச் சர்க்கரையினுல் செய்த தின்பண்டங்களிலும் உள்ள கெடுதலான அம்சங்கள் இதில் கிடையாது.

மேலும், உடல் வளர்ச்சிக்கு அத்தியாவசியமான 'புரோட்டீன்' போன்ற உணவுச் சத்துக்களும் பேரீச்சம் பழத்தில் இருக்கின்றன. ரத்த விருத்திக்கும், எலும்பையும் பற்களையும் உறுதிப்படுத்துவதற்கும் அத்தியாவசியமான அயம் (இரும்பு), கால்ஷியம் (சுண்ணும்பு) போன்ற சத்துக்களும் பேரீச்சம் பழத்தில் மிக அதிகமாக இருக்கின்றன. மாக்னீஷியம், ஸோடியம், பொட்டாஷியம், ஃபாஸ்ஃபரஸ் முதலிய சத்துக்களும் பேரீச்சம் பழத்தில் அடங்கியிருக்கின்றன. 'ஏ' வைட்டமின், 'பி 1' 'பி-2' வைட்டமின்கள், 'பி-காம்ப்ளெக்ஸ்' வைட்டமின்கள் இவையெல்லாம் பேரீச்சம் பழத்தில் நிறைய இருக்கின்றன. ஆனுல் 'ஸி', 'டி' வைட்டமின்கள் மிகவும் சொற்பமாகவே இதில் இருக்கின்றன.

உடல் வளர்ச்சிக்கு இந்தப் பொருள்களெல்லாம் அத்தியாவசியம். ஓர் அவுன்ஸ் மாமிசத்தில் கிடைப்பதை விட மூன்றில் ஒரு பங்கு அதிகமான அயச் சத்து, அதே அளவுள்ள பேரீச்சம் பழத்தில் கிடைக்கிறது.

பேரீச்சம் பழத்துடன் பாலையும் சேர்த்துக்கொண்டால், முழு உணவு கிடைத்துவிடுகிறது. ஒரு பவுண்டு பேரீச்சம் பழமும், ஒரு சேர் பாலும் சாதாரண மனிதர் ஒருவருக்கு ஒரு நாளைக்குப் போதுமான உணவாகும்.

உணவுப் பொருளாகப் பயன் படுவது மாத்திரமல்லாமல், மலச் சிக்கலுக்கு நல்ல மருந்தாகவும் இது உதவுகிறது. காந்திஜீ பேரீச்சம் பழத்தையும் வெள்ளாட்டுப் பாலையும் பழங்களையுமே புசித்துத் திடகாத்திரமாக வாழ்ந்து வந்தார்.

உணவுப் பொருளாக உபயோகிக்கும் பேரீச்சம் பழம் நல்ல இடத்திலிருந்து கிடைத்ததாக இருக்க வேண்டும். சாதாரணமாகக் கடைகளில் விற்பனை செய்கிற பேரீச்சம் பழங்களில் பெரும்பாலானவை அசுத்தமும் தூசியும் கலந்தவையாக இருக்கின்றன. அவற்றை நன்ருகக் கழுவிய பிறகே உட்கொள்ள வேண்டும்.

பேரீச்சம் பழத்தை ஒரே சமயத்தில் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடுவதால் அஜீர்ணம் ஏற்படக் கூடும். எனவே, உணவு உட்கொள்ளும் போது கொஞ்சம் பேரீச்சம் பழத்தையும் சேர்த்துக்கொண்டு அதை நன்ருக மென்று உட்கொள்வது தான் நல்லது.

எப்போதும் செய்

உனக்குப் பயமாயிருக்கும் காரியங்களையே எப்போதும் செய்.

—ரால்ஃப் வால்டோ எமர்ஸன்



கம்யூனிஸ்ட் வேட்டையாடி

★

இவரைப் பற்றித்தான் மாஜி ஜனாதிபதி ட்ரூமன் சமீபத்தில் ஆத்திரத்தோடு, "மெக்கார்த்தியிஸம் என்று ஒரு சொல் அகராதியிலேயே ஏறிவிட்டதே!" என்று ஆத்திரத்தோடு சொன்னார். ஸெனெட் கமிட்டி ஒன்றுக்கு மெக்கார்த்தி தலைவர். சர்க்காரில் உள்ள கம்யூனிஸ்ட்டுகளைக் கண்டு பிடிப்பதே அந்தக் கமிட்டியின்வேலையாம். அதன் முன் வந்து சாட்சி சொல்லும்படி ட்ரூமன் உள்பட எத்தனையோ பெரிய மனிதர்களையெல்லாம் கட்டளையிட்டு இவர் ஆர்ப்பாட்டம் செய்கிறார். இந்த வரலாறு ஜூலியன் எம். ஸ்னைடர் என்ற பிரபல எழுத்தாளர் 'மகஸீன்' டைஜெஸ்'டில் எழுதியதன் சாரம்.

ஜோஸெப் ரேமாண்ட் மெக்கார்த்தி 1908 நவம்பர் 14-ஆம் தேதி ஐக்கிய அமெரிக்கா விஸ்கான்ஸின் ராஜ்யத்தில் ஒரு சிறு கிராமத்துக் குடியானவர் வீடு ஒன்றில் பிறந்தார். தகப்பனின் பெயர் பிரிட்ஜெட்; தாயின் பெயர் டிமதி. அவர்களுக்கு இவர் ஐந்தாவது குழந்தை. அமெரிக்காவில் 'கிராமர் ஸ்கூல்' என்று வழங்கும் நடுத்தரப் பள்ளிப் படிப்பைப் பதினான்காவது வயதில் முடித்தார். பின்பு தகப்பனின் பண்ணையில் வேலை செய்யப் போனார். சிறிது காலத்தில் தாம் தனியாய்த் தொழில் செய்ய ஆசை கொண்டார். தகப்பனிடமிருந்தே ஓர் ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கிக்கொண்டார். அதில் கோழிக் குஞ்சுப் பண்ணை ஒன்று வைத்தார். ஐந்து வருஷகாலம் நாள் ஒன்றுக்குப் பன்னிரண்டு முதல் பதினைந்து மணி நேரம் வரை உழைத்தார். அந்த ஜில்லாவிலேயே மிகச் சிறந்ததொரு கோழிக் குஞ்சுப் பண்ணையாகவே அது வளர்ந்தது. அப்புறம் 1927-மாரிக்காலத்தில் ஒரு நாள் இவருக்கு இன்ஃப்ளூயன்ஸா காய்சசல் கண்டு படுத்த படுக்கையானார். கவனிப்பாரற்று இவருடைய கோழிக் குஞ்சுகளெல்லாம் குளிரில் விறைத்துப் பசியால் மாண்டன. அருமையாய் வளர்த்த

பண்ணை அடியோடு சீரழிந்தது. சமையலறையில் உட்கார்ந்தபடியே இவர் கண்ணீர் விட்டார். அதோடு மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு, மானவா என்ற ஊருக்குப் புறப்பட்டார். அப்போது இவருக்கு வயது பத்தொன்பது. அங்கே ஒரு கடையில் மானேஜராக அமர்ந்தார். பெரிய முரடர் என்று அதில் பெயரெடுத்தார். பல மாதங்கள் சென்றன. திடீரென்று கடையின் லாபம் குறைந்துகொண்டே வரத் தொடங்கியது. அது என்ன மர்மமோ விளங்கவில்லை. முதலாளி இவரை வேலையிலிருந்து நீக்கினார். மேல் படிப்பு இல்லாமல் பயனில்லை என்று இவருக்குத் தோன்றியது. மானவா ஹைஸ்கூலைப் படையெடுத்தார்.

ஹைஸ்கூல் படிப்பை ஒரே வருஷத்தில் தாம் முடிக்கவேண்டும் என்று இவர் திட்டம் போட்டார். பள்ளிக்கூட அதிகாரிகளிடமெல்லாம் இவருடைய இந்தத் துரிதகாலத் திட்டத்தைப்பற்றிய வெகு சிரமப்பட்டுத் தர்க்கம் செய்ய வேண்டியதாயிற்று. கடைசியில் இவரைப் பரீட்சித்து முடிவு செய்தார்கள். ஒரு வாத்தியார் 'பாஸிங் கிரேட்' தர மறுத்துவிட்டாள். அந்த வாத்தியார் ஒரு வாலிபப் பெண். அவளை எப்படியோ குழையடித்து அவள் மனத்தை மெக்கார்த்தி மாற்றிவிட்டார். தாம் போட்ட திட்டப்படியே ஒரே வருஷத்தில் ஹைஸ்கூல் டிப்ளோமா வாங்கினார். பிறகு சட்டப் படிப்புப் பயில மார்க்வெட் யூனிவர்ஸிட்டியில் சேருவதற்காக எழுதிய விண்ணப்பத்தில் கூசாமல் 'நான்கு வருஷம் ஹைஸ்கூலில் படித்தேன்' என்று எழுதினார்.

காலேஜில் மூன்று விஷயங்களில் முதன்மையாக விளங்கினார். முதலாவதாக, எந்தப் பரீட்சை வந்தாலும் சரி; முதல் நாள் இரவு முழுவதும் கண் விழித்து 'நோட்'ஸை யெல்லாம் உருப்போட்டுவிடுவார். பரீட்சை முடிந்த இரண்டே நாளில் அத்தனையையும் அடியோடு மறந்துவிடுவார். இரண்டாவதாக, மகா முரட்டுத்தனமாகக் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு யாரிடமும் குஸ்திக்குக் கிளம்பிவிடுவார். எல்லாருக்கும் இவரைக் கண்டாலே நடுக்கம். மூன்றாவதாக, மாணவர் சங்கம் எதிலாவது தலைமைப் பதவிக்குப் போட்டி போடுவார். ஸீனியர் வகுப்பில் ஒரே ஓட்டில் வகுப்புத் தலைமைப் பதவியைப் பெற்றார். இந்த அதிகப்படி ஓட்டு எப்படிக் கிடைத்ததாம் தெரியுமோ? அதைத் தமாஷாகத் தாமே பின்னால் வெளியிட்டு விட்டார். தமக்குத் தாமே ஓட்டுப் போட்டுக்கொள்வதில்லை என்று பிரமாணம் செய்திருந்தும், அதை மீறி அப்படிப் போட்டுக்கொண்டு தம்மைத் தாமே தலைவராக்கிக் கொண்டாராம்.

1935-இல் காலேஜ் படிப்பை முடித்துப் பட்டம் பெற்றார். லாயர் என்ற விலாஸ போர்டு போட்டுக்கொண்டு தொழில் புரியத் தொடங்கினார்.

அரசியலில் முதல் முதலாக டெமொகிராட்டிக் கட்சியில் சேர்ந்தார். உள்ளூர் டெமொகிராட்டிக் வாலிபர் சங்கத்துக்கு 1936-இல் தலைவரானார். சமூகச் சீர்திருத்தங்களை ஆதரித்தார். உலக சர்க்கார் வேண்டுமென்று கூட வாதித்தார். ஆனால், இந்தத் தாராள அபிப்பிராயங்களெல்லாம்

பலிக்கவில்லை. ஜில்லா அட்டார்னி பதவித் தேர்தலில் கடுந் தோல்வி அடைந்தார். அதன்மேல் ஷவர்னே என்ற நகரத்துக்குக் குடி கிளம்பினர். ரிப்பப்ளிக்கன் கட்சியில் சேர்ந்தார். ஸ்தல ரிப்பப்ளிக்கன் தலைவரான மைக் எபெர்லீன் என்பவருக்கு உதவி அதிகாரியாகப் பதவியேற்ருர்.

தலைவர் எபெர்லீனுக்கு ஸர்க்கூட் ஜட்ஜ் பதவி ஒன்றைப் பெற ஆசை. தாம் உதவி புரிந்து எப்படியாவது அவர் அதைப் பெறச்செய்வதாக அவருக்கு மெக்கார்த்தி தைரியம் கூறினர். அடுத்தபடியாக எபெர்லீன் காதில் விழுந்த செய்தி என்ன தெரியுமா? அந்த ஜட்ஜ் பதவியை மெக்கார்த்தியே அபகரித்துக்கொண்டார் என்பதுதான்.

பின்பு, எட்கர் வி. வெர்னெர் என்ற அறுபது வயதுக் கிழவர் இவருக்குப் பலியானர். கிழவர் தம் வயதை மாற்றிப் பொய் சொல்லுகிருர் என்று குற்றம் சாட்டி, அரசியலிலிருந்து அவரை மெக்கார்த்தி வீழ்த்தினர். இதைத் தொடர்ந்து கில்பெர்ட் லாப்லீ என்பவர் இவருடைய கோபத்துக்குப் பாத்திரமானர். விவசாய இலாக்காவின் அட்டார்னி பதவியை இதன் பலனக லாப்லீ இழந்தார்.

மெக்கார்த்தி ஜட்ஜ் பதவி வகித்தபோது சடசட என்று வெகு சீக்கிரத்தில் 'கேஸ்'களைத் தீர்த்துக் கட்டிவிடுவார். விவாகரத்து வேண்டுவோருக்கெல்லாம் உடனே அளித்து விடுவார். இவருடைய தீர்ப்பு ஒன்று பற்றிய விவரங்களை மேல்கோர்ட்டார் அறிய விரும்புவார்கள்போல் தோன்றியது. அதுபற்றிய ரிக்கார்டுகளை யெல்லாம் தட்சணமே மெக்கார்த்தி 'பாலிஷ்' செய்துவிட்டார்; அதாவது அவை மாயமாய் மறைந்துவிட்டன!

ஐக்கிய அமெரிக்காவின் கப்பல் போக்குவரத்து (மெரீன்ஸ்) இலாக்காவில் 1942 முதல் 1944 வரையில் மெக்கார்த்தி பதவி வகித்தார். ஒரு கமிஷனுடன் சென்ருர். அப்போது அவர் பார்த்தது ஓர் உளவு அதிகாரி (இன்டெலிஜென்ஸ் ஆஃபீஸர்) என்ற பதவிதான். ஆனல் ஒரு சிப்பாய் (பிரைவேட்) பதவியே வகித்ததாகப் பின்னல் பிரசாரம்செய்தார். தெற்குப் பஸிஃபிக் சமுத்திரத்தில் பின் பக்கப் பீரங்கி வீரர் (ரீயர் வீட் கன்னர்) பதவி வகித்தபோது, காலில் இவர் கடுமையான காயம் அடைந்ததாக அட்மிரல் செஸ்டர் டபிள்யூ. நிமிட்ஸ் இவரைப் பாராட்டி விசேஷக் குறிப்பு (ஸ்பெஷல் ஸைட்டேஷன்) ஒன்றுகூட எழுதிவிட்டார். ஆனல், இவர் அடைந்த அந்தக் காயம் வேறு விதமாக நேரிட்டது. கப்பல் ஏணியிலிருந்து இடறி விழுந்து அடிபட்ட காயம் அது!

கப்பல் போக்குவரத்து இலாக்காவிலிருந்து திரும்பிய மெக்கார்த்தி மீண்டும் அரசியலில் தீவிரமாகக் குதித்தார். 1946-இல் விஸ்கான்ஸின் ராஜ்யத்துப் பிரதிநிதி ஸ்தானத்துக்கு ரிப்பப்ளிக்கன் கட்சியின் சார்பாக ஸெனேட் சபை அபேட்சகரை நிறுத்துவதற்கான பிரைமரி தேர்தல் நடந்தது. ஏற்கனவே ஸெனேட்டர் பதவி வகித்துக்கொண்டிருந்த கிழவர் ராபர்ட் லா ஃபாலெட் என்பவர் மீண்டும் தேர்தலுக்கு நின்ருர். அவருடன் மெக்கார்த்தி

போட்டியிட்டார். அப்போது கம்யூனிஸ்ட் கட்சி விஸ்கான்ஸின் ராஜ்யத்தில் ஸி. ஐ. ஓ. என்ற தொழிலாளர் சங்கத்தின்மீது பூரண ஆதிக்கம் செலுத்திக்கொண் டிருந்தது. மெக்கார்த்தியைத் தங்கள் மனிதர் என்று கம்யூனிஸ்ட் ஆசாமிகள் எண்ணினார்கள். இவரை ஆதரித்தார்கள். சொற்ப ஓட்டு மிகுதியால் மெக்கார்த்தி வெற்றி பெற்றார். ஆனால், சில வாரத்துக்கெல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் தம்மிடம் அண்டாதபடி அவர்களுக்குக் 'கல்தா' கொடுத்துவிட்டார். உடனே நடந்த தேர்தலில் டெமொகிராட்டிக் கட்சியின் சார்பாக ஹொவார்டு மிக் மர்ரே என்பவர் போட்டியிட்டார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆள் என்று அந்தத் தேர்தல் பிரசாரத்தின்போதே மெக்கார்த்தி தூஷிக்கத் தொடங்கிவிட்டார்.

ஆயினும், 1950 வரையில் கம்யூனிஸ்ட் வேட்டையில் மெக்கார்த்தி உக்கிரமாக ஈடுபடவில்லை. கம்யூனிஸ்ட்டை ஆதரித்த விட்டோ மார்க்காண்டோனியா என்பவரைப் போலவே இவரும் பல சமயம் ஓட் செய்தார். வெளி நாடுகளில் கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த ராணுவ உதவி செய்ய வேண்டும் என்று ஒரு சமயம் வந்த தீர்மானத்தை இவர் எதிர்த்து ஓட் செய்தார்.

ஸெனேட்டர் பதவி பெற்று வாஷிங்டன் நகருக்கு இவர் வந்ததன் முக்கிய நோக்கம் கம்யூனிஸ்ட்டுகளை ஒழிப்பதல்ல; சொந்தப் பொருள் நெருக்கடியைத் தீர்த்துக்கொள்வதுதான். இவர் பெரிய சூதாடி. ஸ்டாக் மார்க்கெட் சூதாட்டத்தில் 1943-ஆம் ஆண்டு இவருக்குத் தசையடித்தது. 43,000 டாலர் லாபம் அடைந்தார். அதன் பிறகு மார்க்கெட்டை ஒரு கை பார்த்துவிடுவதென்று 3 லட்சம் டாலர் கடன் வாங்கிச் சூதாடினார். எல்லாப் பணமும் போயிற்று. வாஷிங்டன் நகருக்கு வந்தபோது, கடன்காரர் தொல்லை தாங்கவில்லை. இ. மெர்ல் யங், ஜான் மராகன் என்ற இரண்டு பணக்கார வியாபாரிகளை இவர் சிநேகம் பிடித்தார். வாஷிங்டன் நகருக்கு வந்ததும் இவர் செய்த முதல் காரியம் இதுதான். ஜான் மராகன் அப்போது ஒரு கம்பெனியின் பிரதிநிதியாக இருந்தார். சர்க்கரை சுத்தம் செய்யும்போது வழியும் 'மொலாஸஸ்' என்ற தேன்பாகு வியாபாரம் செய்வது அந்தக் கம்பெனி. இந்தச் சரக்கின்மீது இருந்த கண்ட்ரோல்கள் ஒழிய வேண்டுமென்று மராகன் விரும்பினார். பணம் கொடுத்தால் இதற்கு உதவி செய்வதாகத் தாமாகவே முன் வந்தார் மெக்கார்த்தி. அடுத்தாற்போல் சர்க்கரை மீதிருந்த கண்ட்ரோல்கள் போகவேண்டுமென்று பெப்ஸி கோலா கம்பெனி வியாபாரி ரஸ்ஸல் அருண்டேல் விரும்பினார். அவருக்கு உதவுவதாகச் சொல்லி அவரிடம் இருபதினாயிரம் டாலருக்கு மெக்கார்த்தி ஒரு செக் வாங்கிக்கொண்டார். இதன்மேல் 'பெப்ஸி கோலா குட்டி' என்று இவருக்கு ஒரு கேலிப் பெயர்கூட வழங்கிற்று.

ஆனால், இதெல்லாம் இவருடைய செலவுக்குப் போதுமா? ஜாயின்ட் காங்கிரஸ் கமிட்டி ஒன்றுக்கு இவர் தலைவராயிருக்கும்போதே, லஸ்ட்ரன் கார்ப்பொரேஷனைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு ஒரு துண்டுப்பிரசுரம் எழு

தித் தரச் சொன்னார்கள்; அதற்குச் சம்மானமாகப் பத்தாயிரம் டாலர் பணமும் கொடுத்தார்கள். இதுதான் எந்த மூலைக்கு? நீண்ட காலத் தவணையில் தமக்கு ஏராளமாகப் பணம் கொடுத்து உதவக் கூடிய பெரும் பணக்காரக் கோஷ்டி ஒன்றைச் சிநேகம் பிடிக்க மெக்கார்த்தி விரும்பினார். நாஜிகளின் இன உயர்வுக் கொள்கையில் பற்றுதல் கொண்ட வால்டர் ஹார்னிச்பெகர் என்ற கட்டிடக் குத்தகை முதலாளி அப்படிப்பட்ட ஒரு கோஷ்டியைத் தமக்குத் தெரியும் என்றார். அந்த வியாபாரியின்லாய ரோடுகூடச் சென்று, சில நாஜிகளின் சார்பாக இவர் வாதாடினார். இரண்டாவது உலக யுத்தத்தில் நூற்றைம்பது அமெரிக்கரை ஈர இரக்கமின்றிச் சுட்டுப் படுகொலை செய்த குற்றவாளிகள் அந்த நாஜிகள். யூதர்களின் சூழ்ச்சியால் அந்த நாஜிகளை அநியாயமாய்க் கைது செய்திருப்பதாக இவர் வாதித்தார். ஒருவழியாக இவருடைய கடன்களெல்லாம் தீர்ந்தன.

ஆனால், இவருடைய பண வரவு செலவுபற்றிச் சந்தேகங்கள் எழுந்தன. 1951-இல் ஸெனேட் ஸப் கமிட்டி ஒன்று இவருடைய கணக்குகளைக் கிளறிப் பார்க்கத் தொடங்கியது. நண்பர்களையும் உறவினரையும் உபயோகித்து இவர் வருமான வரி மோசடி செய்திருப்பதாகக் கமிட்டிக்கு அநுமானங்கள் கிடைத்தன. மேலும் லட்சத்து நாற்பத்தெண்ணாயிரம் டாலருக்கு ரத்து செய்த செக்குகள் இருந்தன. அவை வருமானவரிக் கணக்குக்கு வரவில்லை. தவிர, ஸ்டாக் மார்க்கெட் சூதாட்டத்தில் இவர் செலவிட்ட நாலு லட்சம் டாலரையும் வருமான வரிக் கணக்கில் இவர் காட்டவில்லை.

இவையெல்லாம் பதினாலு மாதத்தில் புலனாயின. ஆனால், இவர்மீது இப்படி வந்த புகார்கள் முற்று முன், நாட்டிலே மக்களுக்குக் கம்யூனிஸ்ட் கிலி அதிகரித்தது. இதுதான் சமயம் என்று, சர்க்காரிலும் வெளியிலும் கம்யூனிஸ்ட்டுகள் இருப்பதாகப் பலர் மீது இவர் குற்றம் சாட்ட ஆரம்பித்தார். தம் வரவு செலவுகளை ஸெனேட் கமிட்டி விசாரிக்கத் தொடங்கியதே கம்யூனிஸ்ட் சூழ்ச்சிதான் என்றார். கம்யூனிஸ்ட்டுகளை ஒழிக்கும் வேலையில் தாம் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், ஸெனேட் கமிட்டி முன் ஆஜராகத் தமக்கு நேரமில்லையென்று சொல்லி மறுத்துவிட்டார். இவர் கூறிய குற்றச் சாட்டுகளெல்லாம் தேசத்தின் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் கொட்டையெழுத்துக்களில் பிரசுரமாயின. இவருடைய வரவு செலவுக் கணக்குகள்பற்றிய விசாரணை நடக்காது ஒரு மூலைக்குப் போய்விட்டது.

மெக்கார்த்தியின் கம்யூனிஸ்ட் ஒழிப்புப் போர் 1950-இலேயே தொடங்கிவிட்டது. சர்க்காரின் ராஜாங்க இலாக்காவில் 205 உத்தியோகஸ்தர்கள்மீது ஏற்கனவே சந்தேகம் பிறந்து, காங்கிரஸ் விசாரித்திருந்தது. அவர்களில் பலரை வேலையிலிருந்து நீக்கியாயிற்று; பலர்மீது குற்றமில்லை என்று தீர்மானமாயிற்று. ஆனால், அந்த ஜாபிதாவையே ஆதாரமாகக் கொண்டு, சர்க்கார் உத்தியோகங்களில் 205 கம்யூனிஸ்ட்டுகள் இருப்பதாக மெக்கார்த்தி கூச்ச

லிட்டார். பிறகு, அந்த ஜாபிதா 57 பெயர்கள் அடங்கியதாகக் குறைந்தது. சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும் கம்யூனிஸ்ட் என்று ஒரே ஒருவர் பெயரைக்கூடக் கடைசியில் மெக்கார்த்தியால் சுட்டிக் காட்ட முடியவில்லை. ஆயினும், அவருடைய புகழ் ஸ்தாபிதமாகிவிட்டது. பின்னால் ஒரு கம்யூனிஸ்ட்டோ, கம்யூனிஸ்ட் அநுதாபி ஒருவனோ சர்க்காரில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒவ்வொரு தடவையும், அவனைக் கண்டுபிடித்த பெருமை தம்மையே சேரும் என்று மெக்கார்த்தி மார் தட்டிக்கொண்டார். குறி தவறாத அரசியல் ஆயுதம் ஒன்று கடைசியாக மெக்கார்த்தி கையில் அகப்பட்டுவிட்டது.

வலது சாரிப் பத்திரிகைகளில் மிகச் சிலவற்றைத் தவிர மற்றவையெல்லாம் மெக்கார்த்தியின் கம்யூனிஸ்ட் வேட்டையைப் புகழ்ந்தன. தாராள நோக்கம் கொண்ட பத்திரிகைகளோ மெக்கார்த்தியின் 'பெரும் பொய்த் தந்திர'த்தை அம்பலம் செய்த வண்ணம் இருக்கின்றன. அமானுஷ்ய சக்தி கொண்ட 'அரசியல் பிசாசு' என்று இவரை அவை வர்ணிக்கின்றன. மெக்கார்த்தியின் தந்திரமெல்லாம் எப்படியாவது தமது பெயர் அடிக்கடி பத்திரிகையில் கொட்டையெழுத்துத் தலைப்போடு வந்துகொண்டிருக்க வேண்டும் என்பதுதான்.

'ஸெனேட் சபை அங்கத்தினர் என்றால், பொறுப்போடு நடப்பார். அவர் பேசுவதெல்லாம் உண்மை' என்பது அமெரிக்க மக்களின் நம்பிக்கை. அதை மெக்கார்த்தி பயன்படுத்திக்கொள்கிறார். கையிலே ஒரு கட்டுக் காகிதங்களுடன் டெலிவிஷன் முன்பு இவர் நின்றுகொள்வார். "இதோ என் கையிலே ருசுக்கள் இருக்கின்றன" என்று அந்தக் காகிதங்களை ஆட்டுவார். சாதாரண அமெரிக்கன் இதைக் கட்டாயம் நம்பி விடுகிறான். "இந்த ருசுக்களைப் பார்க்கலாமா?" என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டால், மெக்கார்த்தி, "ஓஹோ! அவை என்னுடைய வேறு பெட்டியில் இருக்கின்றன. அடுத்த தடவை பேசுகிற இடத்துக்கு வாருங்கள்; காட்டுகிறேன்" என்பார். இது சாத்தியமே இல்லை. இவர்தான் இருந்த இடத்தில் இல்லாமல் சதா காலமும் ஓடிக்கொண்டேயிருக்கிறாரே!

மெக்கார்த்தியின் ஒரு குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று மற்றவர் நிரூபித்து விடுவார்கள் என்று தோன்றுகிற சமயத்தில், இவர் அதை விட்டு வேறு ஒரு திசையில் திரும்பி உக்கிரமான போர் தொடங்கிவிடுவார். பொது ஜனங்களின் கவனம் அதில் பதிந்துவிடும். 'யாராவது ஒருவருக்கு ஸோவியத் உளவர் என்றோ கம்யூனிஸ்ட் என்றோ கூசாமல் விலாசமிட்டு விட்டால், அது உடனே கொட்டையெழுத்துத் தலைப்புடன் பத்திரிகைகளில் பிரசுரமாகிவிடும். பிறகு, அந்தக் குற்றச்சாட்டை மழுப்பினாலும் சரி, அது ஆதாரமற்றது என்று ருசுவானாலும் சரி; ஒரு முறை போட்ட விலாசம் வெகு நாள் வரையில் மறையாமல் துலங்கும்' என்பது மெக்கார்த்திக்குத் தெரியும்.

'அமெரிக்காவைப் பிடித்த பெருஞ் சனியன்' (க்ரேட் அமெரிக்கன் மெனேஸ்) என்று இவரைப் பல பத்திரிகைகள் சித்திரிக்கின்றன. அதைப்பற்றி

இவர் சந்தோஷமே அடைகிறார். கெட்ட பெயர் வந்தாலும் பரவா யில்லை; அதன் மூலம் தமது பெயர் விளம்பரமானால் சரிதான் என்பது இவர் கருத்து.

மெக்கார்த்தி பெரிய அரசியல் சூழ்ச்சிக்காரர். இவருடைய ஆசை கட்டுக்கு அடங்காதது. இவர் பெயரளவில்தான் ரிப்பப்ளிக் கட்சி அங்கத்தினராயிருக்கிறார். யாரிட மும் எந்தக் கட்சியிடமும் இவ ருக்கு விசுவாசமில்லை. சுயநலம் ஒன்றே இவருடைய வாழ்க்கை லட்சியம். கம்யூனிஸ்ட் ஒழிப்புப் போராட்டம் என்பதெல்லாம் இவருக்கு ஓர் அரசியல் ஃபுட்பால். இதோடு விடவில்லை; இப்போது மெல்ல வெளி நாட்டு விவகாரங் களிலும் இவர் மூக்கை நுழைத் திருக்கிறார். வருங்காலத்தில் யார் யாரைக் குற்றம் சாட்டலாம் என்று இப்போதே தயார் செய்துகொண் டிருக்கிறார். 'தேசத்தின் ரட்சகர் இவரே' என்று சொல்லக்கூடிய கௌரவத்தை ஒரு நாள் இவர் அடைய வேண்டாமா? அதற் காகத்தான் இந்த வேலையெல் லாம்.

அமெரிக்க ஜனாதிபதி ஆகும் விருப்பம் தமக்கு இல்லை என்று இவர் சமீபத்தில் சொல்லியிருக் கிறார். ஆயினும், இவருடைய ஆசைக்கு வேறு எந்தக் குறிக் கோளும் ஈடாகாது. கொஞ்ச காலத்துக்கு முன்பு இவரே ஒரு நண்பரிடம், "ஒன்று, நான் கடைசி யாக ஜெயிலுக்குப் போய்ச் சேரு வேன்; அல்லது வொயிட் ஹவு ஸில் போய் உட்காருவேன்" என்று சொல்லியிருக்கிறார்.

என்ன ஆச்சரியம்!

ஓர் இங்கிலீஷ்காரர் அமெரிக்காவுக்கு விஜயம் செய் தார். அங்கே முதல் முதலாக ஒரு மோட்டார்க்காரை ஓட் டிச் சென்றார். ரஸ்தாவில் ஒரு பெரிய விளம்பரப் பலகை இருந்தது.

அதில் எழுதியிருந்த வாசகம் இது: "மெதுவாக ஓட்டு. உன்னைத்தான்!"

"அடேடே! நான் இங்கே வந்தது இவர்களுக்கு எப் படித் தெரிந்தது!" என்று இங்கிலீஷ்காரன் ஆச்சரியப்பட் டான்.

—டெக்ஸாஸ் ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்

ஈயைப்பற்றி யானை—

யானை திரும்பித் தன் வாலிலே இருந்த ஈயைப் பார்த் துக் கேலியாக, "இந்தா, வீணே என்னை மோதித் தள்ளாதே" என்றது.

—'மிலிட்டண்ட் லிபரெல்'

—யானையைப்பற்றி ஈ

"நான் யானையைக் கண்டாலே, அவ்வளவாக மதிப்ப தில்லை. மச்சிலே தலைகீழாக நடக்க அதனால் முடியவில்லையே" என்றது ஈ.

—'டிட்-பிட்ஸ்'

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபிலிமிண்டியா' நவம்பர் '53 இதழில் வந்தவை.



கேள்வி: காந்தியடிகள் செய்த உண்மையான அற்புதம் என்ன?

பதில்: உலகத்திலேயே அதிகமாகப் பேசும் பலசாலியாகிய நேருவை நமக்குத் தந்ததுதான். அது என்றும் நினைவிலிருக்கும் அற்புதம்.

* * *

கே: வயிறு என்பது என்ன?

ப: ஒழுக்கத்தின் மயானம்.

* * *

கே: 'கோபால்ட் குண்டு!' - இந்தப் பயங்கரமான வஸ்து என்ன?

ப: பயப்படாதீர்கள். மரணத்துக்கு என்ன வேஷத்தைப் போட்டாலும் அதற்கு ஒரே ஒரு முகந்தான் உண்டு.

* * *

கே: அமெரிக்க ராஜ தந்திரத்தின் சமீபகாலத்து மாதிரி என்ன?

ப: இந்தியக் கணபதியைக் கொரிய சமாதான மகாநாட்டில் நீரிலாழ்த்திவிட்டு, ஐ. நா. சபையில் இந்தியக் கௌரிக்கு முடி சூட்டுவது.

* * *

கே: பெண்ணின் கைகளில் என்ன இருக்கின்றன?

ப: படுக்கையையும் தொட்டிலையும் உற்பத்தி செய்கிற கருவிகள் இருக்கின்றன.

கே: புதிதாக மணம் செய்துகொண்ட தம்பதிகள் இன்பகரமான வீட்டை நிறுவ எண்ணுகிறார்கள். நீங்கள் என்ன யோசனை கூறுவீர்கள்?

ப: பறவைகளைப் பாருங்கள். எவ்வளவு அன்பாக ஆணும் பெண்ணும் இணைந்து கூட்டைக் கட்ட வைக்கோலைக் கொண்டு வருகின்றன; பறவைகளே அதைச் செய்யும்போது மனிதர்கள் செய்யக் கூடாதா?

* * *

கே: உலகங்கள் எத்தனை இருக்கின்றன?

ப: இரண்டே இரண்டு; நமக்குக் கிடைத்த உலகம் ஒன்று; நமக்கு வேண்டுமென்று விரும்புகிறது ஒன்று.

* * *

கே: கல்வி மனிதர்களைக் கடவுளிடமிருந்து விலகச் செய்கிறது என்கிறார்களே?

ப: கல்வியின்முடிவுதான் கடவுள். அவனை அடையும் வரையில் அஞ்ஞான இருளில் தடவிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

* * *

கே: வைராக்கியம், உறுதி, கடினமான உழைப்பு ஆகியவை வாழ்க்கையில் நிச்சயம் வெற்றியை உண்டாக்குமென்று உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் சொல்கிறாரே; உங்கள் கருத்து என்ன?

ப: கல்வியிற் சிறந்த அந்தத் தத்துவ சாஸ்திரி அதிருஷ்டம் என்பதை மறந்துவிட்டார். அவர் சொன்ன எல்லாம் வேண்டும்; அதற்குமேல் அதிருஷ்டமும் வேண்டும். அப்போதுதான் வெற்றி கிடைக்கும்.

* * *

கே: பாகிஸ்தானின் முதல் பிரதம மந்திரி கொலையுண்டார்; இரண்டாவது பிரதமரை வேலையை விட்டுத் தள்ளினார்கள். மூன்றாமவர்?

ப: ராஜீநாமாச் செய்வார்.

* * *

கே: மரண வரியைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அது செல்வக் குழந்தைகளைத் தொட்டிலை விட்டு எழுந்து உழைப்பையும் உத்தியோகத்தையும்பற்றிச் சிந்திக்கச் செய்யும்.

கே: இந்தியப் பட நடிகையின் கணவன் இறந்தால் என்ன ஆகும்?

ப: மறுபடியும் திருமணக் காட்சியை 'ரீ-டேக்' பண்ணுவார்கள்.

* * *

கே: உங்கள் கையில் ஒரே ஒரு ரூபாய்தான் மிஞ்சுகிறது; எப்படிச் செலவு செய்வீர்கள்?

ப: நெருப்புப் பெட்டிகள் வாங்கி விற்பேன். ஒரு நாளைக்கு ஆறு தடவை இப்படி வாங்கி விற்றால், ஒரு ரூபாய்க்கு நான் சாப்பிடலாம்; அடுத்த நாள் வியாபாரத்துக்குக் கொஞ்சம் முதலும் இருக்கும். கடைசி ரூபாயைச் செலவழிக்கவே கூடாது; அதை முதலாக வைத்துக்கொள்ள வேண்டும்.

* * *

கே: அரும்புக்கு மணம் இல்லை.

ப: உதயத்துக்கு உஷ்ணம் இல்லை.

* * *

கே: படப்பிடிப்பு முகூர்த்தம் நடப்பதெப்படி?

ப: ஒரு போலிப் படப்பிடிப்பாளரும் ஒரு போலிப் புரோகிதரும் சேர்ந்து நடத்துவது அது; ஆனால் முட்டாளான பட விநியோகஸ்தர் ஒருவரும் இருப்பார்.

கே: கல்யாணம் என்பது வாழ்க்கையில் மிகவும் மலிவான இன்ப அநுபவமா?

ப: அது மிகவும் தூய்மையானது.

*   *   *

கே: சிலைகளெல்லாம் நடக்கத் தொடங்கினால்...?

ப: அநேகம் சிலைகள் லண்டனுக்கே போய்ச் சேரும்.

*   *   *

கே: இந்தியாவும் பாகிஸ்தானும் சேர ஏதாவது சந்தர்ப்பம் உண்டா?

ப: இல்லை. துண்டுபட்ட அங்கம் மறுபடியும் ஒட்டுவதில்லை.

*   *   *

கே: ஐயோ விடிகிறதே என்ற பயத்தைப் போக்குவது எப்படி?

ப: ஏதாவது பகல் நேர வேலையைச் சிரத்தையுடன் மேற்கொள்ளுங்கள். அப்போது ஒவ்வொரு நாளும் சூரியோதயத்தில் சோம்பேறி நரம்புகளில் புதிய சக்தி ஏறும்.

*   *   *

கே: பழங்காலத்தில் பணத்தை மிச்சப்படுத்தினவனை லோபி என்றார்கள். இப்போது?

ப: மந்திரவாதி.

துருக்கியர் சுருக்க உரை

கறுப்பெருமை வெள்ளைப் பால் கறக்கிறது.

தீபம் அதன் அடிப்புறத்துக்கு ஒளி தருவதில்லை.

காலிக் கோணிப்பை நிமிர்ந்து நிற்காது.

மிக உயரமான மரத்துக்குங்கூட அடியிலே கோடரி காத்திருக்கிறது.

சிங்கத்துக்கு அஞ்சுவதைவிட மூடனுக்கு அதிகமாக அஞ்சு.

கடவுள் ஒரு கதவைச் சாத்தினால், ஆயிரம் புதிய கதவுகளைத் திறப்பார்.

உன் வண்டி கவிழ்ந்தால், எத்தனையோ பேர் வந்து உனக்கு வழி காட்டுவார்கள்.

—துருக்கி சர்க்காரின் பிரசார இலாக்கா.

வாயை மூடு!

இரண்டு சமயங்களில் கட்டாயம் உங்கள் வாயை மூட வேண்டும்: ஒன்று நீந்தும் சமயம்; இரண்டு, கோபம் வரும் சமயம்.

—'க்ரிட்'

ஜூரி!

'ஜூரி' என்பது யாரைக் குறிக்கிறது? எவனுக்குத் திறமை வாய்ந்த லாயர் இருக்கிறார் என்பதைத் தீர்மானிக்கும் பன்னிரண்டு ஆசாமிகளைக் குறிக்கிறது.

—'காரோனெட்'

தீ மிதி ரகஸ்யம்

★

துரோபதை அம்மன் கோவில் உள்ளவிடத்திலெல் லாம் தீ மிதிக்கிறார்கள். அல்லாப் பண்டிகையின் போது தீ மிதிக்கிறார்கள். இந்தச் சாகஸச் செயல் பற்றி நாம் பிரமிக்கிறோம். விஞ்ஞானிகள் இதை ஆராய்ந்துவிட்டுச் சொல்லும் அபிப்பிராயங்களை ஜி. ஏ. ஸெவாஸ்கோ என்பவர் 'ஸயின்ஸ் டைஜெஸ்ட்' கட்டுரை ஒன்றில் வெளியிடுகிறார். அதன் சாரம் இது.

சமீபத்தில் தென்னாப்பிரிக்காவிலுள்ள ஜோஹோன்னஸ்பர்கில் ஓர் அபூர்வமான போட்டி நடைபெற்றது. நாயுடு என்ற ஹிந்து பக்தரும் கிறிஸ்துவக் குரு ஒருவருடைய பிள்ளையாகிய விக்டர் ரேபி என்பவரும் போட்டியிட்டார்கள்.

போட்டிக்குரிய நாளில் காலையில் 20 அடி சதுரமும் ஓரடி ஆழமும் உள்ள குழியைத் தோண்டி ஒருடன் விறகை அதில் அடுக்கினார்கள். விறகுக்குத் தீ மூட்டினார்கள். அது நன்றாக எரிந்து நில மட்டத்துக்குத் தணலெல்லாம் படிந்து நின்ற போது போட்டி ஆரம்பமாயிற்று. செப்பிடு வித்தை செய்வதே தொழிலாக உள்ள ரேபி வெறும் காலோடு அந்தத் தீக் குழியில் நடந்தார். தணலைக் காலால் உதைத்துக்கொண்டு ஆறு தடவை அந்தக் குழியில் நடந்தார். கடைசி முறை நடந்தபோது தம் முதுகில் ஒரு பெண்மணியைச் சுமந்துகொண்டு சென்றார். ஆறு முறை நடந்த பிறகு அவருடைய காலைப் பார்த்தபோது அது சிறிதும் புண்ணாகவில்லை.

இப்போது ஹிந்து பக்தராகிய நாயுடு ஆறு முறையோ அதற்கு மேலோ நடந்து போட்டியில் ஜயிக்க வேண்டும். ஆனால் அவர் மூன்று முறையே நடந்து, அதற்கு மேலே முடியாமல் தாம் தோல்வியடைந்ததாக ஒப்புக்கொண்டார்.

இதைப்பற்றித் தென்னாப்பிரிக்கப் பத்திரிகைகளில் நீண்ட செய்திகள் வெளியாயின.

தீ மிதிபற்றிக் குருட்டு நம்பிக்கையும் பயமும் பல நூற்றாண்டுகளாக ஜனங்கள் கொண்டிருக்கிறார்கள். இதில் ஏதாவது தந்திரம் உண்டா? தீ மிதிக்கிறவர்கள் ஏதாவது ஆவேச நிலையில் இருக்க வேண்டுமா? ஏன் அவர்கள் காலை நெருப்பு எரிப்பதில்லை? பழங்கால முதல் உள்ள இதைப்பற்றி நவீன விஞ்ஞானம் என்ன விளக்கத்தைக் கூறுகிறது?

இன்ன காலத்தில் இதற்காக முதல்முதல் தீ மிதி ஆரம்பமாயிற்றென்று இப்போது சொல்ல முடியாது. ஆனால் இந்தியாவில் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு அது தொடங்கியதென்று நம்புகிறார்கள். இப்போதும், பேய் பிசாசுகளின் தொல்லைகளை நீக்கவும்,

அமானுஷ்ய சக்தியைக் காட்டவும், பரம்பரை வழக்கமாகவும் அதை ஜனங்கள் பல இடங்களில் செய்து வருகிறார்கள்.

தீ மிதிப்பதில் இரண்டு வகை உண்டு. சூடாக்கின பாறைமேல் நடப்பது ஒரு வகை; தணலின் மேல் நடப்பது ஒரு வகை. சூடான பாறையின்மேல் நடக்கும் செயலை ஹாவாய், பிஜி, சொசைட்டித் தீவுகள், குக் தீவுகள் முதலிய பல தீவுகளில் காணலாம். தழல் மேல் நடப்பது இந்தியாவிலேதான் ஆதியிலே தோன்றியது. ஆனால் இப்போது ட்ரினிடாட், நேட்டால், ஜப்பான் முதலிய இடங்களிலும் அந்த வழக்கம் இருக்கிறது.

தேசத்துக்குத் தேசம், ஜனங்களுக்கு ஜனங்கள் இந்த வழக்கத்தில் சில மாறுதல் உண்டு. பாதங்களுக்கு ஒரு விதமான பாதுகாப்பும் இல்லாமல் பன்னிரண்டு அடியிலிருந்து அறுபது அடிவரையில் நடக்கிறார்கள். பாறைமேல் நடப்பதானால் 12 அடி முதல் 15 அடி தூரமே இருப்பது வழக்கம். கொழுந்து விடும் தழலானால் 60 அடி வரையிலும் நடக்கிறார்கள்.

பல பேர்கள் தீ மிதித்தல் ஒரு வகைத் தந்திரம் என்றே இன்னும் நினைக்கிறார்கள். ஜோஸெஃப் டன்னிங்கர் என்பவர் ஒன்று சொன்னார். "குழியின் நடுவில் முதலில் தீ மூட்டி விட்டால் ஓரத்திலுள்ள கட்டைகள் நன்றாக ஒளி விட்டு எரியும்போது நடுவில் உள்ள தழலில் சூடு குறைந்து ஆறிவிடும். அப்போது அங்கே நடக்க முடியும்" என்று அவர் சொன்னார். காலுக்கு நெருப்பின் சூட்டைத் தடுக்கும் மருந்துகளைத் தடவிக் கொண்டு நடக்கிறார்கள் என்று வேறு ஒருவர் சொன்னார். இன்னும் சிலர் ஹிப்னடிஸத்தால் நடக்கிறார்கள் என்றும், கால் மரத்துப் போகும் மருந்துகளைத் தடவிக்கொண்டு நடக்கிறார்களென்றும் ஆளுக்கு ஒரு விதமாகச் சொன்னார்கள்.

சில ஆண்டுகளாக விஞ்ஞானிகள் இந்த விஷயத்தைப்பற்றி இந்தியா, ஜப்பான், ட்ரினிடாட் முதலிய பல இடங்களில் தெர்மா மீட்டரை வைத்துக்கொண்டு சூட்டை அளந்து ஆராய்ச்சி செய்தார்கள். அவர்களில் பலர் சொல்லுவதைப் பார்த்தால், இந்த மர்மம் பூர்ணமாய்த் தெளிவாகவில்லை என்றே தோன்றுகிறது.

மேற் பரப்பில் உலவும் திரவத் துளிகள் (ஸ்ஃபியராய்டல் ஸ்டேட் அவ் லிக்விட்ஸ்) இதற்குத் துணை செய்கின்றன என்பது ஒரு கட்சி. சூடான ஓரிடத்தில் தண்ணீர்த் துளிகள் மேலே அலைந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் அடியில் நீராவி, அந்தத் துளிகளைக் கீழே உள்ள சூடான பரப்புக்கு வர முடியாமல் தடுக்கிறது. இஸ்திரிப் பெட்டியின் சூட்டைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஈரக் கையால் பெட்டியைத் தொட்டுப் பார்க்கிறார்கள். கை விரலில் தண்ணீரும் அதனை அடுத்து நீராவியும் அதற்குப் பின் இஸ்திரிப் பெட்டியும் இருப்பதால், பெட்டியின் சூடு விரலில் தாக்குவதில்லை.

மனிதர்களின் கை சுத்தமாக இருந்தால் கொதிக்கிற ஈயத்திலுங்கூட இதே விதமாக விட்டு எடுக்கலாமாம். தோலில் உள்ள ஈரம் கையை எரியாமல் காப்பாற்று மென்று சொல்கிறார்கள். இப்படிச்

சில மந்திரவாதிகள் செய்து காட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையாகவே கொதிக்கும் ஈயத்தில் கையை விடுகிறார்களென்பதற்குத் திருப்திகரமான சாட்சிகள் இல்லை. இது உண்மையென்று நிரூபிக்கப் பெற்றால் தீ மிதிக்கையில் கால் புண் படாமல் இருப்பதற்கு இதையே காரணம் சொல்லலாம். ஆனால் விஞ்ஞான ரீதியில் லண்டனில் உள்ள ஆராய்ச்சிக் கழகம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் செய்த ஆராய்ச்சியிலிருந்து இந்த ஈர-ஆவி விஷயம் குறைபாடுடையதென்று தெரிய வந்தது.

இந்தியாவிலிருந்து வந்த அல்மட் ஹுஸேன் என்ற பக்கிரி கனல்மேல் நடப்பதாகச் சொன்னான். 4 அடி அகலம், $12\frac{1}{2}$ அடி நீளம், 15 அங்குல ஆழமுள்ள குழியை வெட்டினார்கள். ஒரு டன் விறகும், எழு டன் ஓக் மரக் கட்டைகள், ஒரு மூட்டை கரி இவைகளையும் அந்தக் குழியிலே போட்டுத் தீ யிட்டார்கள். எழு மணி நேரத்துக்குப் பின் கட்டை யெல்லாம் எரிந்து தணலாகித் தரை மட்டத்துக்குப் பரவியிருந்தது.

குழியிலிருந்து 65 அடி தூரம் வரைக்கும் நெருப்பின் சூடு தாக்கியது. விஞ்ஞானிகள் மிகவும் ஜாக்கிரதையாக நெருப்பின் வெப்பத்தை அளந்து பார்த்ததில் மேற்பரப்பின் உஷ்ணம் 1067 டிகிரி (பாரன்ஹீட்) ஆகவும், உள்ளே 1292 டிகிரியாகவும் இருந்தன.

ஹுஸேன் கொரானிலிருந்து சில துதிகளைச் சொல்லிப் பிரார்த்தனை செய்துவிட்டு நெருப்பில் இறங்கி வெகு வேகமாக மூன்றே எட்டில் அந்தக் குழியைத் தாண்டி விட்டான். அவன் மூன்று எட்டு வைத்த காலத்தை 'ஸ்டாப்வாட்ச்' கொண்டு பார்த்தார்கள். சரியாக 1.3 ஸெகண்டுகள் ஆயின. ஹுஸேன் பாதத்தைப் பார்த்தார்கள். எரியும் தணலில் தன் கால் இரண்டு மூன்று அங்குலம் உள்ளே பதியும்படி அவன் நடந்தான். ஆனாலும் அவன் பாதம் கொஞ்சங்கூடப் புண்படவில்லை.

எவ்வளவு தூரமானாலும் நெருப்பில் நடக்க முடியும் என்று அவன் சொன்னான். குழியை வட்டமாகச் சுற்றி நடக்கும்படி விஞ்ஞானிகள் சொன்னார்கள். அவன் அப்படிச் செய்ய மறுத்துவிட்டான். நேர்க் கோட்டிலேதான் நடக்க முடியும் என்றான். மற்றொரு நாள் குழியை 20 அடி நீளத்துக்கு வெட்டி முன் போலத் தணலால் நிரப்பினார்கள். நெருப்பின் மேற்பரப்பு உஷ்ணம் 1364 டிகிரி இருந்தது. இப்போது காற்று வீசியதால் உஷ்ணம் அதிகமாக இருந்தது.

ஹுஸேன் வழக்கப்படி பிரார்த்தனை செய்துவிட்டு அதன் மேல் நடந்தான். இந்த முறை 2.3 ஸெகண்டுகளில் ஆறு எட்டு வைத்து அந்தக் குழியைக் கடந்தான். ஆனால் இப்போது அவன் காலை நெருப்புச் சுட்டுவிட்டது. அவன் வலக்காலில் ஐந்து கொப்புளங்கள் இருந்தன; இடப்பாதம் கன்னிச் சிவந்திருந்தது. நம்பாதவர்களின் முன்னிலையில் நடந்ததால் இப்படி ஆகிவிட்டதென்று சொல்லி, அவன் பிறகு நடக்க மறுத்துவிட்டான்.

இப்போது ஒரு விஞ்ஞானி தம் காலிலிருந்த பாதரட்சையைக் கழற்றிவிட்டு நெருப்புக் குழியின் ஓரத்தில் நின்றார். சில விநாடிகள் சிந்தித்தார். பின்பு வேகமாக

நாலு எட்டு வைத்து அந்தத் தீக் குழியின்மேல் நடந்து அதைக் கடந்தார். அவர் காலைப் பார்த்த போது ஏதோ கொஞ்சம் சிவப்பு இருந்ததே யொழியக் கொப்புளம் ஒன்றும் உண்டாகவில்லை.

இதைப் பார்த்து உற்சாகங் கொண்ட வேறு இரண்டு விஞ்ஞானிகள் கால் செருப்பைக் கழற்றிவிட்டுத் தீக் குழியில் நடந்தார்கள். இருவருக்கும் சிறிதளவு நெருப்புக் காயம் ஏற்பட்டது. அதனால் தங்களுக்கு வேதனை உண்டானதாக அவர்கள் சொல்லாவிட்டாலும் கால் எப்போதும்போல் சௌக்கியமாக இருக்கிறதென்று சொல்ல முடியவில்லை.

இந்த லண்டன் விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள் கடைசியில் தெரிந்துகொண்டது என்ன தெரியுமா? வழக்கமாகத் தீ மிதிக்கிறார்களே, அதில் சூதுவாது ஏதும் இல்லை. வெறும் பாதத்தோடு எந்த மருந்தையும் பூசிக் கொள்ளாமல் சாதாரணமாக அதைச் செய்யலாம். அரை ஸெகண்டு நேரத்துக்குமேல் தணலில் கால் பட்டுக்கொண்டிராதபடி வேகமாக அடி வைத்து நடக்கும்போது தணல் தோலில் உறைக்கும் வேகம் குறைவாக இருப்பதனாலேயே கால் கொப்புளிப்பதில்லை என்று தோன்றுகிறது. தீ மிதிக்கிறவர்களுடைய மனோ பலத்தைவிடத் தேக பலந்தான் அவர்களுக்கு அந்த ஆற்றலைத் தருகிறது; கொழுந்துவிடும் தணலில் காலை அழுத்தாமல் விரைவாக நடக்கும் சாமர்த்தியம் அவர்களுக்கு இருக்க வேண்டும்.

க்விஸ் விடை

(1) மிக வடக்கே இருப்பது மைசூர்; லாட்டிட்யூட் 12டிகிரி 18 மினிட். தெற்கே இருப்பது தஞ்சாவூர்; 10 டிகிரி 48 மினிட். நடுவே இருப்பது திருச்சிராப்பள்ளி; 10 டிகிரி 49 மினிட். (2) 480. (3) பிரேஜில். (4) 475 மைல். (5) மஞ்சூரியா. (6) அசுவினி தொடங்கி ஒவ்வொரு நட்சத்திரக் கூட்டத்திலும் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன. (7) ஹெர்பர்ட் ஹூவர். (8) ஸொம்பா. (9) 1837-இல். (10) பக்கத்தில் உள்ள படந்தான் விடை.





டிக்ஸல் சிங்கம்

வி. வி. பொகீல்

இளைஞர்கள் விரும்பிப் படிக்கும் கதைகளை எழுதியவர், சினிமா உலகில் புகழ் பெற்றவர், நடுத்தர வகுப்பாரின் இன்ப துன்பங்களைச் சித்திரிப்பவர்—வி. வி. பொகீல். அவருடைய கதைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து மராட்டியிலிருந்து தமிழாக்கியிருக்கிறார், கா. ஸ்ரீ. ஸ்ரீ.

நேற்று நான் யமுனாவைப் பார்த்தது முதல் எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. தினமும் இந்த நேரத்துக்கு நான் சர்க்கார் ஆபீசில் உடைந்த நாற்காலியில் உட்கார்ந்து கணக்குகளோடு மாரடித்துக்கொண்டு இருப்பேன். இன்று எந்த வேலையையும் சரியாகச் செய்ய முடியாது என்று தோன்றியதனால், லீவு எடுத்துக் கொண்டேன். வீட்டிலே மனைவியின் தொந்தரவிலிருந்து தப்புவதற்காக வெளியே கிளம்பினேன். யமுனாதான் வற்புறுத்திக் கூப்பிட்டிருக்கிறாளே, அவளிடம் போகலாமா என்று ஒரு முறை நினைத்தேன். மறு கணமே அந்த எண்ணம் மாறிவிட்டது. அருவருப்பைத் தரும் அந்த வறுமையையும், உயிரோடு வாழும் அந்த நரகவாசத்தையும் மறுபடியும் நான் பார்க்க விரும்பவில்லை. ஊரைத் தாண்டி, மலையடிவாரத்திலே போய் உட்கார்ந்தேன். என்னதான் மறக்க முயன்றும் பழைய சம்பவங்கள் அலையலையாக எழும்பின.

பதினைந்து வருஷங்களுக்கு

காப்பிரைட்: மொழிபெயர்ப்பாசிரியருடையது.

முந்திய வாழ்க்கை அது. சோலாப்பூர் ரெயில்வே லயனில் டிக்ஸல் என்று ஒரு சின்ன ஸ்டேஷன். அதற்கு அரசர் என் அண்ணு. ஸ்டேஷன் சின்னதாக இருந்தாலும், அந்தக் காலத்தில் வியாபாரத்தில் அது செழித்திருந்தது. எவ்வளவுதான் நாணயமுள்ளவனுக இருந்தாலும் அந்த ஊரில் ஸ்டேஷன் மாஸ்டராக இருக்கிறவன் பொழுது போவதற்குள் ஏழெட்டு ரூபாயாவது சட்டைப் பையில் போட்டுக்கொள்ளவில்லையென்ருல், அவன் பொருட்காட்சிச் சாலையில் வைப்பதற்குத்தான் லாயக்கானவன். என் அண்ணு வெகு கெட்டிக்காரர். அவரிடம் எனக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. ஸ்டேஷனுக்கு வரும் வியாபாரிகள் எனக்கு வாகனமாகி ஆடுவார்கள்; தினமும் திராட்சையும் கற்கண்டும் எனக்கு நைவேத்தியமாகும். நான் எது கேட்டாலும் கிடைத்துவிடும். இந்தப் பழக்கத்திஞல் என் பிடிவாதம் வளர்ந்தது.

ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் பள்ளிக்கூடம். ஒரு வேலைக்காரனுடைய தோளில் ஏறிக்கொண்டு நான் அங்கே போய் வருவேன். பையன்கள் எல்லாருக்குமே என்னிடம் பயம். கிழவரான வாத்தியார்கூட என்னை மதிப்போடு நடத்திஞர். நான் பள்ளிக்குப் போஞலும் சரி, போகாவிட்டாலும் சரி, படித்தாலும் சரி, படிக்காவிட்டாலும் சரி, ஆண்டுதோறும் மேல் வகுப்புக்குப் போய்விடுவேன். ஆகையால், அண்ணுவின் கோபம் என் ஜோலிக்கு வருவதில்லை.

விடுமுறை நாட்களில் இருபது பையன்களோடு ஊர் சுற்றுவேன். அந்தக் கூட்டத்துக்கு நான் தலைவன். ஸ்டேஷன் ஷெட்டில் கிடக்கும் மணிலாக்கொட்டை, கற்கண்டு, தேங்காய் மூட்டைகள் எங்களை வழிபடுவதற்குத் தயாராக இருக்கும். எனக்கு உதவி செய்கிறவர்களுக்குக் கொள்ளையில் பங்கு உண்டு. மற்றவர்களை நான் அடித்து இம்சித்து வழிக்குக் கொண்டுவருவேன். ஸ்டேஷன் மாஸ்டரின் தம்பி நான். என்னிடம் எவன் பயப்படாமல் இருக்க முடியும்? என்னை எவன் எதிர்க்க முடியும்?

இந்த மாதிரி சமயத்தில்தான் யமுனு என் வாழ்க்கையில் புகுந்தாள். உதவி ஸ்டேஷன் மாஸ்டர் ஒருவர் புதிதாக வந்தார். அவருடைய பெண்ணை நான் தொலைவிலிருந்தே பல தடவை பார்த்தேன். அவளுக்கும் ஏறக்குறைய என் வயதுதான் இருக்கும். ரோஜா போன்ற கன்னம், உருண்ட பெரிய கண்கள், கிழிந்த சட்டை, கிழிந்த பாவாடை, பல நாளாக வாராத பரட்டைத் தலை. இதற்குமுன் இருந்த உதவி ஸ்டேஷன் மாஸ்டர் மணமாகாதவர். ஆகையால், அவருடைய வீட்டுக்குள் நான் எப்போது வேண்டுமாஞலும் போவேன். புதிதாக வந்தவருடைய குடும்பத்தில் எனக்குக் கூட்டாளி எவனுவது இருக்கிருனு என்று பார்ப்பதற்கும், அந்த வீட்டுத் தோட்டத்திலுள்ள பப்பாளிப் பழங்களை உண்ணும் பிறப்புரிமை எனக்குத்தான் உண்டு என்பதை விளம்பரப்படுத்துவதற்கும் நான் அந்த வீட்டுப் புழைக்கடையில் போய் நின்றேன். பப்பாளிப் பழங்கள் மரத்தில் அப்படியே இருப்பதைக் கண்டு களித்தேன். கொய்யா

மரங்களில் இன்னும் காய்கள் பருக்கவே இல்லேயே என்று வருத்தப்பட்டேன். திடீரென்று ஒரு கோபக் குரல் என் காதில் விழுந்தது:

“ஏ பையா! யாரடா நீ, எங்கள் தோட்டத்துக்கு வருகிறவன்? பேசாமல் ஓடிப்போ இங்கிருந்து!”

நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். யமுனு கையில் தடியை ஓங்கிக்கொண்டு என்னைப் பார்த்துப் பேசினுள். இந்த முதல் வரவேற்பு எனக்குக் கசப்பாக இருந்தது. அந்தப் பெண்ணைப் பார்க்கவே எனக்குப் பிடிக்க வில்லே. நான் அங்கேயே அசையாமல் நின்றேன்.

“அடே செவிடு! போகிருயா; இல்லே, உனக்கு உதை வேண்டுமா?”

இந்தப் பேச்சோடு யுத்தம் ஆரம்பித்துவிட்டது. அவள் தடியை வீசிக்கொண்டு என்மேல் பாய்ந்தாள். சரியான சமயத்தில் அவளுடைய தாய் வெளியே வந்தாள்; “யமுனு, எங்கே போனுலும் உன் உபத்திரவம் சகிக்கவில்லேயே! உன்னே வீட்டுக்குள் பூட்டித்தான் வைக்க வேண்டும்!” என்று அதட்டி அவளே அழைத்துப் போனுள்.

யுத்தம் இப்படி நின்றபோதிலும், அந்தப் பெண்ணின் நடவடிக்கை எனக்குப் பிடிக்கவில்லே. எப்படியாவது அவளேச் சரிப்படுத்தவேண்டும். நேற்று வந்த பெண்ணுக்கு இவ்வளவு திமிரா? வெளியே இந்தச் செய்தி பரவினுல் என்னுடைய பெருமை என்ன ஆகும்? அப்புறம் எனக்கு என்ன மதிப்பு இருக்கும்? சேச்சே, மகா மோசம்!

இரண்டு மூன்று மாதங்கள் கடந்தன. அவள் என் கண்ணிலேயே தென்படவில்லே. வீட்டை விட்டு அவள் வெளியே வருவதில்லே. அவர்களின் வீட்டுக்கு அடிக்கடி போய் வரும் என் அண்ணி, அவளுடைய தாய்க்கு உடம்பு சரியில்லே என்றும், படுத்த படுக்கையாக இருப்பதாகவும் சொன்னுள். யமுனு என்னிடம் பயத்தினுல்தான் வெளியே வருவதில்லே என்று நான் நண்பர்களிடையே பிரசாரம் செய்தேன். அவர்களுக்குத்தான் அவளேப் பற்றி ஒன்றுமே தெரியாதே! என்ன இருந்தாலும் அவள் என்னே அவமானப்படுத்தியதை மட்டும் என்னுல் மறக்க முடியவில்லே.

ஒரு நாள் நானுக என் அண்ணியோடு அவர்கள் வீட்டுக்குப் போனேன். யமுனுவின் தாய் ஒரு பழைய மெத்தையில் படுத்திருந்தாள். எங்களேக் கண்டதும் யமுனுவின் தந்தை வெளியே போனுர். அவர் அதற்கு முன்பு கறிகாய் நறுக்கிக்கொண்டிருந்தார். யமுனு அங்கே வந்து தந்தையின் வேலேயைத் தொடர்ந்தாள். பெண்களின் சுபாவப்படி என் அண்ணி அவளுக்கு உதவி செய்யப் போனுள்.

“இருக்கட்டும், அவளே செய்வாள்” என்ருள் அவள் தாய். அண்ணி முல்லே முறுவலோடு தன் வேலேயைச் செய்தாள். யமுனு உள்ளே போய் அரிசியைக் களேந்துவைத்தாள். “இந்தப் பெண்தான் எவ்வளவு சமர்த்து!” என்று என் அண்ணி புகழ்ந்தாள். எனக்கு எரிச்சலாக இருந்தது. என் எதிரியை இவள் புகழ

வாவது! நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

யமுனாவின் தாய் பேசியது என் காதில் விழுந்தது: "என்ன செய்வது? நான் படுத்த படுக்கையாகி விட்டேன். பாழும் சாவு வர வில்லை. பாவம், பத்து வயது நிரம் பாத இந்தக் குழந்தையிடம் வேலை வாங்கவேண்டியிருக்கிறது. நான் இருந்தும் ஒன்றுதான்; இல்லா மலும் ஒன்றுதான்!"

"பம்பாய்க்குப் போய் யாராவது பெரிய டாக்டரிடம் வைத்தியம் செய்யலாமே?"

"அதெல்லாம் செய்தாயிற்று. ஒருத்தர் அனிமியா என்கிறார்; இன்னொருவர் டி. பி. என்கிறார். என் தலைவிதிக்கு யார் என்ன செய்ய முடியும்? ஆண்டவன் என்னைக்குக் கூப்பிடுகிறானோ?"

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நீங்கள் நீண்ட நாள் வாழ வேண்டும். நாலாறுமாதம் இந்த ஊரில் இருந்தாலே உங்கள் உடம்பு சரியாகிவிடும். இந்தக் காற்று உடம்புக்கு நல்லது" என்று அண்ணி பரிவோடு பேசினாள்.

நறுக்கிய காய்கறியை யமுனா வந்து எடுத்துப் போனாள். அவள் தாய் மறுபடி அவளைப்பற்றிப் பேச லானாள்: "இந்தப் பெண் பொல்லாதவள். இவளுக்காக நான் அக்கம் பக்கத்தாரிடம் வசவு கேட்காத நாளே இல்லை. நான் படுத்ததிலிருந்து இவள் வீட்டு வேலை செய்யவேண்டியிருப்பதால் இவளுடைய பொல்லாத்தனம் குறைந்திருக்கிறது. போன வருஷம் ஒரு பெரிய பையனை இவள் மரத்திலிருந்து தள்ளிவிட்டாள். நல்ல வேளையாக அவனுக்குக் கால் ஒடிந்ததோடு நின்றது. இல்லாவிட்டால் எங்கள் பாடு மிகவும் ஆபத்தாகப் போயிருக்கும்" என்றாள்.

அதற்குள் என் அண்ணி, "இதோ என் மைத்துனர் இருக்கிறாரே, இவரும் லேசானவரல்ல. ஊர் முழுவதும் இவரைப்பற்றித் தான் பேச்சு. நீங்கள் பகல் வேளையில் யமுனாவை எங்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். உங்களுக்கும் அமைதியாக இருக்கும். அவளும் சற்று நேரம் விளையாடலாம்" என்றாள்.

இதற்குப் பிறகு யமுனா எப்போதாவது எங்கள் வீட்டுக்கு வருவாள். நானும் இதைத்தான் எதிர்பார்த்தேன். அவளிடம் ஏதாவது குற்றம் கண்டுபிடித்து அவளைப் பரிகாசம் செய்வதே என் வழக்கமாகிவிட்டது. நாங்கள் அன்போடு விளையாட வேண்டும் என்ற பெரியவர்களின் எண்ணத்தை எங்கள் இருவரில் யாருமே நிறைவேற விடவில்லை. பெரியவர்களின் எண்ணந்தான் பெரிதா? எங்களுக்குச் சொந்த விருப்பு வெறுப்புகள் இல்லையா?

யமுனாவுக்கும் எனக்கும் எப்போதுமே ஒற்றுமை இருந்ததில்லை. நாங்கள் ஒருவருக்கு மற்றவர் தோற்றவர் அல்ல. அப்படிப் பார்க்கப் போனால் எங்கள் நட்புக்குத் தடையாக ஒன்றுமே இல்லை. மரமேறுவதிலும், தெரு நாய்களைத் துரத்தியடிப்பதிலும், புழுதியில் விளையாடுவதிலும் அவளுக்கு வெகு ஆசை. அதனால் அவளிடம் எனக்கு மதிப்பு இருந்தது. ஆனால் அவள் கெட்டிக்காரி என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இதனால் எங்களிடையே தினமும் வாக்குவாதம் வளரும்.

வரவர யமுனா தன் வீட்டை

விட்டுப் பக்கத்துத் தெருக்களுக்கும் போய் வரலானுள். மற்றவர்களிடம் அவளைத் தூற்றுவதையே என் தொழிலாகக் கொண்டேன். என்னையே எல்லாரும் பின்பற்ற வேண்டும் என்பது என் ஆசை. முதலில் ஒரு மாதம் வரைக்கும் என் விருப்பத்துக்கு மாருக எதுவும் நடக்கவில்லை. யமுனு இந்த ஊருக்கு வந்து நான்கு மாதங்கள் ஆயின. 'டிக்ஸல் சிங்கம்' என்ற என் பட்டப் பெயருக்கு மாசு வரும்படியாக இந்த நான்கு மாதம் வரைக்கும் ஒன்றுமே நடக்கவில்லை. ஆனல் அதற்கு அப்புரம் நடந்த சம்பவம் என் சிம்மாசனத்தையே குலுக்கிவிட்டது.

ஸ்டேஷன் ஷெட்டில் வெல்ல மூட்டைகள் ஏராளமாக வந்திருந்தன. சூரியன் அஸ்தமித்தவுடனே தோழர்களோடு அதை முற்றுகையிடுவதற்கு நான் திட்டம் போட்டிருந்தேன். யமுனுவையும் அழைத்துப் போய் என் நண்பர்களின் முன்னல் அவளை அவமானப்படுத்த வேண்டும் என்ற ஆசையோடு, என் திட்டத்தை அவளிடம் சொன்னேன். இதைக் கேட்டு அவள் மகிழ்வாள் என்று நினைத்தேன். ஆனல் அவள் முகத்தைக் கோணிக்கொண்டு, "நீ திருடன்! உயிர் போவதானலும் நான் இப்படித் திருடமாட்டேன். பிச்சைக்காரனு நீ? நீ வெல்லமே தின்றதில்லையா? அடடா! என்னவோ ஸ்டேஷன் மாஸ்டரின் தம்பி என்று பீற்றிக்கொள்கிருயே! திருடின வெல்லத்தைத் தின்னும் உன்னைப் பார்க்க எனக்கு விருப்பமில்லை" என்ருள்.

"நீ வெறும் பயங்கொள்ளி!" என்று நான் பெருமிதத்தோடு சொன்னேன்.

"நீ எவ்வளவு பெரிய வீரன் என்பது எனக்கும் தெரியும். நொண்டி நாயைப் பார்த்துக் கல் எறிவதற்கும், பூனையின் வாலை இழுப்பதற்கும், அப்பாவிப் போர்ட்டர்களின் பையன்களை அதட்டுவதற்கும் மலையத்தனை வலு வேண்டுமா என்ன? என்னை எதற்கடா முறைத்துப் பார்க்கிருய்? உன்னைப் பார்த்து நான் பயந்துவிடுவேனு என்ன? திருட்டுத் தொழில் செய்வதுமல்லாமல் அதிகாரம் வேறேயா? எங்கள் தோட்டத்துப் பப்பாளியைப் பார்த்து உனக்கு வாய் ஊறுகிறது அல்லவா? டேய், இனிமேல் அந்தத் தோட்டத்தில் மட்டும் நீ காலை வைத்துப் பார். உன் காலை ஒடித்துவைக்காவிட்டால் என் பெயர் யமுனு அல்ல; ஆமாம்!" என்ருள்.

அவள் கன்னத்தில் பளாரென்று ஓர் அறை விடலாமென்று என் கை துடித்தது. ஆனல் எப்படியோ என்னை அடக்கிக்கொண்டேன். "நாக்கை அடக்கிப் பேசு, யமுனு! என்றைக்காவது எனக்குக் கோபம் வரப்போகிறது. அப்புரம் என்ன செய்வேனே, எனக்கே தெரியாது. 'ஐயோ பாவம், பெண்ணுச்சே!' என்று சும்மா இருக்கிறேன். அதற்காக நீ இப்படி எகிறுவது சரியன்று" என்றேன்.

அவள் கடுமையான குரலில், "சரிதான், போடா! 'ஐயோ பாவம், பையனுச்சே!' என்றுதான் எத்தனையோ தடவை உன்னைச் சும்மா விட்டிருக்கிறேன். இனிமேல் ஜாக்கிரதையாக இரு. என்னிடம் வாலாட்டாதே" என்ருள்.

அந்தப் பெண் அன்றைக்கு எங்களைப் படாதபாடு படுத்திவிட்

டாள். கோள் சொல்லும் போக்கிரிக் கழுதை! எங்களைக் கையும் பிடியுமாகப் பிடிக்க வைத்துவிட்டாள். அண்ணாவின் அடிக்கு நான் பயப்படவில்லை. நடுநடுவே அடிபடுவதனால் உடம்பு ஆரோக்கியமாக இருக்கும் என்பது என் கொள்கை. ஆனால் இரண்டு ஆண்டுகளாகக் கட்டுப்பாடு அற்ற தலைவனாக இருந்த நான் இந்தச் சிறுக்கியிடம் அவமானப் படுவதா? இதற்கு ஒரே மாற்றுத்தான் உண்டு: இவளை எப்படியாவது சரிப்படுத்தி, என்னிடம் மன்னிப்புக் கேட்கும் படி இவளை அழப்படுத்தி, மறுபடியும் நான் முடிசூடா மன்னன் ஆனால்தான் என்னைப் பையன்கள் மதிப்பார்கள். எப்படியும் இரண்டு கட்சிகள் தோன்றத்தான் போகின்றன. சில பயங்கொள்ளிகள் யமுனாவின் கட்சியில் சேரத் தயாராக இருந்தது எனக்குத் தெரியும். அவளைச் சரிப்படுத்தினால்தான் இவர்களும் வழிக்கு வருவார்கள்.

அந்த நல்ல வேளையும் வந்தது. அண்ணா ஏதோ வேலையாக இரண்டு நாள் வெளியூருக்குப் போயிருந்தார். யமுனாவின் தந்தை தம் வேலையோடு அண்ணாவின் வேலையையும் சேர்த்துப் பார்த்தார். நடுப் பகல் நேரம். பெரியவர்களைப் பொறுத்தவரைக்கும் எனக்குக் கவலையே இல்லாத சந்தர்ப்பம் அது. நான் மேலுக்கு நல்லவன் போல, "யமுனா, ஊஞ்சலாடப் போகலாமா?" என்றேன்.

என் மனத்தில் ஒளிந்திருந்த வஞ்சத்தைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. பாவாடையை இழுத்துக் கட்டிக்கொண்டு அவள் வீட்டை விட்டு வெளியே வந்தாள். நான் பத்துப் பதினைந்து பையன்களை அழைத்து வந்தேன். எல்லாருமாக அரை மணி நேரம் விளையாடினோம். கடைசியில் அவளை அழக் கிளப்பவேண்டும் என்ற துணிச்சல் கொண்டு, "என்ன இருந்தாலும் ஆண்பிள்ளை ஆண்பிள்ளைதான்!" என்றேன்.

"எருமைப்போல ஆண்பிள்ளைகளுக்கு இரண்டு கொம்பு முளைத்திருக்குமா என்ன? ஒன்று மட்டும் சரி; கழுதையைப்போல அவர்களின் காது நீண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை" என்று அவள் எடுப்பாகப் பேசினாள்.

"சும்மாப் பேசிவிட்டால் போதாது, யமுனா! நாலு தரம் குதித்தாயானால் தக்காளியைப் போல உன் உடம்பு சிவந்துவிடும்!"

"அவள் சிவப்பு; அதனால் தான்-" என்று சில பையன்கள் அவளுக்காகப் பரிந்தார்கள். நான் அவர்களின் பேச்சைச் சட்டை செய்யாமலே, "இப்போது அந்த ஸிக்னல் வரைக்கும் உன்னால் ஓடவே முடியாது, யமுனா!" என்றேன்.

"என்னை நீ மரப்பாச்சி என்று நினைத்துக்கொண் டிருக்கிறாயா! இதோ பந்தயம்: யார் பின்தங்கினாலும் ஒரு பிடி மண்ணைத் தின்ன வேண்டும். சரிதானா?" என்று அவள் சவால் விடுத்தாள். அதை எற்றுக்கொள்ளும் தைரியம் எனக்கு இல்லை. நான் எற்கனவே விளையாடிக் களைத்துப் போயிருந்தேன். இருந்தாலும் அதை எற்பதைத் தவிர எனக்கு வழி இல்லை. எப்படியும் அவளுடைய உற்சாகத்தைக் கெடுக்க வேண்டும் என்ற நினைப்போடு, "சரி, ஸிக்னல் வரைக்கும்! அதோ எதிரே மண்மேடு தெரிகிறதே,

அதைச் சுற்றிக்கொண்டு திரும்பி வருவதற்கு நீ தயார் என்றால் நான் வருகிறேன்!'' என்றேன்.

''சும்மா அளக்காதே! நீ எப்படியும் மண் தின்னத்தான் வேண்டும்; புறப்படு!'' என்று சொல்லி அவள் என்னைத் தரதரவென்று இழுத்தாள்.

இனிமேல் நான் எப்படிப் பின் வாங்குவது? ஒன், டூ, த்ரீ! எங்கள் பந்தயம் ஆரம்பமாயிற்று. அந்த மண்மேடு ஒன்றரை மைல் தூரம் இருந்தது. அரை மணி நேரம் விளையாடிய பிறகு மூன்று மைல் ஓடுவதற்கு எனக்குச் சக்தி குறைவாகத்தான் இருந்தது. யமுனாவும் வெல்ல முடியாது என்றே நினைத்தேன். மேடுகள் ளங்களிலும், கல்லிலும் முள்ளிலும் மூன்று மைல் ஓடுவது சிறுவர்களின் விளையாட்டா என்ன! ஏதோ ஆவேசத்தில் நான் இந்த ஆபத்தில் மாட்டிக்கொண்டேன். ஆண்டவனுடைய பெயரைச் சொல்லி நான் கண்ணை மூடிக்கொண்டு ஓடினேன். மூன்று இடங்களில் தடுக்கி விழுந்தேன். முழங்கால்கள் இரண்டிலும் சரியான சிராய்ப்பு. பந்தயமும் வேண்டாம், இழவும் வேண்டாம் என்று திரும்பிவிட்டேன். ஆனால் யமுனாவோ ஓடிக்கொண்டே இருந்தாள்.

அரை மணி கழித்து அவள் மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்கத் திரும்பி வந்தாள். பந்தயத்தை அவள் வென்றுவிட்டாள். அவளுடைய பாவாடை நாலைந்து இடங்களில் கிழிந்திருந்தது. முழங்கால்களில் ரத்தமும் மண்ணும் படிந்திருந்தன. நெற்றியில் வேர்வைத் துளிகள் பளபளத்தன. கால்கள் தள்ளாடின. ஆனால் வெற்றி மகிழ்ச்சியில் அவள் எல்லாவற்றையும் மறந்தாள். அவளுடைய அந்த வடிவம் மிகவும் அழகாகத்தான் இருந்தது. ஆனால் எதிரியைப் புகழ்வதாவது! அவளும் அக்கம் பக்கத்தில் இருந்த பையன்களும் நான் தோற்றதற்காகக் கேலி செய்ததைப் பொருட்படுத்தாமல், தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வீடு திரும்பினேன்.

அவளை இனி வெளிப்படையாக எதிர்க்க முடியாது என்று எனக்குத் தெரிந்துவிட்டது. வீரத்திலும் துணிச்சலிலும் அவளோடு நான் போட்டியிட முடியாது. தோல்வியை ஒப்புக்கொள்ளவும் நான் தயாராயில்லை. எப்படியாவது அவளைச் சரிப்படுத்தித்தான் ஆக வேண்டும். எப்படி? இரண்டு நாள் ஓயாது சிந்தித்தேன்.

ஆனால் மூன்றாவது நாளே அவளுடைய தாய் காலமானாள். அதற்குப் பிறகு யமுனாவை நான் பார்க்கவே இல்லை. தாய் இறந்து பதினைந்து நாளைக்கெல்லாம் அவள் தன் தந்தையோடு புனாவுக்குப் போனாள். ஒரு மாதம் கழித்து அவள் தந்தை, சுமார் இருபது வயதுள்ள புது மனைவியோடு திரும்பி வந்தார். அவர்களோடு யமுனா வரவில்லை. புனாவில் அவள் அத்தை வீட்டிலே தங்கிவிட்டாளாம். இப்போதுதான் அவளிடம் எனக்கு அநுதாபம் உண்டாயிற்று. அந்த வீரப் பெண்மணியிடம் பழி வாங்க எண்ணியதற்காக உள்ளூற வெட்கப்பட்டேன். அவளிடம் மன்னிப்புக் கேட்கும் சந்தர்ப்பமே வரவில்லை.

நேற்று, சரியாகப் பதினைந்து வருஷங்கள் கழித்து, நாங்கள்

சந்தித்தோம். நான் ஆபீசிலிருந்து சைக்கிளில் வந்தேன். பின்னால் ஒரு ஜட்கா வந்தது. அதற்கு வழி விடுவதற்காக நான் சைக்கிளைத் திருப்பியபோது, "சுந்து!" என்று, ஜட்காவில் உட்கார்ந்திருந்த பெண் என்னைக் கூப்பிட்டாள். இவ்வளவு சுவாதீனமாக அழைப்பவள் யார் என்று கவனித்தேன். சுமார் இருபத்தைந்து வயதுள்ள பெண், நான்கு குழந்தைகளை அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவை எலும்பும் தோலுமாக இருந்தன. அவள் மடியில் ஒரு பச்சைக் குழந்தை. அவளுடைய கன்னங்கள் குழிந்திருந்தன. நெற்றியில் குங்குமம் இல்லை. அழுக்கும் கிழிசலுமான உடைகள். அவள் யாரென்றே எனக்குத் தெரியவில்லை. "நான் தான் டிக்ஸலில் உதவி ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தவருடைய பெண் - யமுனா. என்னைத் தெரியவில்லையா?" என்று அவள் சொன்னதும், எனக்குப் பழைய நினைவுகள் வந்தன.

"யார், யமுனாவா?" - இதற்கு மேல் எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

"என் வாயை மூடிக்கொண்டாய்? இப்போது உனக்கு அவசரமான வேலை இல்லையென்றால் என்னுடன் வா. நான் இந்த ஊரில்தான் இருக்கிறேன்" என்றாள் யமுனா.

வழியில் நாங்கள் ஒன்றுமே பேசவில்லை. அந்தத் தெருவில் புகுந்ததும் எனக்கு என்னவோ போல இருந்தது. சந்து பொந்துகளிலே இருக்கும் வீடு பங்களாவாக இராது என்பது எனக்கும் தெரியும். ஆனால் மனிதர்கள் வசிக்கும் இடம் இப்படி இருட்டுக்கிடங்காக இராது என்று நினைத்திருந்தேன். அந்த இருட்டுக் குகையைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. யமுனா நாலு குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு நெருக்கமான வழியில் அந்த வீட்டின் பின்கட்டை நோக்கிப் போனாள். அந்த வீட்டுக்குள் எங்கே பார்த்தாலும் தவளைக் குஞ்சுகளைப் போல மனிதர்கள் வளைய வந்தார்கள். எல்லாரும் பாத்திரம் துலக்கும் பொது மேடையொன்று, யமுனாவின் அறைக்கு எதிரே இருந்தது. அதன் பக்கத்தில் இருந்த சாக்கடைகளிலிருந்து குப்பென்று அடித்த நாற்றமும், கொசுக்களின் ஙொய்யென்ற ஓசையும் எனக்குச் சகிக்கவில்லை.

யமுனா தன் அறைக் கதவைத் திறந்தாள். இருட்டில் ஈரத் தரையிலே ஒரு பாய் போட்டிருந்தது. அதில் என்னை உட்காரச் சொன்னாள். "எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. நாளைக்கு வருகிறேனே, யமுனா!" என்றேன்.

"ஆண் பிள்ளையாக இருந்து இப்படிப் பயப்படுகிறாயே! கல்யாணமானதும், இந்தப் பத்து வருஷமாக நான் இந்த இருட்டறையில்தான் இருக்கிறேன். நான் துளியும் பயப்படவில்லை. நீயோ வந்தவுடனே எழுந்து போகத் துடிக்கிறாய். சிறிது நேரம் இரு; டீ போட்டுக் கொடுக்கிறேன்" என்று சொல்லி, அவள் அடுப்பை மூட்டினாள்.

"டீ ஒன்றும் வேண்டாம், யமுனா; நான் நாளைக்கு வருகிறேனே!" என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன்.

"பதினேந்து வருஷம் பொறுத்து இங்கே வந்திருக்கிறாய். உன்னுடைய தோழியின் வறுமையைத்தான் பார்த்துவிட்டுப் போயேன். சர்க்கரை இல்லை; வெல்லம் போட்ட டீதான் உனக்குக் கொடுக்கப் போகிறேன். ஒரே வேளைதான் நான் சாப்பிடுகிறேன். உடுத்துவதற்கு இரண்டு கிழிந்த புடைவைகள். மளிகைக்காரன், விறகுக்காரன், வீட்டுக்காரன் எல்லாரிடமும் பாக்கியும் சண்டையுந்தான். என்னைச் சுற்றி நாலு குழந்தைகள். என்னுடைய இந்த வைபவத்தை நீ பார்க்க வேண்டாமா?"

சிறிது நேரம் நான் ஒன்றுமே பேசவில்லை. பிறகு அவள் கொண்டு வந்து வைத்த டீயைக் குடித்துக்கொண்டே, "நீ எப்படி இந்த நிலைக்கு வந்தாய், யமுனா?" என்றேன்.

"மாற்றாந் தாய்க்கு என்னிடம் அன்பு இல்லை. அவள் வந்ததும் அப்பாவும் மாறிவிட்டார். என் அத்தை என்னை ஒரு நாற்பது வயதுக்காரனிடம் ஒப்புவித்துத் தன் பழியைக் கழித்துக்கொண்டாள். என் கணவர் ஒரு துணிக் கடையில் முப்பது ரூபாய் சம்பளத்தில் இருந்தார். என்னதான் தரித்திரமாக இருந்தாலும் அப்போது இவ்வளவு கஷ்டமில்லை. இரண்டு குழந்தைகள் பிறந்ததும் எனக்கு வழக்கமாக ஜுரம் வர ஆரம்பித்தது. அப்புறம் அது பழகிப் போயிற்று. உடம்பு மெலிந்திருக்கும்போதே இன்னும் இரண்டு குழந்தைகள் பிறந்தன. யுத்த காலத்தில் செலவும் வளர்ந்தது. எந்த நாளிலும் இந்த வீட்டில் நாற்பது ரூபாய்க்குமேல் வந்ததில்லை. போன வருஷம் அவர் திடீரென்று காலமானார். அதற்குப் பிறகு என் கஷ்டம் சொல்லி முடியாது. இன்னது செய்வதென்றே தோன்றவில்லை."

"உன் தகப்பனாருக்கு இந்தச் செய்தி தெரியாதா? என்ன இருந்தாலும், பெற்ற பெண்ணை அவர் காப்பாற்ற மாட்டாரா?" என்றேன்.

"அவருக்கும் இப்போது ஐந்தாறு குழந்தைகள் இருக்கின்றன. இளையாளின் மோகத்தில் இருக்கும் அவரிடம் நான் கை ஏந்துவது சரியல்ல. உயிர் போனாலும் இனி அவர் வீட்டில் நான் கால் வைக்க மாட்டேன். இப்போது ஜட்காவில் பாதிரிகளிடந்தான் போயிருந்தேன்."

"எங்கே போயிருந்தாய்?" என்று நான் பயந்துகொண்டே கேட்டேன்.

"பயப்படாதே. நான் என் குழந்தைகளை வேறு மதத்தில் சேர்க்க மாட்டேன். இந்தக் குழந்தைகளுக்கு ஒரு பிடி சோறும், உடுக்கத் துணியும் கிடைத்துவிட்டால் போதும் என்று பார்க்கிறேன். நாளைக்கே இவர்கள் பெரியவர்களானால் என் கவலை விட்டுவிடும். அதுவரைக்கும் கடமை என்னுடையதுதானே? ஆண்டவன் ஏழைக் குழந்தைகளுக்கு நீண்ட ஆயுளைக் கொடுப்பான். எலும்பு எல்லாம் உருகிவிட்டாலும் அவர்கள் சாக மாட்டார்கள்."

"அப்படிச் சொல்லாதே, யமுனா; உன் குழந்தைகளை நீயே இப்படிச் சொல்லலாமா?"

"என் குழந்தைகள் என்பதனால்தான் உள்ளூற வருத்தத்தோடு சொல்கிறேன். ஏழைகளின் துன்பத்தை நீ கற்பனையில்கூட நினைத்

துப் பார்க்க முடியாது, சுந்து! யுத்த காலத்தில் நான் தினமும் ஆண்டவனிடம், 'எங்கள் வீட்டின் மேல் நிறையக் குண்டுகள் விழுந்து நாங்கள் அழிய வேண்டும், பகவானே!' என்று பிரார்த்தனை செய்தேன். யுத்தத்தில் நாள் தோறும் லட்சக்கணக்கானவர்கள் செத்தார்கள். இப்போது யுத்தம் நின்றுவிட்டது. இனி அந்தப் பிரார்த்தனைக்கும் இடம் இல்லை."

"நீ மனுஷத்தனமே இல்லாமல் பேசுகிறாய், யமுனா" என்றேன்.

இதைக் கேட்டதும் அவளுக்கு எரிச்சலாக இருந்தது. "என்னிடம் மனுஷத்தனத்தைப் பற்றிப் பேசாதே, சுந்து! மனுஷத்தனம் என்ற பெரிய பெயரைச் சொல்லிக் கொண்டு இன்று உலகத்திலே எவ்வளவு அநியாயங்கள் நடக்கின்றன! நீ மனுஷத்தனத்தைப் போற்றுகிறவன்தானே? இந்த நாலு குழந்தைகளையும் நீ அழைத்துப் போய், எப்படியாவது காப்பாற்று, பார்க்கலாம்!" என்றாள்.

அவளுடைய சவாலை ஏற்றுக் கொள்ளும் துணிச்சல் எனக்கு இல்லை. மறு நாள் வருவதாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து நடையைக் கட்டினேன். மனுஷத்தனத்தைப்பற்றி எல்லாருந்தான் பேசுகிறார்கள். சமயம் வந்தால் மனிதனை மனிதன் கொல்லவும் தயங்குவதில்லை. வெறும் பேச்சினாலே வறுமை போய் விடுமா? யமுனாவின் நிலைமையைக் கண்டு எனக்கு வருத்தமாகத் தான் இருக்கிறது. அவளுடைய வாழ்க்கையே மண்ணாகிவிட்டது.

அப்படிப் பார்க்கப் போனால் என் வாழ்க்கைமட்டும் பொன்னாக இருக்கிறதா என்ன? அண்ணா காலமானதும், நானும் அதே வெள்ளத்தில்தான் போகிறேன். அண்ணியையும் அவளுடைய இரண்டு குழந்தைகளையும் நான் பராமரிக்கிறேன். யுத்தத்தின் போது எனக்கு இந்த வேலை கிடைத்தது. மாதம் நூறு ரூபாய் வருகிறது. இந்த வேலையும் எப்போது போய்விடுமோ, சொல்ல முடியாது. இந்த நிலையில் நான் தான் என்ன செய்ய முடியும்?

மண்ணைப் பொன்னாக்க மனிதன் விரும்புவதில் என்ன பயன் இருக்கிறது? உலகத்தில் இன்று யுத்தம் போய்விட்டதா? மனுஷத்தனம் என்று ஜபித்துக்கொண்டே, மனிதனை மனிதன் கொல்லும் விளையாட்டு என்றைக்கும் தீரப் போவதில்லை. அவனவன் தன் வழியைப் பார்த்துக்கொள்வது தான் உலகத்து வழக்கு. இந்த வழக்கை மாற்ற நான் பாடு பட்டால் மட்டும் என்ன நடந்து விடும்? யுத்தத்தில் லட்சக்கணக்கானவர்கள் செத்ததுபோல நாளைக்கு ஒருகால் யமுனாவும் இறந்துவிடலாம்; அவள் குழந்தைகளும் பட்டினி கிடந்து கிடந்து உயிர் விடலாம். அவ்வளவேன், நான் மட்டும் சாகாவரம் பெற்றவனா என்ன? அப்படியிருக்க, நான் என் இந்தத் தொந்தரவுகளையெல்லாம் காதில் போட்டுக்கொண்டு மண்டையைக் குடைந்துகொள்ள வேண்டும்?

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

வறுமையே வல்லமை

பஞ்சம் எங்கும் தாண்டவமாடியது. புத்தர்பிரான் தம்முடைய சிஷ்யர்கள் அனைவரையும் வரச் சொன்னார். "பசியினால் வருந்தும் மக்களுக்கு உணவு தரும் பணியை உங்களில் யாராவது ஏற்றுக்கொள்ள முடியுமா?" என்று அவர்களைக் கேட்டார்.

குபேரனைப்போன்ற ரத்தினாகரன் மௌனமாகத் தலையைக் கவிழ்த்துக்கொண்டான். சிறிது நேரம் கழித்து, "பட்டினி கிடக்கும் லட்சக்கணக்கான மக்களைப் போஷிக்கும் வல்லமை எனக்கு இல்லையே, பகவானே! என் செல்வம் முழுவதும் இந்தப் பஞ்சத்துக்கு முன்னால் தம்பிடி பெறாதே!" என்றான்.

படைத்தலைவன் ஜயசேனன் அடுத்தபடி பேசினான்: "என் ரத்தத்தைப் பெருக்க நான் பெருமகிழ்ச்சியோடு இருக்கிறேன். ஆனால் இன்று என் வீட்டிலேயே போதுமான உணவு இல்லையே!"

தர்மபாலன் எழுந்து நின்றான். அடிவானம் வரைக்கும் பரந்த பெரிய நிலத்துக்கு உடையவன் அவன். "மழை இல்லாமல் என் வயல்களெல்லாம் வறண்டுவிட்டன. நில வரியை எப்படிக் கட்டுவது என்பதே என் கவலையாக இருக்கிறது!" என்று சொல்லி, அவன் பெருமூச்சு விட்டான்.

மனோகரி நிதானமாக நின்றாள். ஏழைப் பிச்சைக்காரன் ஒருவனுடைய பெண் அவள். எல்லாருக்கும் அவள் வணக்கம் செலுத்திவிட்டு, "பசித்தவர்கள் அனைவருக்கும் நான் உணவு கொடுப்பேன்!" என்றாள்.

ஆச்சரியத்தினால் எல்லாரும் அசந்து போனார்கள்.

"நீயா? நீயா? உன்னால் அது முடியவே முடியாது!" என்று எல்லாரும் ஒரே குரலில் பேசினார்கள்.

"நான் உங்கள் எல்லாரையும்விட ஏழைதான். ஆனால் வறுமைதான் எனது வல்லமை. உங்களில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் என் பொக்கிஷம் இருக்கிறது. உங்களில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் என்னுடைய தானியக் களஞ்சியம் இருக்கிறது" என்று மனோகரி பதில் சொன்னாள்.

—**ரவீந்திரர்.**

December '53 Regd. No. M. 4975

மஞ்சரி

விஜய - மார்கழி

ஊருப உலகமுப		1
கள்ள நாணயக் கும்பல்		3
க்விஸ்		7
இனி வரும் மனித இனம்	ரா. ஸ்ரீ. தேசிகன்	8
முப்பெயர் ஸ்தலம்	பிரஜா மதம்	13
மாடியில் ஏறிய குதிரை		17
உலகின் பலசாலி	ஜான் அவ் லண்டன் வீக்லி	18
பாஞ்சாலி நாடகம்	யுகாந்தர் ஞூல மலர்	22
புத்தக் கைதி பேட்டி	டைம்	25
புரஞ்சனன் கதை		28
வழுக்கைத் தலையர்	ஹைஜியா	33
குடிபுகும் பெண் குருவி	பம்பாய்க் கிரானிக்கிள்	39
ஈட்டிமேல் குதித்தார்	அமிர்த பஜார் பத்திரிகை	41
கார்ட்டூன் கதம்பம்		44
கோரக் கொலை	ஸாமேதி ஸாயிர்	46
குதிரை சவாரி	கிறிஸ்தியன் ஸைன்ஸ் மானிட்டர்	49
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	53
நுரைப் பூச்சி	ரங்காராம் பிள்ளை ஹைஸ்கூல் மகஸீன்	57
குருட்டுப் பிரயாணம்	மனோகர்	60
முழு உணவுப் பழம்	தென்தூது	63
கம்யூனிஸ்ட் வேட்டையாடி		65
பாபு ராவ் பதில் சொல்லுகிறார்	பில்மிண்டியா	72
தீ மீதி ரகஸ்யம்		75
டிக்ஸல் சிங்கம் (சிறு கதை)	வி. வி. போஸீல்	79
வறுமையே வல்லமை	ரவீந்திரர்	3-ஆம் அட்டை